விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka


# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 ஆடி 09 புதன்கிழமை (25.07.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 218

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள
உறவுகளுக்கு துரித
நாடல்கள், பொதிகள் சேவை
உடனுக்குடன் அனுப்ப
நாடுங்கள்
உறவுகளிடமிருந்து
WESTERN UNION மூலம்
அனுப்பிய பணத்தை ஒருசில
நிமிடங்களில் நீங்கள்
பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்
அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

## வட மாகாணத்தில் அமைந்துள்ள
# இராணுவ முகாம்களை அகற்றவே முடியாது!
## ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன திட்டவட்டமாக அறிவிப்பு



(கொழும்பு) வட மாகாணத்தில் அமைந்துள்ள இராணுவ முகாம்களை ஒருபோதும் அகற்ற முடியாது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். மேலும் நாம் தேசிய பாதுகாப்பை வலுப்படுத்தும் வகையில் முப்படைகளையும் வலுவூட்டியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

(23-ம் பக்கம் பார்க்க...)

## விஜயகலாவிடம் நேற்று 3 மணி நேரம் விசாரணை

(யாழ்ப்பாணம்)

முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனிடம் நேற்று மூன்று மணி நேரம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவரின் வீட்டில் வைத்து குற்றத் தடுப்பு பொலிஸ் பிரிவினர் 23☛

## 1990 இலக்க அவசர அம்புலன்ஸ் சேவை நேற்று ஆரம்பித்து வைப்பு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி பிரதேசத்திற்கென இந்திய அரசினால் வழங்கப்பட்ட அவசர நோயாளர் காவு வண்டி நேற்றுத் தொடக்கம் தனது சேவையை ஆரம்பித்துள்ளது.

மந்துவில் பகுதியில் மூதாட்டியொருவருக்கு நெஞ்சுவலி ஏற்படவே குடும்பத்தினர் 1990 23☛

## பெண்கள் பெற்றுக்கொண்ட நுண்கடன்களை இரத்து செய்ய
### அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

வரட்சியால் பாதிக்கப்பட்ட 12 மாவட்டங்களின் பெண்கள் பெற்றுக்கொண்ட நுண்கடன்களில் ஒரு இலட்சம் ரூபாயுக்கும் குறைவான கடன்களை இரத்து செய்ய அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, மன்னார், குருநாகல், 24☛

## எனது ஆட்சியில் வடக்கில் ஊடக சுதந்திரம் இருந்தது
### முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ



(கொழும்பு)

தனது ஆட்சிக்காலத்தில் ஊடகவியலாளர்களின் சுதந்திரம் பறிக்கப்பட்டிருந்தால், அதற்கு அன்றைய அமைச்சரவையும் பொறுப்புக்கூற வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். 23☛

## காங்கேசன்துறையில் இந்திய மீனவர்கள்
### 7 பேர் கடற்படையால் கைது

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட 7 இந்திய மீனவர்கள் கடற்படையால் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

இரண்டு இயந்திரப் படகுகளில் வந்த அவர்கள் காங்கேசன்துறை கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த போது கைது 24☛

## 20 மில்லியன் பெறுமதியான
### தங்கத்துடன் இருவர் கைது

(கொழும்பு)

20 மில்லியன் ரூபாய் பெறுமதியான தங்கத்துடன் இருவரை இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

கற்பிட்டி, கிம்புல்பொக்க கடற்கரை பகுதியில் வைத்து குறித்த இருவரும் கைது செய்யப் 24☛

## செம்மணியில் மீட்கப்பட்டது மனித உடலின் எச்சங்களே

(யாழ்ப்பாணம்)

யாழ். செம்மணி வீதி நாயன்மார்கட்டு பகுதியில் நேற்று மேற்கொள்ளப்பட்ட அகழ்வின் போது மனித உடலின் ஒரு பகுதி எலும்புக்கூட்டு எச்சங்களே மீட்கப்பட்டுள்ளன. அவை அடையாளம் காண முடியாத அளவில் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணம் செம்மணி வீதி நாயன்மார்கட்டு பகுதியில் நீர்த்தாங்கி அமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகிறது. கடந்த வெள்ளிக்கிழமை அப்பகுதியில் நிலத்தை அகழ்ந்த போது மனித எலும்புக்கூட்டு எச்சங்கள் காணப்பட்டுள்ளது.

உடனடியாக கிராம சேவையாளர் ஊடாக பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து பொலிஸார் நீதிமன்றுக்கு அறிக்கை 23☛

### பலாலி விமானத்தள காணி பறிமுதல்
## வானூர்தி திணைக்கள பணிப்பாளருக்கு வடக்கு முதலமைச்சர் அவசர கடிதம்

(யாழ்ப்பாணம்)

பலாலி விமான நிலையம் அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கும் நிலையில், வடமாகாண முதலமைச்சர், கொழும்பு சிவில் வானூர்தி இயக்கியல் திணைக்களப் பணிப்பாளருக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

அண்மையில் பிரதமர் யாழ் வந்த போது விமான நிலையத்திற்கு காணி கையகப்படுத்துவது சம்பந்தமாக உரிய நிறுவனத்துடன் பேசித் தீர்க்குமாறு கூறியதன் காரணத்தினால் தான் மேற்படிகடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அந்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, 23☛

## சிறுபான்மை இனங்களின் உரிமைக்கு அரசியலமைப்பில் மாற்றம் தேவை : சந்திரிகா



(கொழும்பு)

நாட்டின் சிறுபான்மை இனங்களின் உரிமைகளை அவர்களுக்கு சட்டரீதியாக பெற்றுக்கொடுக்க அரசியலமைப்புத் திருத்தமோ அல்லது புதிய அரசியலமைப்புச் சட்டமோ கொண்டு வரப்படுவது அவசியம் என முன்னாள் 23☛

### வாள், இரும்புக் கம்பிகள், பொல்லுகளுடன்
## குழு மோதலுக்கு தயாராக இருந்த 13 இளைஞர்கள் நேற்றுக் கைது
### எழுதுமட்டுவாளில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி பகுதியில் குழு மோதலுக்கு சென்ற 13 இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என பளை பொலிஸார் தெரிவித்தனர்.

சாவகச்சேரி பகுதியை சேர்ந்த சில இளைஞர்கள் தம்மை "ஐ" குழு எனவும் "சாவா" குழு எனவும் அடையாளப்படுத்தி கொண்டு வாள் வெட்டு சம்பவங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தக் குழுவினர் நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமை மாலை 4 மணியளவில் எழுதுமட்டுவாள் பகுதியில் குழு மோதல் 23☛

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

வலம்புரி 021 221 7603,
விளம்பரத் தொடர்புகளுக்கு 021 567 1532

ஈர விழிகளுடன் கடந்து சென்ற
ஓராண்டு நினைவுகள் சுமந்து



அமரர் நேசன் கஜிதா

(கிளி/அக்கராயன் மகா வித்தியாலயம்-தரம் 7 மாணவி)



பார் போற்றும் உத்தமியே-எம் செல்வ மகள் வேணம்மா-விழி நீர்
சொரிந்து இன்றுடன் ஓராண்டு-கழிந்ததுவோ
உன் செல்லச் சிரிப்பெங்கே-புன்னகை முகம்
எங்கே மழலைப் பேச்செங்கே-பார்க்க துடிக்கின்றோம்
உன் பாதச்சுவடுகள் நீ ஆடிப்பாடி விளையாடிய முற்றம்
உன்னை தேடுகிறது உன் வருகைக்காய்
நீ ஊஞ்சல் கட்டி ஆடிய மாமரம்-உன் வரவுக்காய்-தேடுது
எம் குலமகளே சிரிப்பழகி சொல்லழகி செயலழகி
வடிவழகி-உன் பாடசாலை தோழிகளுடன் உலாவந்த நாட்களை
மீட்டுப் பார்க்கின்றோம்- உன்னைப் பெற்ற தாய் தந்தை உன்
ஆசைத் தம்பிமார், தங்கை, மாமா, அன்ரா, தாத்தா, அம்மம்மா இருக்க தனியே தூரதேசம்
பறந்த பசுங்கிளியே-அம்மா தவிக்கிறோமடா உனை இழந்து ஆண்டு ஒன்று என்ன
நூறு ஆண்டு சென்றாலும் மறக்க முடியாதம்மா உன்னையிழந்து தவிக்கின்றோம்
மீண்டும் மறு பிறப்பிருந்தால் பிறந்து வா எம் மடியில் தவழ

இல.59, கந்தபுரம்,
கிளிநொச்சி.

-குடும்பத்தினர்
0773210950, 0770367739

# கண்ணீர் அஞ்சலி



நெல்லியடி மருதம் குழுமத்தின் ஸ்தாபகரும் எமது வழிகாட்டியுமாகிய ஐ.சிவநாதன் அவர்களின் பாசமிகு மனைவி

திருமதி **கிருத்திகா சிவநாதன்** அவர்கள்

இறைபதமடைந்த செய்தி கேட்டு மிகுந்த துயர் அடைகின்றோம்.
பிரிவால் துயருற்றிருக்கும் அவர் தம் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன்,
அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல தடங்கன்
புளியடியானை வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நா.தெய்வேந்திரம் (இந்திரா கபே)
உரிமையாளரும் ஊழியர்களும்
(கணேசன் காட்வெயர்-நெல்லியடி)

(சி-3343)

# அரசியல்வாதிகளின் முரண்பாடே வடக்கு அபிவிருத்திக்கு தடை

## ஆளுநர் ரெஜினோல்ட் கூரே

(யாழ்ப்பாணம்)

அரசியல்வாதிகளின் முரண்பாடே வடக்கு அபிவிருத்திக்கு தடையாகவுள்ளது என வடக்கு ஆளுநர் ரெஜினோல்ட் கூரே தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்.முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தில் இடம் பெற்ற பரிசளிப்பு விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேற்படி நிகழ்வு வித்தியாலய அதிபர் ஆர். பசுபதீஸ்வரன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. நிகழ்வில் சிறப்பு விருந்தினராக நல்லூர் கோட்டக்கல்விப் பணிப்பாளர் எப்.எக்ஸ்.அன்ரன் கலந்து கொண்டார்

மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினர் உரையை தமிழ் மொழியில் ஆற்றிய ஆளுநர் அவர்கள் அபிவிருத்தி தொடர்பில் கவனம் செலுத்தும் போது அரசி யல்வாதிகளிடையேயான முரண்நிலைகளும் அபிவிருத்தியின் மந்த நிலைக்கு பெரும் தாக்கம் செலுத்துகின்றன. எனவே அவர்கள் தம்மிடையேயான கருத்துமுரண்பாடுகளை மறந்து அபிவிருத்திக்காக ஒன்றிணைந்து செயற்படவேண்டுமென்று கேட்டுக்கொண்டார் .

மேலும் அபிவிருத்திக்கான மற்றுமொரு தடைக்கல் இங்கே கற்றுப் பட்டம் பெற்ற துறைசார் வல்லுநர்கள், இங்கே உழைத்து பொருளீட்டிய தனவந்தர்கள் இங்கே பணியாற்றவோ அன்றேல் தங்கி வாழவோ விரும்பாமல் வெளியூர்களுக்கோ, வெளிநாடுகளுக்கோ செல்கின்றனர்.

இதனால் அவர்களின் சேவையும் முதலீடும் எம் பிரதேச அபிவிருத்திக்குப் பயன்படாமல் அவர்கள் வாழும் இடங்களிலேயே செறிகின்றன. மன்னார் பிரதேச வைத்தியசாலைகளுக்கு சென்று பார்த்த போது அங்கே வைத்தியர்கள் பற்றாக்குறை காணப்பட்டது. ஆனால் என் ஊராகிய களுத்துறை வைத்தியசாலையில் பணியாற்றும் பெரும்பாலான வைத்தியர்கள் வடமாகாணத்தைச் சேர்ந்தவர்களாகவே காணப்பட்டனர். எனவே இங்கே கற்று தேர்ச்சி பெற்றோரும், பணம்திரட்டியோரும் இங்கேயே தம் சேவை.பணத்தை முதலீடு செய்ய முன் வரவேண்டும் என்றார். (ம)

**விசேட வகுப்புக்கள்**

போட்டிப் பரீட்சைகள், தடைதாண்டல் பரீட்சைகள் அனைத்துக்குமான வகுப்புக்கள் தொடர்ச்சியாக யாழ்.நகரில் நடைபெறுகின்றன.
**தொடர்புகளுக்கு:**
**0766883394**

**வனஜீவராசிகள் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர்**

போட்டிப் பரீட்சைக்கான கருத்தரங்கு
வியாழன், வெள்ளி
பி.ப 2.30-5.30 மணிவரை
**எடிசன் கல்லூரி**
கிளிநொச்சி
0775483470
(சி-3349)

### மண்டைதீவு வேப்பந்திடலில் நாளை தேர்த்திருவிழா

(மண்டைதீவு)

மண்டைதீவு வேப்பந்திடல் ஸ்ரீமுத்துமாரியின் தேர்த்திருவிழா நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு இடம்பெறும். இத் தேர்த்திருவிழாவில் புதிதாக அமைக்கப்பட்ட சித்திரத்தேரில் அம்மன் ஆரோகணித்து தேர்திருவீதி உலாவரும் காட்சி இடம்பெறும். (ம)

## மணமகள் தேவை

1. 79, 8 செவ்வாய் 37 பாவம் கேட்டை, நியூசிலாந்து சிற்றிசன் மணமகனுக்கு உடன் மணமகள் தேவை.
2. 87, 26 பாவம் அச்சுவினி MSC எஞ்சினியர் (சிங்கப்பூர்) மணமகனுக்கு மணமகள் தேவை.
3. 87, 34 பாவம், பூரம் கல்வியமைச்சில் தொழில் புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை.

## மணமகன் தேவை

1. 80, 4 செவ்வாய் அத்தம் சுவிஸ் சிற்றிசன் மணமகளிற்கு சுவிஸ் மணமகன் தேவை.
2. 87, 12 சூரியன் செவ்வாய் 27 பாவம் மிருகசீரிடம் 4 தனியார் நிறுவன ஊழியர் மணமகளிற்கு மணமகன் தேவை.

**துர்க்கா**
**திருமண சேவை**
**0778185978,**
**0750111122**
(5065)

**YARL CITE** Powered by RATNAM FOUNDATION
## CENTRE FOR IT EDUCATION
### Job Skills Development & Training

இளஞ்சிறார்களே! 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை முடிந்ததும் தவணை மூன்றைப் பயனுள்ளதாக்குங்கள்.

1



**English Language & IT Skills Development & Training**
Learn English by developing Listening, Speaking, Reading & Writing Skills Including Vocabulary, Pronuncian & Grammar.
Learn IT by introdusing the Computer Systems, Windows & Its Application.
Word Processing, Spread Sheet Management, Digital Drawing & Painting.
Presentation, Publication and the use of Internet & e -mail.

தகவல் தொழில்நுட்பம் செயன்முறை உட்பட அடிப்படையில் இருந்து மற்றும் ஆங்கிலத்தில் சரளமாக பேச, எழுத, வாசிக்க, மற்றும் கேட்கவும் இலகு வழியில் Grammar, Vocabulary& Pronunciation கற்பிக்கப்படும்.



2

உயர்தரத்தில் கல்வி கற்கும் மாணவர்களே!
பரீட்சைக்குப் பின்பு உங்கள் நேரத்தைப் பயனுள்ளதாக்குங்கள்.

**ICT & Communicative English Language Skill Development & Training**

ICT: Basics of computer systems, OS & Applications.
Word processing, Spread sheet management.
Presentation & Publication.
Internet, e-mail & Social media. &
Introduction to: Desktop Publishing & Graphic Designing
Web Designing & Development.
English: Listening, Speaking, Reading & Writing Skills.
Vocabulary, Pronunciation & Grammar.

தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொடர்பாடல் ஆங்கிலம் ஆகிய கற்கைநெறிகள் செயன்முறைப் பயிற்சியுடன் கூடியதும் NVQ Level 3 இற்கான Syllabus இனை உள்ளடக்கியதும் ஆங்கிலத்தில் NVQ Level 2 இற்கான Syllabus இனை உள்ளடக்கி தேர்ச்சி பெற்ற விரிவுரையாளர்களினால் கற்பிக்கப்படும்.

(சி-3342)

மேலதிக விபரங்களுக்கு எம்முடன் தொடர்பு கொள்ளவும்.
**PHONE: 0212214099 MOBILE: 0772928853, 0702583250.**

**#125 Main Street, Jaffna. (IOFM Buildings 2nd Floor, near to Courts Complex)**

## இலங்கையில் இனப்படுகொலை

# கறுப்பு ஜூலை நினைவேந்தலில் தமிழர்களுடன் இணைகின்றேன்

## கனேடியப் பிரதமர் ட்ரூடோ இரங்கல்



(ரொரன்ரோ)

இலங்கையில் தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்பட்ட கறுப்பு ஜூலையின் 35 ஆவது ஆண்டு நிறைவைக் கடைப்பிடிக்கும், கனேடிய மற்றும் உலகெங்கும் வாழும் தமிழர்களுடன் இணைந்து கொள்வதாக, கனேடியப் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

கறுப்பு ஜூலை நினைவேந்தலை முன்னிட்டு அவர் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில்,

"1983ஆம் ஆண்டு தமிழர்களுக்கு எதிரான படுகொலைகளில் பாதிக்கப்பட்டவர்களை இந்த நாளில், நாம் நினைவு கூருகிறோம். அப்போது ஆயிரக்கணக்கான உயிர்கள் பலியெடுக்கப்பட்டன. பலர் தமது வீடுகளை விட்டு இடம் பெயர்ந்தனர்.

கறுப்பு ஜூலையில் தமது குடும்பங்கள் மற்றும் நண்பர்களை இழந்தவர்களை நினைவு கூரும், தமிழ் கனேடியர்கள் மற்றும் உலகெங்கும் உள்ள தமிழ்ச் சமூகத்துடன், நாமும் இணைந்து கொள்கிறோம்.

கறுப்பு ஜூலை ஒரு அழிவு வாரமாக இருந்தது. கொடூரமான இந்த வன்முறைகளின் தொடர்ச்சியாக, பல பத்தாண்டுகளாக பதற்றம் அதிகரித்தது.

ஆயுத மோதல்களின் விளைவாக பல பத்தாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர். பலரின் வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

இலங்கை வன்முறைகளுக்குப் பதிலளிக்கும் வகையில், 1983 செப்டெம்பரில், கனடா ஒரு சிறப்பு நடவடிக்கை திட்டத்தை நடைமுறைப்படுத்தியது.

அதன் மூலம், 1800 இற்கும் அதிகமான தமிழர்களுக்கு கனடாவில், பாதுகாப்பும் சுதந்திரமும் கிடைத்தது. எமது நாட்டிற்கு மிகுந்த பங்களிப்பை வழங்குவதற்காக அவர்களுக்கு நன்றி.

2009இல் உள்நாட்டுப் போர் முடிவடைந்த போதும், நல்லிணக்கச் செயல் முறைகள் இன்னமும் நடந்து கொண்டிருக்கின்றன.

நிலையான அமைதி மற்றும் போரினால் பாதிக்கப்பட்டவர்களின் நம்பிக்கையை பெற்ற அர்த்தமுள்ள பொறுப்புக்கூறல் பொறிமுறை உள்ளிட்ட நல்லிணக்கத்தை ஊக்குவிப்பதற்காக, இலங்கை அரசாங்கத்துடனும் சிவில் சமூகத்துடனும் கனடா நெருக்கமாக பணியாற்றுகிறது.

கறுப்பு ஜூலையில் தமது அன்புக்குரியவர்களை இழந்தவர்களுக்கு, கனேடிய அரசாங்கத்தின் சார்பில் நான் ஆழ்ந்த வருத்தத்தை பகிர்ந்து கொள்கிறேன்.

அத்துடன், பொறுப்புக்கூறல், அர்த்தமுள்ள நல்லிணக்கம், நிலையான அமைதி, செழிப்பு என்பனவற்றை உள்ளடக்கிய எதிர்காலத்தை நம்பிக்கையோடு பார்த்திருக்கிறோம்" என்று ட்ரூடோ மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# சுதந்திரத்தை தவறாக பயன்படுத்திவிட்டு கண்ணீர் சிந்த வேண்டாம் - ஜனாதிபதி

### 'மகிந்தவிடமிருந்து பிரிய மொரகஹகந்த திட்டமும் ஒரு காரணம்'

(கொழும்பு)

நல்லாட்சியில் வழங்கப்பட்டுள்ள ஊடக சுதந்திரத்தையும் ஜனநாயகத்தையும் தவறாக பயன்படுத்திவிட்டு பிறகு கண்ணீர் சிந்த வேண்டாமென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிவுறுத்தியுள்ளார்.

மக்களுக்கு சரியான தகவல்களை வழங்காத ஊடக நிறுவனங்களிடம் தாம் இந்தக் கோரிக்கையை முன்வைப்பதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

மொரகஹகந்த திட்டத்தின் கீழ் களுகங்கைக்கு நீர்நிரப்பும் மங்கல நிகழ்வு நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது. இந்நிகழ்வில் உரையாற்றிய போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசாங்கத்தின் சிறந்த திட்டங்களை மக்கள் மத்தியில் கொண்டுசெல்லாமல், அரசாங்கத்தைத் தாக்கும் வகையில் சில ஊடக நிறுவனங்கள் செயற்படுவதாக அரசாங்கத்திற்கு சாதகமான கருத்துக்களை வெளியிடுமாறு கூறவில்லை. உண்மையை வெளிப்படுத்துமாறே கூறுகின்றேன் என ஜனாதிபதி தெரிவித்தார்.



இதேவேளை, தாம் அமைச்சராக இருந்த காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட மொரகஹகந்த திட்டத்திற்கு பெயர் போட்டுக்கொள்ள கடந்த ஆட்சியாளர்கள் முனைவதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். ஆனால், கடந்த ஆட்சிக்காலத்தில் இத்திட்டத்திற்கு எவ்வித நிதியையும் ஒதுக்காமல் கிடப்பில் போட்டதாகவும், கடந்த ஆட்சியாளர்களிடமிருந்து பிரிந்து வருவதற்கு இதுவும் ஒரு காரணம் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். (இ-7)

# மின்சாரத்தில் இயங்கும் ஆட்டோ தயாரிக்க திட்டம்

(கொழும்பு)

2020 ஆம் ஆண்டின் நடுப்பகுதியளவில் நாட்டில் தயாரிக்கப்படும் மின்சார ஆட்டோ சந்தையில் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்குமென நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

'நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்ற மின்சார ஆட்டோ வாகன அறிமுக நிகழ்வில் அமைச்சர் மங்கள சமரவீர இந்த விடயத்தை தெரிவித்தார்.

ஜப்பான் போன்ற நாடுகளுக்கு மின்சார ஆட்டோ வாகனத்தை ஏற்றுமதி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரி வித்தார்.

புதிய கொள்கையின் கீழ் இந்தத் தொழிற்சாலை அமைக்கப்படுமெனவும், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு ஆட்டோ விசேட பங்களிப்பை வழங்குவதாகவும் தெரிவித்த அவர், இந்த தொழிற்றுறையில் ஈடுபட்டுள்ளவர்களை வலுவூட்டுவது அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும் எனவும் தெரிவித்தார்.



குறிப்பாக சுற்றுலாத் துறைக்கான முறையான வேலைத்திட்டத்தின் கீழ் ஆட்டோக்களைப் பயன்படுத்த எதிர்பார்க்கப்பட்டுள்ளது எனவும் அமைச் சர் மங்கள சமரவீர மேலும் தெரிவித்தார். (இ-7)

# தவணைப் பரீட்சை பெறுபேறுகளை விடுமுறைக்கு முன்னர் வழங்குங்கள்

### அதிபர்களுக்கு கல்வியமைச்சின் செயலர் அறிவிப்பு

(கொழும்பு)

தவணைப் பரீட்சைகள் நடத்தப்பட்ட பின்னர் சம்பந்தப்பட்ட பாடசாலைகளின் தவணை விடுமுறைக்கு முன்னர் அதன் பெறுபேறுகளை மாணவர்களுக்கு வழங்குமாறு கல்வி அமைச்சின் செயலாளர் சுனில் ஹெட்டியாராச்சி அனைத்து அதிபர்களுக்கும் மாகாண கல்விச் செயலாளர்களுக்கும் அறிவித்துள்ளார்.

பாடசாலை தவணைப் பரீட்சை முடிவடைந்த பின்னர் சம்பந்தப்பட்ட பெறுபேறுகளை பாடசாலை விடுமுறைக்கு பின்னர் வழங்குதல், தாமதம் ஏற்படுவதனால் மாணவர்களின் கல்வியாற்றலையும் முன்னேற்றத்தையும் மதிப்பீடு செய்வதற்கு பெற்றோர்களால் முடியாதுள்ளது.

மாணவர்களும் தமது தரத்தை புரிந்துகொள்ள முடியாமைக்கு இது காரணமாக அமைந்துள்ளது.

மாணவர்களின் முன்னேற்ற அறிக்கை போன்று மாணவர்களின் ஆற்றல் தொடர்பான அறிக்கை முதலானவை அனைத்துப் பாடசாலைகளிலும் பாடசாலை தவணை முடிவடையும் தினத்தில் இருந்து ஒரு மாத காலத்திற்கு முன்னதாக கையளிக்க நடவடிக்கை எடுக்குமாறு கல்வி அமைச்சின் செயலாளர் ஆலோசனை வழங்கியுள்ளார். (இ-7)



# சஜின்வாஸ், பிரியத் பந்து மீதான விசாரணை அறிக்கைகள் மாயம்

(கொழும்பு)

கடந்த ஆட்சிக்காலத்தில் ராஜபக்ஷ குடும்பத்தினருக்கு நெருக்கமாக இருந்து வந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்த்தன மற்றும் துறைமுக அதிகார சபையின் முன்னாள் தலைவர் பிரியத் பந்து ஆகியோர் சம்பந்தமாக குற்றப் புலனாய்வு திணைக்களம் நடத்திய ஊழல், மோசடிகள் தொடர்பான விசாரணை அறிக்கைகள், சட்டமா அதிபர் திணைக்களத்திடம் கையளிக்கப்பட்ட பின்னர் காணாமல் போயுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இவர்கள் சம்பந்தமாக விசாரணைகளை நடத்திய குற்றப் புலனாய்வுத் திணைக்களம், கடந்த மார்ச் மாதம் விசாரணைகளை நிறைவு செய்து, அடுத்த கட்ட சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக விசாரணை அறிக்கைகளை சட்டமா அதிபர் திணைக்களத்திடம் கையளித்துள்ளது.

எனினும் இந்த வழக்கு அறிக்கைகள் சம்பந்தமாக சட்டமா அதிபர் திணைக்களம் அமைதியாக இருந்து வரும் நிலையில், ஜனாதிபதி இந்த வழக்கு குறித்து விசாரித்துள்ளார்.

சஜின் வாஸ் மற்றும் பிரியத் பந்து ஆகியோருக்கு எதிராக வழக்கு தொடர்வதை ஏன் தாமதப்படுத்தி வருகின்றீர்கள் என ஜனாதிபதி வினவியுள்ளார். இதன் போதே விசாரணை அறிக்கைகள் காணாமற் போனமை தொடர்பாக தெரியவந்துள்ளது. (இ-7)

# மந்தனா 'புயல்' வெற்றி



மந்தனா விளாசல் கைகொடுக்க வெஸ்டர்ன் ஸ்டோர்ம் ('புயல்') அணி 7 விக்கெட்டுக்களால் யோர்க் ஷயர் டயமண்ட் அணியை வீழ்த்தியது.

இங்கிலாந்தில் பெண்களுக்கான சுப்பர் லீக் 'ரி20' தொடர் நடக்கிறது.

இதன் லீக் போட்டியில் வெஸ்டேர்ன் ஸ்டோர்ம், யோர்க்ஷயர் டயமண்ட் அணிகள் மோதின.

இந்தியாவின் ஸ்மிருதி மந்தனா, வெஸ்டேர்ன் ஸ்டோர்ம் அணிக்காக அறிமுகம் ஆனார்.

முதலில் துடுப்பெடுத்தாடிய டயமண்ட் அணிக்கு அணித் தலைவி வின்பீல்ட் 41 ஓட்டங்கள் எடுத்தார்.

20 ஓவர்களில் யோர்க்ஷயர் அணி 5 விக்கெட்டுக்களை இழந்து 162 ஓட்டங்களை எடுத்தது. கிம்மின்ஸ் (55), புரூக்ஸ் (11) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

**மந்தனா கலக்கல்**

பதிலுக்கு துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய ஸ்டோர்ம் அணிக்கு பிரைஸ்ட், முதல் பந்தில் 'டக்' அவுட்டாகி அதிர்ச்சி கொடுத்தார். மந்தனா - அணித் தலைவி கேதர் நைட் இணைந்து புயல் வேகத்தில் ஓட்டங்கள் சேர்த்தனர். மந்தனா 20 பந்துகளில் 48 ஓட்டங்கள் விளாசினார். 62 பந்துகளில் 97 ஓட்டங்கள் எடுத்த கேதர் நைட் சதம் அடிக்கும் வாய்ப்பை இழந்தார்.

இறுதியில் ஸ்டோர்ம் அணி 15.3 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை (166) 3 விக்கெட்டுக்களால் அடைந்தது.

## கோல்காப்பாளர் கொலை




ஆர்ஜென்ரீன கால் பந்து, கோல்காப்பாளர் பகண்டோ எஸ்பிண்டா (வயது-25), குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

ஆர்ஜென்ரீனா கழக கால்பந்தில் ரிவர் பிளேட் யூத் அணிக்காக விளையாடியவர் கோல் காப்பாளர் பகண்டோ எஸ்பிண்டா. கடந்த மூன்று ஆண்டுகளாக அல்மாக்ரோ அணிக்காக விளையாடினார். ஆர்ஜென்ரீனா அணிக்காக 'பி' அளவிலான போட்டிகளில் பங்கேற்றார்.

சம்பவத்தன்று காலை 6.30 மணிக்கு பாரில் இருந்து வெளியே வந்தார் எஸ்பிண்டா. அப்போது சக வீரர் ஓவியடோ மற்றும் சிலர் சேர்ந்து அவருடன் தகராறு செய்ய கைகலப்பு ஏற்பட்டது. திடீரென ஒருவர் கத்தியை எடுத்து எஸ்பிண்டா தொண்டையை அறுக்க, சம்பவ இடத்திலேயே அவர் மரணம் அடைந்தார். இதற்கான காரணம் தெரியவில்லை. ஓவியடோ மற்றும் ஒருவரை கைது செய்து பொலிஸார் விசாரித்து வருகின்றனர்.

# தமிம் இக்பால் சதம்

# பங்களாதேஷ் வெற்றி



மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான முதலாவது ஒருநாள் போட்டியில் அசத்திய பங்களாதேஷ் அணி 48 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. அபாரமாக ஆடிய தமிம் இக்பால் சதம் கடந்தார்.

மேற்கிந்தியத் தீவுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பங்களாதேஷ் அணி, அங்கு மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது.

இத்தொடரின் முதல் ஒரு நாள் போட்டி கயானாவில் நடந்தது.

**தமிம் சதம்**

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணிக்கு அனாமுல் ஹக் (0) ஏமாற்றினார். பின் இணைந்த தமிம் இக்பால், சகிப் அல் ஹசன் ஜோடி ஓட்ட மழை பொழிந்தது. பொறுப்பாக ஆடிய சகிப் அரைச் சதமடித்தார்.

மறுமுனையில் அசத்திய தமிம் இக்பால் சதம் கடந்தார். இரண்டாவது விக்கெட்டுக்கு 207 ஓட்டங்கள் சேர்த்த போது சகிப் (97) சதமடிக்கும் வாய்ப்பை தவறவிட்டார். சபிர் ரஹ்மான் (3) நிலைக்கவில்லை. முஷ்பிகுர் ரஹிம் (30) ஓரளவு கைகொடுத்தார்.

50 ஓவர்கள் நிறைவில், பங்களாதேஷ் அணி 4 விக்கெட்டுக்களை இழந்து 279 ஓட்டங்கள் எடுத்தது.

தமிம் இக்பால் (130), மகமதுல்லா (4) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

**கெய்ல் ஆறுதல்**

பின் களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு ஹெட்மியர் (52), கிறிஸ் கெய்ல் (40) நம்பிக்கை அளித்தனர். லீவிஸ் (17), ஹோப் (6), மொஹமட் (10), அணித் தலைவர் ஹோல்டர் (17) உள்ளிட்டோர் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.

மேற்கிந்தியத் தீவுகள் அணி 50 ஓவர்களில், 9 விக்கெட்டுக்களை இழந்து 231 ஓட்டங்கள் மட்டும் எடுத்து 48 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

தேவேந்திர பிஷூ (29), அல்சாரி ஜோசப் (29) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் பங்களாதேஷ் சார்பில் மொர்டசா 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

**207 ஓட்டங்கள்**

தமிம் இக்பால், சகிப் அல் ஹசன் ஜோடி 207 ஓட்டங்களை 2ஆவது விக்கெட் இணைப்பாட்டமாகப் பகிர்ந்தது.

இதன் மூலம் ஒருநாள் போட்டி அரங்கில் 2ஆவது விக்கெட்டுக்காக அதிக ஓட்டங்கள் சேர்த்த பங்களாதேஷ் ஜோடியானது.

இதற்கு முன், 2010 ல் பாகிஸ்தானுக்கு எதிராக தம்புளவில் நடந்த போட்டியில் பங்களாதேஷின் இம்ருல் கெய்ஸ், ஜுனாய்ட் சித்திக் ஜோடி 2வது விக்கெட்டுக்காக 160 ஓட்டங்களை சேர்த்திருந்தது சாதனையாக இருந்தது.

**8**

ஒருநாள் போட்டி அரங்கில் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராக பங்களாதேஷ் அணி 8ஆவது வெற்றியை பதிவு செய்தது.

இதுவரை இவ்விரு அணிகள் 29 போட்டிகளில் மோதின. இதில் மேற்கிந்தியத் தீவுகள் 19, பங்களாதேஷ் 8ல் வென்றன. இரண்டு போட்டிகளுக்கு முடிவு இல்லை.

## இளம் இந்தியா அசத்தல்



இலங்கை அணிக்கு எதிரான அதிகாரபூர்வமற்ற இரண்டாவது டெஸ்டில் 19 வயதுக்குட்பட்டோருக்கான இந்திய அணி சிறப்பான ஆரம்பத்தை கண்டுள்ளது.

இலங்கை - இந்திய 19 வயதுக்குட்பட்டோருக்கான அணிகள் மோதும் இரண்டு போட்டிகள் கொண்ட அதிகாரபூர்வமற்ற டெஸ்ட் தொடர் இலங்கை மண்ணில் நடக்கிறது.

முதல் போட்டியில் இந்திய அணி வென்றிருந்த நிலையில், இரண்டாவது போட்டி அம்பாந்தோட்டையில் நேற்று தொடங்கியது.

நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணி முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.

இந்திய அணிக்கு அணித் தலைவர் அனுஜ் ரவாத் (11) ஏமாற்றினார். அதர்வா டைடே, பவான் ஷா இணைந்து அசத்தினர். எதிரணி பந்துவீச்சை விளாசிய இருவரும் சதம் கடந்தனர். அதர்வா 177 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். தேவ்தத் (6) ஆர்யன் (41) ரன்-அவுட்டாகினர்.

இந்நிலையில் நேற்றைய முதல் நாள் ஆட்ட நேர நிறைவில், இந்திய அணி முதல் இன்னிங்ஸில் 4 விக்கெட்டுக்களை இழந்து 428 ஓட்டங்களை எடுத்திருந்தது.

பவான் (177), நேகல் வதேரா (5) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

# பயிற்சியில் சாதிக்குமா இந்தியா



இந்தியா - எசக்ஸ் அணிகள் மோதும் மூன்று நாள் பயிற்சி போட்டி இன்று இங்கிலாந்தில் ஆரம்பமாகிறது. இதில் இந்திய வீரர்கள் வெற்றி பெற முயற்சிப்பர் என எதிர்பார்க்கப்படுகிறது.

இங்கிலாந்து சென்றுள்ள இந்திய அணி ஐந்து போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. முதல் டெஸ்ட் வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி பேர்மிங்காமில் ஆரம்பமாகிறது. இதற்கு தயாராகும் வகையில் இந்திய அணி மூன்று நாட்கள் கொண்ட பயிற்சி போட்டியில் எசக்ஸ் அணிக்கு எதிராக களமிறங்குகிறது. அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளர் புவனேஷ்வர் குமார், 'நம்பர் 1' விக்கெட் காப்பாளர் சகா இருவரும் காயத்தால் அவதிப்படுகின்றனர். புதியவரான பும்ராவும் போதிய உடற்தகுதி இல்லாமல் முதல் டெஸ்டில் பங்கேற்கமாட்டார். இதனால் இந்திய அணி முழு பலத்துடன் களமிறங்க முடியாத நிலையில் உள்ளது.

**தீவிர பயிற்சி**

இருப்பினும் எசக்ஸ் அணிக்கு எதிராக சிறப்பாக செயற்பட தேவையான பயிற்சியில் இந்திய வீரர்கள் ஈடுபட்டனர். அணித் தலைவர் ஹோலி, லோகேஷ் ராகுல் வலைப் பயிற்சியில் துடுப்பாட்டம் செய்ய, 'ரி20', ஒருநாள் தொடரில் பங்கேற்காத 'சீனியர்' சுழற்பந்து வீச்சாளர் அஷ்வின், ஜடேஜா இவர்களுக்கு பந்துவீச்சு செய்து உதவினர். இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர்கள் உமேஷ் யாதவ், இஷாந்த் சர்மா, பும்ரா என மூவரும் 'ரிலாக்சாக' காணப்பட்டனர். விக்கெட் காப்பாளரான தினேஷ் கார்த்திக் பயிற்சியில் ஈடுபட்டார். இதனால் ரிஷாப் பண்டுக்கு முன்னதாக, முதல் டெஸ்டில் தினேஷ் கார்த்திக் களமிறங்குவது உறுதி எனத் தெரிகிறது.

**எத்தனை 'சுழல்'**

இன்று தொடங்கும் பயிற்சிப் போட்டி மூன்று நாட்கள் நடக்கும். இதில் இந்திய அணியில் உள்ள 18 பேரில் பெரும்பாலான வீரர்கள் பங்கேற்பர். இதனால் அஷ்வின், ஜடேஜா, இளம் வீரர் குல்தீப் யாதவ் என மூன்று பேரும் பந்தை சுழற்ற காத்திருக்கின்றனர்.

எசக்ஸ் அணிக்கு எதிரான பயிற்சிப் போட்டி நான்கு நாட்கள் நடக்க இருந்தது. ஆனால் எசக்ஸ் ஆடுகளம், மைதானம் மோசமாக உள்ளது. இதனால் பேர்மிங்காமில் கூடுதல் நாட்கள் பயிற்சியில் ஈடுபட வேண்டும் என தெரிவித்த இந்திய அணி நிர்வாகம், பயிற்சிப் போட்டிக்கு மூன்று நாட்கள் மட்டும் போதும் என கூறிவிட்டது.

# 01 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு

22

08


1947

உதிர்வு

05

08

2017



அமரர்

## சிற்றம்பலம் மகாலிங்கம்

திதி: திரயோதசி

ஆலமரம் ஒன்று அடியோடு சாய்ந்துவிட
விழுதுகள் நாமிங்கு விருட்சமின்றித் தவிக்கின்றோம்
காலம் கனியும் வேளை காலன் உமை அழைத்திட்டான்
கண்ணில் நீர் பெருக கலங்கித் தவிக்கின்றோம்
என்று வருவீர் எம் கண்ணின் நீர் துடைக்க
தோற்றுவிட்டோம் உம் அன்பின் முன்
வருவீரோ மறுபிறப்பெடுத்து
எம் மனக்குறை தீர்த்திட...

(C-8933)

கரணவாய் கிழக்கு,
கரவெட்டி.

- குடும்பத்தினர்

(5057

# வடமராட்சி கல்வி வலயத்தில் இடம்பெற்ற கல்வி அமைச்சின் நடமாடும் சேவையில் 62 முறைப்பாடுகளுக்கும் உடனடித் தீர்வு




(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கல்வி அமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரனின் வழிகாட்டுதலிலும் நேரடி பங்கேற்புடனும் வடக்கு மாகாண கல்வி அமைச்சினால் வட மாகாண பாடசாலையில் இந்த ஆண்டு க.பொ.த.சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்ற இருக்கும் மாணவர்களின் பெறுபேறுகளை அதிகரிப்பதற்காக பாடசாலை அதிபர்களுக்கான விசேட செயலமர்வும் ஆசிரியர்களின் நிர்வாக ரீதியிலான பிரச்சினைகளை அவர்களின் இடத்திலேயே தீர்த்து வைப்பதற்குமான மாபெரும் நடமாடும் சேவை நேற்று முன்தினம் வடமராட்சி கல்வி வலயத்தில் இடம்பெற்றது.

முன்னதாக வடமராட்சி கல்வி வலயத்தில் 2018 ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரண தர பரீட்சைக்குத் தோற்ற இருக்கும் ஒவ்வொரு மாணவர்களையும் தனித்தனியாக ஆய்வு செய்து அவர்கள் எந்தெந்த பாடங்களில் குறைவான மதிப்பெண்களை பெறுவதற்கான வாய்புக்கள் இருக்கின்றன என்பது பற்றியும், மாணவர்கள் உயர்தரத்திற்கு செல்லும் வாய்ப்பை அதிகரிக்கவும் பாடசாலை அதிபர்களுக்கு புள்ளி விபரத்தகவல்



களுடன் விளக்கமளிக்கும் செயலமர்வு காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணிவரை இடம்பெற்றது.

தொடர்ந்து பிற்பகல் 2 மணிக்கு வடமராட்சி கல்வி வலயத்தில் கடமையாற்றும் அதிபர்கள், ஆசிரியர்கள், கல்வி சாரா ஊழியர்களின் நிர்வாக ரீதியிலான குறைகளை நிவர்த்தி செய்யும் நடமாடும் சேவை இடம்பெற்றது. இந்த நடமாடும் சேவைக்கு 62 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்று அவை அனைத்தும் உடனடியாக தீர்த்து வைக்கப்பட்டுள்ளது.

அதிபர்களுக்கான செயலமர்விலும்,நடமாடும் சேவையிலும் வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரன், கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், மாகாண கல்விப்பணிப்பாளர் செ.உதயகுமார்,பிரதி மாகாண கல்விப்பணிப்பாளர்,கல்வி அமைச்சரின் பிரத்தியேகச் செயலாளர் ந.அனந்தராஜ் மற்றும் மாகாண கல்வித் திணைக்கள அதிகாரிகள்,கல்வி அமைச்சின் அதிகாரிகள், வடமராட்சி வலயக்கல்வி அலுவலக உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-7)

# விருது,கலைத்துறை சான்றிதழுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பிரதேச கலாசாரப் பேரவையால் வழங்கப்படுகின்ற விருதான "யாழ். ரத்னா விருது- 2018" இற்கு இலக்கியம் மற்றும் எழுத்துத்துறை, நாடகம், இசைநாடகம், நாட்டுக்கூத்து, நடனம், சங்கீதம், இசை, (வயலின், வீணை), ஓவியம், சிற்பம், உலோகக்கலை, ஏனையவை ஆகிய துறைகளில் கலைப்பணியாற்றிய எழுத்தாளர்கள் மற்றும் கலைஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

60 வயது பூர்த்தியடைந்த இதுவரை யாழ். ரத்னா விருதினை பெற்றுக் கொள்ளாத யாழ்ப்பாணப் பிரதேச செயலர் பிரிவினை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட எழுத்தாளர்கள். கலைஞர்கள் விண்ணப்பிக்க முடியும்.

அத்துடன், கலைத்துறை சான்றிதழுக்கான விண்ணப்பங்களும் மேற்படி துறைகளில் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பதாரி 18 வயதிற்கு மேற்பட்டவராகவும் 40 வயதிற்குட்பட்டவராகவும் இருப்பதுடன் யாழ்ப்பாணப் பிரதேச செயலர் பிரிவினை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட எழுத்தாளர்கள் மற்றும் கலைஞர்கள் விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பப்படிவங்களை யாழ்ப்பாணப் பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் பெற்று பூரணப்படுத்திய விண்ணப்பத்துடன் உரிய கலைத்துறையினை சான்றுபடுத்தும் ஆவணப்பிரதிகளுடன் 20.08.2018 இற்கு முன்னர் விண்ணப்பிக்க முடியுமென பிரதேச செயலரும் கலாசாரப் பேரவைத் தலைவருமான பொ.தயானந்தன் அறிவித்துள்ளார். (இ)

## இறுதிச் சந்தர்ப்பமாக இன்று
# பட்டதாரிகளுக்கு நேர்முகத் தேர்வு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்குட்பட்ட நிரந்தர வதிவிடமாகக்கொண்ட வேலையற்ற பட்டதாரிகளுக்கான நேர்முகத் தேர்வு 23.07.2018 ஆம்திகதிதொடக்கம்பிரதேசசெயலகத்தில்நடைபெற்றுக்கொண்டிருப்பதால் இந்நேர் முகத் தேர்வுக்கு விண்ணப்பித்து இதுவரையும் சமுகம் கொடுக்காத விண்ணப்பதாரிகளுக்கான இறுதிச் சந்தர்ப்பமாக இன்று 25.07.2018 ஆம் திகதி நடைபெறும் நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர் என பருத்தித்துறை பிரதேசசெயலாளர்ஆழ்வாப்பிள்ளை சிறி அறிவித்துள்ளார். (இ)

# கவிமாலை சூடு யாகப்பா!


திரைகடலும் தாலாட்டி ஆர்ப்பரித்து
திசையெங்கும் எழில் கொஞ்சிப் பொன்கொழிக்கும்
குருநகரின் கோயிலிலே பதியமர்ந்த
குலமகனே! சந்தியோகு! புனிதா உந்தன்
அருள்வேண்டி மலர்ப்பாதம் தேடி வந்தோம்!
இடர்சூழ்ந்து போயிருக்கும் எளியோர் வாழ்வு
குருத்தெறிந்து கிளையோடி மதாளித்திடவே
கருணை மகன் யேசுவிடம் பரிந்துரைப்பாய்!

பூங்கமல முகுசலோமை மகனே! பேயொடு
போராடும் படையாளி! எம்மை வருத்தும்
தீங்கனைத்தும் வேரறுக்கும் தளபதியும் நீ!
தேவமைந்தன் அன்புசெய்த சீடனும் நீரே!
ஏங்கியழும் உறவுகளின் துயரம் துடைத்து
எங்கள் தாய் மண்ணோடு தொழிலும் சிறந்து
ஓங்கிடவே பொன்கவிப்பூ உன்காலில் வைத்தோம்!
ஒருவரமே விடியலாகத் தாரும் ஐயா!

கவிஞர் மு.சிங்கராயர்

இன்று நிகழவிருக்கும் யாழ். குருநகர் புனித யாகப்பர் ஆலயப் பெருவிழாவை முன்னிட்டு இக்கவிதை வெளியிடப்படுகின்றது.

# வாய்க்கால் நிர்மாணப் பணிகள் நிறைவு

(கரணவாய்)

பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்குட்பட்ட ஜே/397 கிராம உத்தியோகத்தர் பிரிவிற்குட்பட்ட பனிக்கர் கோவிலடி வெள்ளவாய்க்கால் நிர்மாணப்பணிகள் நிறைவடைந்துள்ளன.

விவசாய பிரதி அமைச்சர் அங்கஜன் இராமநாதன் ஊடாக ஒதுக்கப்பட்ட 15 இலட்சம் ரூபா நிதியிலிருந்து வெள்ளவாய்க்கால் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. சுதந்திரக் கட்சியின் பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினரான பாலரமேஸ் மற்றும் வடமராட்சி கரவெட்டி காரியாலய இணைப்பாளர் இனியவன் ஆகியோர் நிறைவடைந்த வெள்ளவாய்க்கால் பணிகள் தொடர்பாக கள ஆய்வு மேற்கொண்டிருந்தனர். (இ-60)

# இராசி பலன்

**மீனம்:** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், மற்றவர்கள் மத்தியில் உங்களின் மதிப்பும் மரியாதையும் உயரும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**மேடம்:** அச்சுறுத்தல்கள் அகன்று ஆனந்தம் கூடும் நாள், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், வருமானம் திருப்தி தரும்.

**இடபம்:** சுற்றத்தாரை அனுசரித்துச் செல்வது நல்லது, வெளியூர் பயணங்களால் அலைச்சல், சோர்வு ஏற்படலாம், உடல் நலன் பற்றிய கவலை உருவாகி மறையும்.

**மிதுனம்:** விருந்தினர் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.

**கும்பம்:** எடுத்த காரியத்தில் எளிதில் வெற்றி கிடைக்கும், குடும்ப மகிழ்ச்சி கூடும், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும்.

**கடகம்:** பொல்லாதவர்கள் உங்களைவிட்டு விலகுவர், உறவினர் வருகையால் உற்சாகம் பெருகும், பழைய கடன்களை அடைக்க புதிய வழியைக் கையாள்வீர்கள்.

**மகரம்:** குடும்ப ஒற்றுமைக்கு பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது, திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம்.

**சிம்மம்:** பிள்ளைகள் வழியில் பெருமையான சம்பவங்கள் இடம்பெறலாம், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், தாழ்ந்த சுபாவமுண்டு.

**தனுசு:** சவால்களை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், உடல் நலனில் கவனம் தேவை, சோம்பலை விலக்குவது நல்லது, சிக்கனத்தை கடைப்பிடிக்க முற்படுவீர்கள்.

**விருச்சிகம்:** வருங்கால நலன்கருதி சேமிக்க முற்படுவீர்கள், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, தொழில் வளர்ச்சி கூடும் நாள்.

**துலாம்:** நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறும் நாள், உடன் பிறப்புக்கள் வழியில் உற்சாகமான தகவல்கள் வந்து சேரலாம், போசனசுகமுண்டு.

**கன்னி:** விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், குடும்பத்தினர் உங்களின் சொற்களைக் கேட்டு நடக்க முன் வருவர், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**கிரகநிலை:** ராகு, புத, சூரி; சுக்; குரு; சனி, சந்; செவ், கேது

சந்திராஷ்டமம்: கார்த்திகை, ரோகினி

25.07.2018
ஆடி 09, புதன்கிழமை
சூரிய உதயம் காலை 6.01 மணிக்கு
திரயோதசி முன்னிரவு 10.20 மணிவரை
மூலம் முன்னிரவு 8.31 மணிவரை
சுபநேரம் 4.32-6.02 மணிவரை
இராகுகாலம் 12.02-1.32 மணிவரை
பிரதோச விரதம்

வளவன்

# தன்னலமற்ற அதிபருக்கு அஞ்சலி



## அமரர். எஸ். பொன்னம்பலம்

அவர்கள்

(முன்னாள் அதிபர், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி)

நெடிதுயர்ந்த தோற்றம், நேரிய பார்வை
புரிவான பேச்சு, பண்பான நடத்தை,
இந்துக் கல்லூரியின் ஆளுமைகளில்
இவர் தனித்துவமானவர்.
ஒன்பதாம் வகுப்பில் கற்பதற்காய்
வன்னிப்பெருநிலத்திலிருந்து வந்த என்னைப்
பிரதி உபகாரமாக ஏதும் எதிர்பாராது
கல்லூரியில் சேர்த்த கனவான் இவர்.
காலங்கள் கடந்தாலும் உங்கள் நினைவுகள்
எங்கள் மூச்சில் எப்போதும் கலந்திருக்கும்.

கனத்த இதயத்துடன்,
செ.சதீஷ்குமார்,1991 உயர்தரப்பிரிவு,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

(5048)

# மரண அறிவித்தல்

## திருமதி. கிருத்திகா சிவநாதன்

(பணிப்பாளர்,மருதம் ஹாட்வெயார் ஸ்ரோர்)



**மலர்வு: 1962.12.09** **உதிர்வு: 2018.07.23**

கரவெட்டி மத்தியைப் பிறப்பிடமாகவும் இல.108, இராசவள்ளி ஒழுங்கை, வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி.கிருத்திகா சிவநாதன் (பணிப்பாளர், மருதம் ஹாட்வெயார் ஸ்ரோர்) அவர்கள் 23.07.2018 திங்கட்கிழமை அன்று காலமானார். அன்னார் அமரர் கந்தையா நடராஜா (அதிபர் ஞானசாரியர் கல்லூரி) சிவபாக்கியம் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும் திருவாளர் ஐயாத்துரை சிவநாதன் (நிறைவேற்றுப் பணிப்பாளர்) அவர்களின் அன்பு மனைவியும் அமரர்களான ஐயாத்துரை செல்வரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகளும் கிருஸ்சாந்த், ஜெகன்நாத், துவாரகன் ஆகியோரின் அருமைத் தாயாரும், றஜிதா, புஸ்பமீரா ஆகியோரின் அருமை மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 26.07.2018 வியாழக்கிழமை பி.ப.2 மணியளவில் கிரியைகள் "மருதம்" கரவெட்டி மத்தி இல்லத்தில் நடைபெற்று மாலை 4 மணியளவில் கரவெட்டி சோனப்பு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(சி-3341)

கரவெட்டி மத்தி, கரவெட்டி. குடும்பத்தினர்.

# நகரசபையின் சட்டதிட்டங்களுக்கு அமைவான வேலைத்திட்டங்களுக்கு மட்டும் அங்கீகாரம் வழங்கப்படும்

## மன்னார் நகரசபைத் தலைவர் தெரிவிப்பு

(மன்னார்)

மன்னாரில் அமைக்கப்படவுள்ள மன்னார் பொது பேருந்து நிலையத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு அண்மையில் மாலை இடம்பெற்றது. 180 மில்லியன் ரூபாய் நிதியொதுக்கீட்டில் குறித்த வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில் 113 மில்லியன் ரூபாவிற்கான ஒப்பந்தமே கைச்சாத்திடப்பட்டுள்ளதாக மன்னார் நகர சபைத் தலைவர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் தெரிவித்துள்ளார்.



மன்னார் நகர சபையின் 5 ஆவது அமர்வு நேற்று முன்தினம் முற்பகல் 10.30 மணியளவில் மன்னார் நகர சபையின் தலைவர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது தலைமை உரை நிகழ்த்துகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்.

எமது செயற்பாடுகள் அனைத்துமே அபிவிருத்தியையும், மக்களையும் மையப்படுத்தியதாக அமைய வேண்டுமே தவிர சுயநல அரசியல் நோக்குடன் பயணிப்பது உகந்தது இல்லை.

சில வேலைத்திட்டங்கள் மன்னார் நகர சபைக்கு தெரியாமலே இடம்பெற்றுள்ளது.

இனி வரும் காலங்களில் மன்னார் நகர சபைக்கு தெரியாமல் இடம்பெறுகின்ற எவ்வித செயற்பாடுகளுக்கும் அனுமதி வழங்க மாட்டோம்.

நகர சபையின் சட்ட திட்டங்களுக்கு அமைவாக நகர சபையுடன் இணைந்து மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகளுக்கு மட்டுமே நகர சபையின் அங்கீகாரம் வழங்கப்படும்.

நகர சபையின் செயற்பாடுகளுடன் ஒத்துப்போகாத எந்த வேலைத்திட்டங்களும் நகர சபையினால் முன்னெடுக்கப்படமாட்டாது. குறித்த திட்டங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மன்னார் மாவட்ட அபிவிருத்திக்கு என ஒதுக்கப்படுகின்ற நிதி எங்களினூடாகவே நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். மன்னார் நகர சபைக்குட்பட்ட பகுதிகளில் நாங்கள் ஆட்சியில் இருக்கின்ற போது இன்னும் ஒருவர் வந்து ஆதிக்கம் செலுத்தி விட்டு செல்வதற்கு நாம் இடமளிக்க முடியாது.

மன்னாரில் 180 மில்லியன் ரூபாய் நிதியொதுக்கீட்டில் அமைக்கப்படவுள்ள மன்னார் பொது பேருந்து நிலையத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

180 மில்லியன் ரூபாய் நிதியொதுக்கீட்டில் குறித்த வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. எனினும் 113 மில்லியன் ரூபாவிற்கான ஒப்பந்தமே கைச்சாத்திடப்பட்டுள்ளது.

மிகுதி 67 மில்லியன் ரூபாய் எங்கே போனது? நகர அபிவிருத்தி அமைச்சர் மற்றும் கைத்தொழில் வர்த்தக அமைச்சர் ஆகியோரினால் கூறப்பட்ட விடயம் 180 மில்லியன் ரூபாய் நிதியிலே குறித்த திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் இவ்விடயம் தொடர்பில் உரிய விளக்கத்தை சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள் எமக்கு வழங்க வேண்டும். என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2)




# மணல் அகழ்வினால் பெருமளவான பயிர்ச்செய்கை நிலங்கள் பாழாகின்றன

## கிளிநொச்சி மாவட்ட கமநல உதவி ஆணையாளர் தெரிவிப்பு

(கண்டாவளை)

வயல் காணிகள் மற்றும் குளங்களில் இருந்து தொடர்ந்தும் மணல் கொள்ளை இடம்பெறுவதனால் பெருமளவான பயிர்ச்செய்கை நிலங்கள் பாழாகி வருவதாகவும் இதனைக் கட்டுப்படுத்த ஒருங்கிணைப்புக்குழு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர்வே.ஆயகுலன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் இணைத் தலைவர்கள் தலைமையில் நேற்று காலை 9.30 மணியளவில் கிளிநொச்சி மாவட்டச்செயலகத்தில் நடை பெற்றுள்ளது.

இதில் மாவட்ட கமநல அபிவிருத்திகள் தொடர்பில் கருத்துத்தெரிவித்த ஆணையாளர், கிளிநொச்சி மாவட்டத்தில் வயல் காணிகளை நிரப்பி வீடுகள் அமைத்தல் தொடர்பாக மாவட்டத்தில் உரிய முறையில் விண்ணப்பித்து அதன்படி வீடுகள் அமைப்பதற்கு அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன.

பூநகரிப் பிரதேசத்தில் அதிகளவான காணிகள் வயல் காணிகளாக காணப்படுகின்றன. அதேவேளை வயல் காணிகளிலும் குளங்களிலும் சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குறிப்பாக, கண்டாவளை போன்ற இடங்களில் இவ்வாறு மணல் அகழ்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இவ்வாறு காணி உரிமையாளர்கள் இல்லாத சட்ட விரோத மணல் கொள்ளைகளில் ஈடுபடுபவர்களே இவ்வாறு சட்டவிரோத மணல் அகழ்வால் வயல் நிலங்கள் பாழாகின்றன. குறிப்பாக, உருத்திரபுரம் பிரதேசத்தில் இவ்வாறு மணல் அகழ்வுகள் இடம்பெறுகின்றன.

இந்த விடயங்கள் தொடர்பில் கடந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் சுட்டிக்காட்டப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-315)

# மீனவர்களின் பிரச்சினைகள் தொடர்பில் ஆராயும் கூட்டம் நேற்று முல்லையில்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள கடற்றொழிலாளர்களின் பிரச்சினைகள் தொடர்பில் விசேட கலந்துரையாடல் முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் அமைப்பினால் ஒழுங்கு செய்யப்பட்டு கள்ளப்பாடு பகுதியில் நடைபெற்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடற்றொழிலாளர்களின் கடல்வளம் அழிக்கப்படுவது, வாழ்வாதாரம் பாதிக்கப்படுவது மற்றும் சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கையை தடை செய்தல் தொடர்பிலான கலந்துரையாடல் மாவட்டத்தில் உள்ள அனைத்து தரப்பினரையும் ஒன்றிணைத்து நடத்துவதாக தீர்மானிக்கப்பட்டு இடம்பெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர், கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள உதவிப்பணிப்பாளர் அதிகாரிகள், கடற்படையினர் வடக்கு மாகாணசபை உறுப்பினர்கள், பொலிஸார் உள்ளிட்டவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இருப்பினும் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலில் வடக்கு மாகாண விவசாய மீன்பிடி அமைச்சர் க.சிவநேசன், வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் , கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் இ.பிரதாபன் , பொலிஸார் அதிகாரிகள், கடற்படையினர் கடற்றொழில் நீரியல் வள திணைக்கள உதவிப்பணிப்பாளர் சார்பாக அவரது பிரதிநிதிகள் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் மீனவ அமைப்புக்களின் பிரதிநிதிகள் மீனவ மக்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது மீனவ அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் இடையில் பல மணி நேரமாக கலந்துரையாடல்கள் இடம்பெற்றபோதும் கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள உதவிப் பணிப்பாளர் கூட்டத்தில் கலந்துகொள்ளாத காரணத்தால் இதற்கான உறுதியான தீர்மானங்கள் எட்டப்பட முடியாது போக மக்கள் திணைக்களத்தில் பல்வேறு குற்றச்சாட்டுக்களை வைத்து இவர்கள் இன்று முடிவு எடுக்காவிட்டால் எமக்கு தீர்வு கிடைக்காது எனக் கூறி கடற்றொழில் நீரியல் வள திணைக்களத்தை முற்றுகையிடுவதாக கூறி கூட்டத்திலிருந்து கலைந்து சென்றனர். (2-281)

# புனரமைக்கப்பட்டு போக்குவரத்துக்காக திறந்து வைக்கப்பட்ட வீதியின் நிலை பாரீர்!



(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் வட்டக்கச்சிப்பகுதியில் தேசிய நல்லிணக்க அமைச்சினுடைய நிதியுதவியின் கீழ் புனரமைக்கப்பட்டு கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் மக்கள் போக்குவரத்துக்காக திறந்து வைக்கப்பட்ட வீதி உரிய முறையில் புனரமைக்கப்படாது சேதமடைந்து வருவதாக பிரதேச மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் காணப்படுகின்ற குறிப்பிட்ட சில வீதிகள் தேசிய நல்லிணக்க அமைச்சினுடைய நிதியொதுக்கீட்டின் கீழ் புனரமைக்கப்பட்டுள்ளன.

இதற்கமைவாக வட்டக்கச்சி புதுப்பாலச்சந்தியிலிருந்து தபால் பெட்டிச் சந்தியை இணைக்கும் குறித்த வீதியானது தேசிய நல்லிணக்க அமைச்சின் நிதியொதுக்கீட்டின்கீழ் கொங்கிறீட் வீதியாக புனரமைக்கப்பட்டு கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் அமைச்சின் செயலாளர் மற்றும் மாவட்டச்செயலக உத்தியோகத்தர்கள், மக்கள் பிரதிநிதிகள் ஆகியோரால் மக்கள் போக்குவரத்துக்காக உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.

இந்நிலையில் குறித்த வீதி உரிய முறையில் புனரமைக்கப்படாமையினால் இரண்டு மாதங்களுக்குள் சேதமடைந்து காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளதுடன் இது தொடர்பில் உரிய அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியும் இதுவரை எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர். (2-315)

# முல்லைத்தீவில் 623 ஹெக்டேயரில் இவ்வாண்டு நிலக்கடலைச் செய்கை



(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் இவ்வாண்டு நிலவுகின்ற கடும் வரட்சி நிலையிலும் 623 ஹெக்டேயர் நிலப்பரப்பில் நிலக்கடலைச் செய்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் நிலக்கடலைச் செய்கையை ஊக்குவிக்கும் வகையில் 200 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கான நிலக்கடலை விதைகள் வழங்கி வைக்கப்பட்டன.

அந்த வகையில் முள்ளியவளை, குமுழமுனை, முத்தையன்கட்டு, உடையார்கட்டு, ஒலுமடு ஆகிய பிரதேசங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு குறித்த நிலக்கடலை விதைகள் வழங்கி வைக்கப்பட்டன.

இவ்வாண்டு 970 ஹெக்டேயர் நிலப்பரப்பில் நிலக்கடலைச் செய்கை எதிர்பார்க்கப்பட்டபோதும் 623 ஹெக்டேயர் நிலப்பரப்பில் குறித்த நிலக்கடலைச்செய்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் கடந்த வருடத்தில் அதிகளவான நிலக்கடலை உற்பத்தி செய்யப்பட்ட ஒரு மாவட்டமாகவும் முல்லைத்தீவு மாவட்டம் அமைந்துள்ளது என்றும் மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் அலுவலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை 2 ஆயிரத்து 404 ஹெக்டேயர் நிலப்பரப்பில் மேட்டு நில மற்றும் மறு வயற்பயிர்ச்செய்கைகள் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டாலும் 842 ஹெக்டேயர் நிலப்பரப்பில் மட்டும் இவ்வாண்டு பயிர்ச்செய்கை மேற் கொள்ளப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)

# கடற்றொழில் நீரியல் வள திணைக்களத்தை கடற்றொழிலாளர்கள் முற்றுகையிட்டு போராட்டம்

## முல்லை. அதிகாரிகளின் உறுதிமொழியை அடுத்து கைவிடப்பட்டது





(பனிக்கன்குளம்)

**முல்லைத்தீவு மாவட்டத்தில் மீனவ அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் இடையில் பல மணி நேரமாக கலந்துரையாடல்கள் இடம்பெற்ற போதும் உறுதியான தீர்மானங்கள் எட்டப்பட முடியாது போன நிலையில் முல்லைத்தீவு கடற்றொழிலாளர்கள் பொறுமையிழந்து கடற்றொழில் நீரியல் வள திணைக்களத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர். இதனையடுத்து அதிகாரிகளின் உறுதிமொழியைத் தொடர்ந்து போராட்டம் கைவிடப்பட்டது.**

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கடற்றொழிலாளர்களின் பிரச்சினைகள் தொடர்பில் விசேட கலந்துரையாடல் முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் அமைப்பினால் ஒழுங்கு செய்யப்பட்டு கள்ளப்பாடு பகுதியில் நேற்று நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் வடமாகாண விவசாய மீன்பிடி அமைச்சர் க.சிவநேசன், வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன், கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் இ.பிரதாபன், பொலிஸ் அதிகாரிகள், கடற்படையினர், கடற்றொழில் நீரியல் வள திணைக்கள உதவிப் பணிப்பாளர் சார்பாக அவரது பிரதிநிதிகள் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள், மீனவ அமைப்புக்களின் பிரதிநிதிகள், மீனவ மக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது மீனவ அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் இடையில் பல மணிநேரமாக கலந்துரையாடல்கள் இடம்பெற்ற போதும் உறுதியான தீர்மானங்கள் எட்டப்பட முடியாது போக மக்கள் திணைக்களத்தில் பல்வேறு குற்றச்சாட்டுக்களை வைத்து இவர்கள் இன்று முடிவு எடுக்காவிட்டால் எமக்கு தீர்வு கிடைக்காது என கூறி கடற்றொழில் நீரியல் வள திணைக்களத்தை முற்றுகையிடுவதாக கூறி கூட்டத்திலிருந்து கலைந்து சென்றனர்.

இங்கிருந்து கலைந்து சென்ற வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் உள்ளிட்ட கடற்றொழில் அமைப்பைச் சார்ந்தவர்கள் மற்றும் கடற்றொழிலாளர்கள் ஒன்றாகத் திரண்டு முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் திணைக்கள அலுவலகத்தை முற்றுகையிட்டனர்.

இவர்கள் அந்த பகுதிக்கு வரும்போது அந்தப்பகுதிக்கு வந்த பொலிஸார் குறித்த திணைகள வாயிலை பூட்டி பாதுகாப்பு வழங்கினர். குறித்த பகுதிக்கு வந்த மக்கள் அந்த இடத்தில் முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சுமார் ஒரு மணிநேரம் அலுவலகத்திற்கு முன்பாக முற்றுகையிட்ட மக்கள் கடற்றொழில் திணைக்கள அதிகாரி வந்து தங்கள் பிரச்சினைக்கு தீர்வு காணும் வரை வீதியில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள அதிகாரி நீதிமன்றத்திற்குச் சென்றிருந்த காரணத்தால் அதிகாரியை வெளியில் வருமாறு மக்கள் குரல் கொடுத்துள்ளார்கள். குறித்த அதிகாரியின் ஊர்தி திணைக்களத்திற்குள் நின்ற காரணத்தால் மக்களை ஏமாற்றும் செயல் என ஆர்ப்பாட்டத்தில் நின்ற கடற்றொழிலாளர்கள் சத்தமிட்டதை தொடர்ந்து பொலிஸார் திணைக்களத்திற்குள் சென்று அதிகாரி உள்ளாரா? என பார்த்தபோது அங்கு அதிகாரி இல்லை. எனவே மக்கள் தொடர்ந்தும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நீதிமன்றத்தில் இருந்து குறித்த அதிகாரி திணைக்களத்திற்கு வருகைதந்தபோது வாசலில் வைத்து மறித்த மக்கள் தங்கள் கோரிக்கையை முன்வைத்துள்ளார்கள்.

ஆயிரத்திற்கும் அதிகமான கடற்றொழிலாளர்கள் கையெழுத்திட்ட மனுவை வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள அதிகாரியிடம் கையளித்தார்.

அந்த மனுவில் முல்லைத்தீவு மாவட்டத்தில் கடற்பரப்பில் சட்டவிரோத தொழில் நடவடிக்கை மிகமோசமாக நடைபெற்று வருகின்றது. இதுவிடயமாக பல தடவைகள் தெரியப்படுத்தியும் இன்று வரை தீர்வு கிடைக்கவில்லை. கடற்றொழிலாளர்கள் வறுமையில் வாடுகின்றார்கள். எனவே வெளிச்சம் பாய்ச்சி மீன்பிடிப்பது, வெடி வைத்து மீன்பிடித்தல், லைலா வலை மீன்பிடித்தல், சுருக்கு வலை மூலம் மீன்பிடித்தல், சங்கு பிடித்தல் அட்டைபிடித்தல், போன்ற தொழில் நடவடிக்கையை உடன்நிறுத்த வேண்டும். இதற்காக கொடுக்கப்பட்ட அனுமதிகளும் உடனடியாக இரத்து செய்யப்பட வேண்டும் என்று கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இதன்போது கருத்து தெரிவித்த கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள உதவிப் பணிப்பாளர் வி.கலிஸ்ரன் முல்லைத்தீவு கடலில் லைட் பாவித்து மீன்பிடிக்கும் நடவடிக்கை அதிகளவில் இருந்துள்ளது. இது தொடர்பில் நேற்று முன்தினத்திலிருந்து அதற்கான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இரண்டு படகுகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியுள்ளோம். கைதானவர்கள் எதிர்வரும் 15 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.


லைட் பாவித்து மீன்பிடிப்பவர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை நாங்கள் தொடர்ந்து மேற்கொள்வோம். இதில் சுருக்குவலை காலை ஆறுமணிதொடக்கம் மாலை ஆறுமணிவரை தொழில் செய்யலாம். ஒன்றரை இஞ்சிக்கு மேல் உள்ள கண் அளவினை பாவித்து தொழில் செய்யலாம். அந்த நிபந்தனைக்கு அமையவே நாங்கள் அனுமதிப்பத்திரத்தை வழங்கியுள்ளோம். அவர்கள் சட்டத்திற்கு முரணான வகையில் நடத்துகொண்டால் அவர்களின் அனுமதிகள் இரத்து செய்யப்படும் என்றும் மக்களின் கோரிக்கைக்கு இந்தச் சட்டவிரோத தொழில்களை நிறுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்கிறோம் என்ற போது மக்கள் குறுக்கிட்டு மழுப்பலான பதில் வேண்டாம். தங்களால் கூறப்பட்ட இவ்வாறான தொழில்களை தடைசெய்கிறோம் என உறுதிபட கூறுமாறு கூறி கூக்குரல் இட்டதை தொடர்ந்து உங்களது கோரிக்கைக்கு அமைய இவற்றை தடை செய்கிறோம் என உறுதிபட தெரிவித்தார். அத்தோடு இவ்வாறான சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கையைக் கட்டுப்படுத்த கடற்றொழில் திணைக்களம் மக்களின் ஒத்துழைப்புடனும் பொலிஸார், படையினரின் உதவியுடனும் இன்று தொடக்கம் அனைத்தும் கட்டுப்படுத்தப்படும் என்றார்.

இதன்போது கருத்து தெரிவித்த முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் அமைப்பின் தலைவர் ஜெயா, சட்ட விரோத நடவடிக்கைகள் அனைத்தும் இன்றில் இருந்து முல்லைத்தீவு மாவட்டத்தில் தடைசெய்ய வேண்டும் என்று மக்கள் ஏகோபித்த கோரிக்கையை முன்வைத்துள்ளார்கள். சுருக்கு வலைக்கான அனுமதிகளை மீளப் பெற்றுக்கொள்ளல் என்றும் கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள அதிகாரி வாக்குறுதி அளித்துள்ளார்.

கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள அதிகாரி அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றாவிட்டால் மக்கள் பாரிய அளவில் போராட்டத்தை நடத்தி கடற்றொழில் நீரியல்வளத்திணைக்களத்தை மூடும் நிலைப்பாட்டிற்கு கொண்டு வரும் நிலையை எடுப்போம் என்றும் தெரிவித்துள்ளார். (2-281)



## மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட 'சமூக வாழ்வாதார மைய' கட்டடம் பற்றைகள் சூழ்ந்து செயலிழந்த நிலையில்



(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேசத்தில் கொல்லவிளாங்குளம் பகுதியில் சேவாலங்கா நிறுவனத்தினால் "சமூக வாழ்வாதார மையம்" என்ற பெயரில் பல மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட கட்டடம் செயலிழந்த நிலையில் காடுகள் மண்டிக் காணப்படுகின்றது.

மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட மீள் குடியேற்றப் பிரதேசங்களில் சேவாலங்கா நிறுவனத்தினால் 2011ஆம் ஆண்டு காலப்பகுதியில் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தவும் பல்வேறு திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இதன் அடிப்படையில் கொல்லவிளாங்குளம் கிராமத்தில் பத்து ஏக்கர் வரையான காணி பெற்றுக்கொள்ளப்பட்டு அதில் நல்லினக் கால்நடைகளை உற்பத்தி செய்தல், கால்நடைகளுக்கான சிகிச்சைப்பிரிவுகள், கால்நடை வளர்ப்பு என்பவற்றுக்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அதற்கான கட்டுமானங்களும் அமைக்கப்பட்டன.

இதேவேளை உள்ளூரில் உற்பத்தியாகும் பாலைக் கொள்வனவு செய்து அவற்றின் மூலம் பாற்பொருள் உற்பத்திகளை மேற்கொண்டு சந்தைப்படுத்துவதற்கான திட்டங்களும் முன்னெடுக்கப்படும் என்றும் மக்களுக்கு பல்வேறு பயிற்சி வகுப்புக்களும் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இந்நிலையில் மேற்படி செயற்பாடுகள் முன்னெடுக்கப்படாது குறித்த கட்டுமானங்களும் அதன் வளாகமும் பற்றைக்காடுகள் மண்டிக் காணப்படுவதுடன், கட்டடங்களும் முழுமையாக சேதமடைந்துள்ளன.

இவ்வாறு அபிவிருத்தி என்ற போர்வையில் பெருந்தொகை நிதி செலவிடப்பட்டு மக்களுக்கு பயனற்று காணப்படுகின்றமை தொடர்பில் பல்வேறு தரப்புக்களும் விசனம் வெளியிட்டுள்ளன. (2-312)



யாழ்.சரவணை பள்ளம்புலம் ஸ்ரீ முருகமூர்த்தி ஆலய மஹோற்சவத்தில் "கந்தரனுபூதி" தொடர் விரிவுரை ஆற்றிய "தெய்வத் தமிழ்ச்சுடர்" இராசையா ஸ்ரீதரன் சொற்பொழிவுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர் ஒருவருக்கு பரிசில் வழங்கினார்.

## ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய மஹோற்சவ ஏற்பாடுகள்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 11.08.2018 சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பிக்கும் சந்நிதி வேலவனின் மஹோற்சவம் 26.08.2018 ஞாயிறு தீர்த்த உற்சவத்துடன் நிறைவு பெறும்.

மஹோற்சவ காலத்தில் ஆலயத்திற்கான போக்குவரத்து வசதிகள், குடிநீர், சுகாதாரம், வாகனத் தரிப்பிடம் என்பன வழமைபோல் இருக்கும். மேலும் ஆலய உள், வெளி வீதிகளில் மற்றும் தேர் ஓடும் வீதிகளிலும் வியாபார நடவடிக்கை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

குறிப்பாக நடமாடும் சுண்டல் வியாபாரிகள் தமக்கென ஓர் இடத்தினை முற்கூட்டியே தனியார் காணிகளில் பெற்றுக் கொள்ளுங்கள்.

மஹோற்சவ காலத்தில் தடையை மீறி வியாபாரம் செய்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ள முடிபு செய்யப்பட்டுள்ளது. மேலும், அடியார்கள் பிரயாணம் செய்யும் போது மிகவும் அவதானமாக பிரயாணம் செய்யவும். உங்கள் உடைமைகளைப் பாதுகாப்பாக வைத்துக் கொள்வது உங்கள் கடமையாகும். ஆசார, கலாசார சீலர்களாக ஆலயத்திற்கு வாருங்கள் என ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (இ)

# செய்தித்துளிகள்

### கட்டுரை ஆக்கத்தில்

## மகாஜனக் கல்லூரி மாணவி தேசிய ரீதியில் முதலிடம்

(யாழ்ப்பாணம்)



அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற தேசிய மட்ட தமிழ்த்தினப் போட்டியில் பிரிவு-1 இல் கட்டுரை ஆக்கத்தில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மாணவி கனிவிழி-சுதாஜி தேசிய ரீதியில் முதலாம் இடத்தைப் பெற்று வடமாகாணத்திற்கும் யாழ். மாவட்டத்திற்கும் பெருமை சேர்த்துள்ளார். (இ-105)

## மஹோற்சவ விஞ்ஞாபனம்

(யாழ்ப்பாணம்)

அரியாலை பிரப்பங்குளம் மஹாமாரி அம்மன் கோவில் மஹோற்சவ விஞ்ஞாபனம் எதிர்வரும் 30 ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஒகஸ்ட் 14 ஆம் திகதி வரையான 15 நாட்கள் திருவிழா நடைபெறவுள்ளன.

ஒகஸ்ட் 11 ஆம் திகதி இரவு சப்பறம். 12 ஆம் திகதி ஞாயிறு காலை 8.30 மணிக்கு இரதோற்சவம், 13 ஆம் திகதி ஆடிப் பூரத்தையொட்டி காலை 7.15 மணிக்கு அம்மனுக்கு ருது சாந்தி உற்சவமும் முற்பகல் 10.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (இ)

## ஆடி அமாவாசை விரத பூஜை

(யாழ்ப்பாணம்)

ஆடி அமாவாசை விரதத்தை முன்னிட்டு எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 11 ஆம் திகதி சனிக்கிழமை புங்குடுதீவு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் அம்பிகைக்கு ஸ்நபனாபிஷேக விசேட பூஜைகள் இடம்பெறவுள்ளன. (இ)

## புதிய எரிபொருள் தாங்கியை தயாரிக்கும் பணி 40% நிறைவு

(கொழும்பு)

புதிய எரிபொருள் தாங்கியை தயாரிக்கும் பணிகளில் 40 வீதமான பணிகள் நிறைவடைந்துள்ளதாக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இது தவிர மேலும் இரு தாங்கிகளை தயாரிப்பதற்கான விலைமனு கோரப்பட்டுள்ளதாக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் செயலாளர் உபாலி மாரசிங்க தெரிவித்துள்ளார். (இ-7)

## ஹெரோயினுடன் லசவின் சகா கைது

(கொழும்பு)

வெலிக்கடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பண்டாரநாயக்கபுர பகுதியில் சுமார் 201 கிராம் 160 மில்லி கிராம் பெறுமதியான ஹெரோயினுடன் ஒருவரை கைதுசெய்துள்ளதாக வெலிக்கடை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் லச எனப்படும் கெசல்வத்த லசந்தவின் உதவியாளர் ஆவார். இவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஹெரோயினின் பெறுமதியானது 24 இலட்சம் ரூபாவாகும்.

இச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

## களனி கங்கை வெள்ளத்தை தடுக்க கொங்கிறீட் அணைக்கட்டுக்கள்

(கொழும்பு)

களனி கங்கையில் ஏற்படும் வெள்ளத்தை தடுக்க ஹங்வெல்லையில் இருந்து முகத்துவாரம் வரையில் கொங்கிறீட் அணைக்கட்டுக்கள் அமைக்க நடவடிக்கை மேற்கொண்டிருப்பதாக காலநிலை அனர்த்தத்தைக் கட்டுப்படுத்தும் பிரிவின் பணிப்பாளர் பொறியியலாளர் சுதர்ம எலகந்த தெரிவித்துள்ளார்.

இதற்கமைய நதியின் இரு மருங்கிலும் மூன்று மீற்றர் உயரத்தில் கொங்கிறீட் அணைக்கட்டுக்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# சாவகச்சேரி நகரை மையப்படுத்தி 2019இல் பல அபிவிருத்திப்பணிகள்

## திட்டமுன்மொழிவுகள் சமர்ப்பிப்பு

(சாவகச்சேரி)

2019 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட நிதியில் சாவகச்சேரி நகரில் இடம்பெறவுள்ள அபிவிருத்தி மற்றும் புனரமைப்புப் பணிகள் தொடர்பான திட்டமிடல் சாவகச்சேரி நகரசபையின் கடந்த சபை அமர்வின் போது தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் தலைமையில் இடம்பெற்றது.

இதன் போது தவிசாளரினால் நகர மக்களின் தேவை கருதியும் நகர சபையின் வருமானம் கருதியும் சில முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டன. அவையாவன.

சாவகச்சேரி நகரில் பழைய மீன் சந்தை காணப்பட்ட இடத்தில் வர்த்தக நோக்கோடு கடைத் தொகுதி அமைத்தல், புதிய மீன் சந்தைக் கட்டடத்தை மெருகூட்டல், மரக்கறிக் கடைகளுக்கு மேடை அமைத்துக் கொடுத்தல். பொது விளையாட்டு மைதான விஸ்தரிப்பின் பொருட்டு காணி கொள்வனவு செய்தல், கொல்லன்பிராய் வீதி புனரமைப்புச் செய்தல் மற்றும் சாவகச்சேரி நகர சபைக்குச் சொந்தமான மடத்தடியிலுள்ள காணியில் கடைத் தொகுதி அமைத்தல் ஆகிய முன்மொழிவுகள் தவிசாளரினால் முன்வைக்கப்பட்டது. இதனைவிட முக்கிய தேவைப்பாடு உள்ள அபிவிருத்திகள் உறுப்பினர்களால் இனம்காணப்படும் சந்தர்ப்பத்தில் அவற்றுக்கும் முன்னுரிமை வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் நகரசபை கணக்காளரினாலும் சாவகச்சேரி நகரில் ஆட்டோ தரிப்பிடத்திற்கு கொட்டகை அமைத்துக் கொடுக்க வேண்டும், நகர சபையின் பொன்விழா மண்டபக் கூரை புனரமைக்கப்பட வேண்டும், பேருந்து நிலையத்திற்கு வர்ணம் பூச வேண்டும், நகரசபையின் வாகனப் பராமரிப்பு மற்றும் வாகன தரிப்பிடம் அமைத்தல் ஆகிய முன்மொழிவுகள் சபையில் பிரேரிக்கப்பட்டன.

நிதிப் பிரச்சினை காரணமாக கட்டாயம் என்ற நிலையில் உள்ள வேலைத்திட்டங்கள் முன்னுரிமை அடிப்படையில் செய்யப்படும் என சபையில் தெரிவிக்கப்பட்டது. வருமானத்தை வளப்படுத்தக் கூடிய வகையில் வரவு-செலவுத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும் என சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் கஜிதன் கேட்டுக்கொண்டுள்ளார். (இ-30)

## மீன் ஏற்றுமதியின் மூலம் வெளிநாட்டு வருமானத்தை அதிகரிப்பதே நோக்கம்

(கொழும்பு)

மீன் ஏற்றுமதியின் மூலம் இலங்கைக்கு கிடைக்கும் வெளிநாட்டு வருமானத்தை 150 கோடி அமெரிக்க டொலர்களாக அதிகரிப்பதே நோக்கமாகும் என்று, கடற்றொழில், நீரக வளமூல அபிவிருத்தி மற்றும் கிராமியப் பொருளாதார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் திலிப் வெதஆராச்சி தெரிவித்துள்ளார்.

இந்த இலக்கை அடைவதற்காக மீன் ஏற்றுமதி நடவடிக்கைகளை வலுப்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார். இதில் நிலவும் பிரச்சினைகளுக்கு குறுகிய காலத்தில் தீர்வு பெற்றுக் கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

மீன் ஏற்றுமதியாளர் சங்க பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் போது அமைச்சர் இந்த விடயங்களைத் தெரிவித்தார். (இ-7)

## மாக்சிச லெனினிசக் கட்சியின் 40 ஆண்டையொட்டி கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தீவிலே கடந்த 40 வருடங்களாக உழைக்கும் மக்கள் அதிகாரத்தை வென்றெடுப்பதற்கு வெகுஜனப் போராட்டப் பாதையில் பயணித்து வரும் புதிய - ஜனநாயக மாக்சிச - லெனினிசக் கட்சியின் 40 ஆண்டையொட்டிய பொதுக்கூட்டம் எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் யாழ். மணிக்கூட்டுக் கோபுரத்திற்கு அருகில் அமைந்துள்ள றிம்மர் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

அக் கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் சி.கா.செந்திவேல் தலைமையில் இடம்பெறவுள்ள இப் பொதுக் கூட்டத்தில் விசேட உரைகளை தேசிய அமைப்பாளர் தோழர் வே.மகேந்திரன், அரசியல் குழு உறுப்பினர்களான தோழர் க.தணிகாசலம், தோழர் சோ.தேவராஜா, வட பிராந்தியச் செயலாளரும் வலி. கிழக்குப் பிரதேச சபை உறுப்பினருமான தோழர் கா.செல்வம் கதிர்காமநாதன், மலையகப் பிராந்தியச் செயலாளரும் மாத்தளை உக்குவளை பிரதேச சபை உறுப்பினருமான தோழர் டேவிட் சுரேன், பெண் விடுதலைச் சிந்தனை அமைப்பின் செயற்பாட்டாளரும் வலி.கிழக்குப் பிரதேச சபை உறுப்பினருமான தோழர் சசிநந்தினி அனுசன், வன்னி மாவட்டங்களின் செயலாளர் தோழர் என்.பிரதீபன், சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பின் செயற்பாட்டாளர் தோழர் மு.மயூரன் ஆற்றவுள்ளதுடன், தோழமை உரைகளை மூத்த சமூகச் செயற்பாட்டாளர் மு.தியாகராஜா, எழுத்தாளரும் சமூகச் செயற்பாட்டாளருமான சி.கருணாகரன், ஆய்வாளர் பி.முத்துலிங்கம், கல்வியியலாளர் எஸ்.தவநாயகம், மூத்த தொழிற்சங்கவாதியான இ.தவராஜாவும் ஆற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## வெளிவாரி பட்டதாரிகளுக்கு பட்டச் சான்றிதழ் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தினால் வெளிவாரிப் பட்டதாரி மாணவர்களுக்கான பட்டச் சான்றிதழ் வழங்கும் வைபவம் எதிர்வரும் 29.07.2018 ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை மூன்று அமர்வுகளாக கைலாசபதி கலையரங்கில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் பூர்த்தியாகியுள்ளன. மேற்படி நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் இரட்ணம் விக்னேஸ்வரன் பட்டங்களை வழங்கிக் கௌரவிப்பார் என யாழ்.பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையப் பணிப்பாளர் பேராசிரியர் பா.நிமலதாசன் அறிவித்துள்ளார். (இ

## புகழ்பெற்ற ஓவியங்களை காணவில்லை

(கொழும்பு)

இலங்கையின் புகழ்பெற்ற கலைஞரால் வரையப்பட்ட ஓவியங்கள் காணாமல் போயுள்ள நிலையில் அவற்றைக் கண்டுபிடிக்க குற்றத் தடுப்பு பொலிஸார், பொது மக்களின் உதவியை நாடியுள்ளனர்.

கடந்த 2013ஆம் ஆண்டு ஜூலை மாதம் 12ஆம் திகதி இவை காணாமல் போனமை தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டுவந்த குற்றத்தடுப்பு பிரிவினர், நேற்று முன்தினம் திங்கட்கிழமை மக்களின் உதவியை நாடியுள்ளனர்.

புகழ்பெற்ற ஓவியர் George Keyt என்பவரால் வரையப்பட்ட, 12 மில்லியன் பெறுமதியான 'அம்மாவும் குழந்தையும்' ஒன்றாக இருக்கும் ஓவியமும் 'வசந்தி' என்ற ஓவியமும் அலுவலக இடமாற்றத்தின் போது காணாமல் போனதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



இந்நிலையில் குறித்த ஓவியங்கள் தொடர்பில் தகவல் கிடைத்தால் நிதிமோசடி விசாரணைப் பிரிவின் 011 239 5248 என்ற இலக்கத்திற்கு தகவல் வழங்குமாறு மக்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (இ-7)

## 1500 கிலோ கொக்கெயின் மீட்பு

# போதைப்பொருள் கடத்தல் மையமாக இலங்கை மாற்றம்

### சட்டம் ஒழுங்கு அமைச்சர் அதிருப்தி



(கொழும்பு)

போதைப்பொருள் கடத்தலுக்கான மையமாக இலங்கை மாறியுள்ளது என சட்டம் ஒழுங்கு அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை போதைப்பொருள் கடத்தலின் மையமாக மாறியுள்ளது. இது குறித்து எங்களுக்கு தகவல்கள் கிடைத்துள்ளன.

சில வகையான போதைப் பொருட்களை உள்நாட்டில் விற்பதற்காக கடத்தி வருகின்றனர். கடந்த வருடம் நாங்கள் 1500 கிலோ கொக்கெயினை கைப்பற்றினோம். இது பெறுமதியான போதைப்பொருள். ஆனால் இலங்கையில் இது பயன்படுத்தப்படுவதில்லை. இதன்மூலம் போதைப்பொருள் கடத்தலுக்கான தளமாக இலங்கை மாறியுள்ளது என்ற முடிவிற்கு நாங்கள் வரலாம்.

இதனை முறியடிப்பதற்கு நாங்கள் சர்வதேச சமூகத்தின் உதவியைப் பெற தீர்மானித்துள்ளோம். நாங்கள் இந்த அடிப்படையில் செயற்படுகின்றோம்.

இந்த விடயத்தில் நான் எந்த அரசியல் தலையீட்டையும் எதிர்கொள்ளவில்லை. எந்த அமைச்சரும் இது குறித்து என்னுடன் பேசவில்லை. இந்த நிலைமையை கையாள்வதற்காக விசேட பிரிவுகளை ஏற்படுத்த திட்டமிட்டுள்ளோம். நாங்கள் பலரைக்கைதுசெய்து சிறையில் அடைத்துள்ளோம். வெளிநாடுகளில் வாழ்பவர்களே இதனை தூண்டுவது எங்களுக்கு தெரியவந்துள்ளது. சிலர் தங்கள் சிறைகளில் இருந்தவாறே இவற்றை செய்கின்றனர். இது பாரிய பிரச்சினையாக உள்ளது.

ஆகக்குறைந்தது நான்கு பாதாள உலக குழுத்தலைவர்கள் வெளிநாட்டில் வசிக்கின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# 16பில்லியன் அமெரிக்க டொலர் முதலீடு பந்துல எம்.பிக்கு அமைச்சர் மலிக் பதில்

(கொழும்பு)

இலங்கை-சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக ஒப்பந்த முதலீடு தொடர்பில் கூட்டு எதிரணி எம்.பி. பந்துல குணவர்த்தன தெரிவித்திருந்த கருத்திற்கு அபிவிருத்தி மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்கிரம மறுப்புத் தெரிவித்துள்ளார்.






இலங்கைக்கு 16 பில்லியன் அமெரிக்க டொலர்கள் முதலீடு கிடைத்துள்ளதாக முன்வைக்கப்படுகின்ற கருத்து முற்றிலும் பொய்யானது என தெரிவித்த பந்துல, அவ்வாறு ஒரு முதலீடு இலங்கைக்கு கிடைத்திருப்பதாக உறுதிப்படுத்தினால் உடனடியாக நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து தாம் விலகி, அமைச்சரின் அலுவலக உதவியாளராக இணைந்து கொள்வதாக அறிவித்திருந்தார்.

குறித்த விடயம் தொடர்பில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ள அமைச்சர், சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் கடந்த இரண்டு மாதங்களில் 16 பில்லியன் அமெரிக்க டொலர்களை நேரடி முதலீடுகளுக்கான திட்டங்களில்கொண்டு வந்திருப்பதாக தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், குறித்த முதலீடுகளுக்கு இன்னும் ஒப்புதல் வழங்கப்படவில்லை எனவும் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# இலங்கைக்கு தாய்லாந்திடமிருந்து ரோந்துக் கப்பல்கள் கொள்வனவு



(கொழும்பு)

இலங்கை கடற்படைக்கு தாய்லாந்திடமிருந்து ஆழ்கடல் ரோந்துக் கப்பல்களைக் கொள்வனவு செய்வதற்கான பேச்சுக்கள் நடத்தப்பட்டிருப்பதாக அதிகாரபூர்வ தகவல்கள் வெளியாகியுள்ளன.

தாய்லாந்து பாதுகாப்பு அமைச்சின் மேற்பார்வையில் இயங்கும் அரசுத் துறை நிறுவனமான, பாங்கொக் டொக் நிறுவனத்திடம் இருந்தே ஆழ்கடல் ரோந்துக் கப்பல்களைக் கொள்வனவு செய்வது குறித்து இலங்கை அரசாங்கம் ஆராய்ந்து வருகிறது.

பாங்கொக் டொக் நிறுவனத்தின் உயர் மட்ட அதிகாரிகள் குழுவொன்று கடந்த 13 ஆம் திகதி இலங்கைக் கடற்படைக்கு ஆழ்கடல் ரோந்துக் கப்பல்களை வழங்குவதற்கான தமது திட்ட முன்மொழிவையும் அது தொடர்பான தொழில்நுட்ப அறிக்கையையும் இலங்கைப் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தனவிடம் கையளித்துள்ளது.

அத்துடன், இது தொடர்பாக இருதரப்புக்களுக்கும் இடையில் விரிவான பேச்சுக்களும் நடத்தப்பட்டுள்ளன.

இந்தச் சந்திப்புகளில் இலங்கைக் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் சிறிமேவன் ரணசிங்க, பாதுகாப்புச் செயலர் கபில வைத்தியரத்ன உள்ளிட்ட அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

1865 ஆம் ஆண்டு தொடக்கம் கப்பல்களைக் கட்டும் பணியில் ஈடுபட்டுள்ள பாங்கொக் டொக் நிறுவனம் அண்மையில் பிரித்தானியக் கடற்படைக்கு மூன்று ஆழ்கடல் ரோந்துக் கப்பல்களைக் கட்டிக் கொடுத்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-7)

## 'கறுப்பு ஜூலையும் கற்றுக்கொள்ளாத பாடமும்' கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தின் ஏற்பாட்டில் கறுப்பு ஜூலையும் கற்றுக்கொள்ளாத பாடமும் என்ற தலைப்பிலான கலந்துரையாடல் நாளை மறுதினம் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் இல.62, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தி என்ற முகவரியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப்பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர்கூடத்தில் இடம்பெறும்.

எழுத்தாளரும் பொறியியலாளரும் சமூகச் செயற்பாட்டாளருமான ஐ.சாந்தன் தலைமையில் இடம்பெறும். இக்கருத்துரையினைப் புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின்வன்னி மாவட்டங்களின் செயலாளரும்இடதுசாரி அரசியல் செயற்பாட்டாளருமான என்.பிரதீபன் வழங்குவார். இக்கருத்துரையைத் தொடர்ந்து கலந்துரையாடல் இடம்பெறும். இதில் அரசியல், சமூக, விஞ்ஞான, கலை, இலக்கிய, ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர். (இ-7)

# அமெரிக்கக் கட்டளைத்தளபதி பிரதமர் ரணிலுடன் சந்திப்பு



(கொழும்பு)

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள அமெரிக்க இராணுவ பசுபிக் கட்டளைத்தளபதி ஜெனரல் ரொபேர்ட் பிறவுண் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

பிரதமரின் அதிகாரபூர்வ பணியகமான அலரிமாளிகையில் நேற்று முன்தினம் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில், இந்தோ - பசுபிக் ஒத்துழைப்பு மற்றும் விதிமுறைகளின் அடிப்படையிலான செயல்முறைகள் குறித்து ஆக்கபூர்வமான பேச்சுக்கள் இடம்பெற்றதாக இலங்கைக்கான அமெரிக்க துணைத் தூதுவர் ரொபேர்ட் ஹில்டன் தெரிவித்துள்ளார்.

அவரும் பிரதமருடனான இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டிருந்தார்.

அதேவேளை, இலங்கை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் சிறிமேவன் ரணசிங்கவையும் ஜெனரல் ரொபேர்ட் நேற்று முன்தினம் சந்தித்துப் பேச்சு நடத்தினார். (இ-7)

# அடுத்த ஜனாதிபதியாகவும் மைத்திரியே வரவேண்டும்

## அமைச்சர் பைஸர் விருப்பம்




(கொழும்பு)

நாட்டின் அடுத்த ஜனாதிபதியாகவும் மைத்திரிபால சிறிசேன வரவேண்டும் என அமைச்சர் பைஸர் முஸ்தபா தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றைத் தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மாகாணசபைத்தேர்தலை நடத்துவது என்பது நாடாளுமன்றின் பொறுப்பாகும். உள்ளூராட்சி மற்றும் மாகாணசபை அமைச்சர் என்னும் வகையில் எனது பிரதான கடமையான எல்லை நிர்ணயத்தை மேற்கொண்டு அதன் அறிக்கையையும் சபையில் சமர்ப்பித்து விட்டேன்.

இந்த நிலையில், மாகாண சபைத் தேர்தலை எப்போது நடத்துவது என்பதை நாடாளுமன்றின் 225 உறுப்பினர்கள்தான் தீர்மானிக்க வேண்டும்.

அதேநேரம், நாட்டின் தற்போதைய நிலைமையைப் பொறுத்தமட்டில் அடுத்த ஜனாதிபதித் தேர்தலிலும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே வெற்றி பெற வேண்டும் என்றே நான் நினைக்கிறேன்.

ஏனெனில், இவர் ஒருவர் தான் அனைத்து மக்களையும் நல்லிணக்கத்தால் இணைத்த தலைவராக இருக்கிறார். எனவே, எமது கட்சியின் இந்தத் தலைவரே மீண்டும் நாட்டின் தலைமைப் பொறுப்பை ஏற்க வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## விடுதலைப்புலிகள்-விஜயகலா விவகாரம்

# பிரதமரின் செயற்பாடு குறித்து கூட்டு எதிரணி குற்றச்சாட்டு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் மீண்டும் தோற்றம் பெற வேண்டுமென கூறிய நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி. விஜயகலா மகேஸ்வரன் தொடர்பாக இதுவரை எந்தவொரு விசாரணையும் முன்னெடுக்காமல் ஊடகங்களில் வெளியாகும் செய்திகளில் மாத்திரம், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கவனம் செலுத்துவதாக கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன குற்றம் சுமத்தியுள்ளார்.



நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன காரியாலயத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை தெரிவித்தார்.

வடக்கில் இராணுவ முகாம்களை நீக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக சிங்கள ஊடகமொன்று வெளியிட்ட செய்திக்காக ஊடகங்களை பிரதமர் விமர்சித்து வருகின்றார். ஆனால் நாட்டில் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள விஜயகலாவிடம் எந்தவொரு விசாரணையும் முன்னெடுக்காமல் அவரையும் இணைத்துக்கொண்டு அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்வதாக கூறியுள்ளார்.

மேலும் இது குறித்து பயங்கரவாத தடுப்புப் பிரிவுக்கு விஜயகலாவை அழைத்து வாக்குமூலம் பெறுவதற்குக் கூட பிரதமர் நடவடிக்கை எடுக்கவில்லையென ரோஹித அபேகுணவர்தன சுட்டிக்காட்டியுள்ளார்.

அந்தவகையில் இன்னும் சிறிது காலத்தில் விஜயகலாவுக்கு அரசாங்கத்தினால் உயர் பதவி ஏதாவது வழங்கப்படும் என்பது மாத்திரம் உறுதியென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# பாரதம்

# சிறுமிகளை துஷ்பிரயோகம் செய்தால் தூக்குத்தண்டனை!

## நாடாளுமன்றில் சட்டமசோதா தாக்கல்

(டில்லி)

12 வயதுக்கு உட்பட்ட சிறுமியை வன்புணர்ந்தால் தூக்குத்தண்டனை விதிக்க வகை செய்யும் சட்ட மசோதா நாடாளுமன்ற மக்களவையில் நேற்று முன்தினம் தாக்கல் செய்யப்பட்டது.

காஷ்மீர் மாநிலம் கதுவா மாவட்டத்தில் 8 வயது சிறுமியை ஒரு கும்பல் பாலியல் பலாத்காரம் செய்து கொன்றது. இதேபோல் உத்தரபிரதேச மாநிலம் உனாவ் மாவட்டத்தில் 16 வயது சிறுமி ஒருவர் ஒரு கும்பலால் கடத்திச் செல்லப்பட்டு கொடூரமான முறையில் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டார்.

இதையடுத்து சிறுமிகளை வன்புணரும் குற்றவாளிகளுக்கு கடும் தண்டனை விதிக்க வகை செய்யும் அவசர சட்டத்தை மத்திய அரசு கடந்த ஏப்ரல் மாதம் பிறப்பித்தது.

இந்த நிலையில் 12 வயது மற்றும் 16 வயதுக்கு உட்பட்ட சிறுமிகளையும், பெண்களை தனியாகவும், கூட்டாகவும் பாலியல் பலாத்காரம் செய்வோருக்கு கூடுதல் தண்டனை வழங்க வகை செய்யும் சட்ட திருத்த மசோதாவை மத்திய அரசு நாடாளுமன்ற மக்களவையில் நேற்று முன்தினம் மத்திய உள்துறை இராஜாங்க அமைச்சர் கிரண் ரிஜிஜு தாக்கல் செய்தார்.

அப்போது அவர் கூறும் போது, "12 வயது சிறுமி வன்புணர்ந்து கொல்லப்பட்ட சம்பவமும், 16 வயது சிறுமி பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டதும் நாட்டு மக்களின் மனச்சாட்சியை உலுக்கி விட்டது. இதுமாதிரியான சம்பவங்கள் அதிகரித்து வருவதும் வேதனை அளிக்கிறது. இதனால் சமூகத்தின் பல்வேறு தரப்பில் இருந்தும் இந்தக் குற்றங்களுக்கு கடும் தண்டனை விதிக்கவேண்டும் என்ற கோரிக்கை எழுந்தது. இதுபோன்ற குற்றங்களை தடுக்கவும், இதற்கு தண்டனையை அதிகரிக்கவும் சட்ட ரீதியான நடைமுறைகள் அவசியமாகிறது. எனவே 12 மற்றும் 16 வயதுக்கு உட்பட்ட சிறுமிகளுக்கு பாதுகாப்பு அளிக்கும் வகையில் இச்சட்டம் கொண்டு வரப்படுகிறது" என்றார்.

இச்சட்டம் நாடாளுமன்ற இரு அவைகளிலும் நிறைவேறிவிட்டால் உடனடியாக சட்ட வடிவம் பெற்று நடைமுறைக்கு வந்து விடும். மேலும் இதுதொடர்பாக ஏற்கனவே பிறப்பிக்கப்பட்ட அவசர சட்டம் நீக்கப்பட்டு விடும்.

இந்தச் சட்டத்தில் உள்ள முக்கிய அம்சங்கள் குறித்து அமைச்சர் கிரண் ரிஜிஜு கூறியதாவது,

• 12 வயதுக்கு உட்பட்ட சிறுமிகளை பாலியல் பலாத்காரம் செய்பவர்களுக்கு குறைந்த பட்சம் 20 ஆண்கள் சிறைத்தண்டனை அல்லது ஆயுள் தண்டனை அல்லது அதிகபட்சமாக தூக்குத்தண்டனை விதிக்கப்படும்.

• 16 வயதுக்கு உட்பட்ட சிறுமிகளை பாலியல் பலாத்காரம் செய்யும் குற்றவாளிகளுக்கு குறைந்தபட்ச தண்டனை 10 ஆண்டுகளில் இருந்து 20 வருடங்களாக அதிகரிக்கப்படுகிறது. குற்றத்தின் அடிப்படையில் ஆயுள் தண்டனையாகவும் இது மாற்றப்படும். அதன்படி சாகும் வரை குற்றவாளி சிறைவாசத்தை அனுபவிக்க வேண்டும்.

• 12 வயது மற்றும் 16 வயதுக்கு உட்பட்ட சிறுமியை கூட்டு பலாத்காரம் செய்யும் குற்றவாளிகளை சாகும் வரை வாழ்நாள் முழுவதும் சிறையில் அடைக்கலாம்.

• பெண்களை பாலியல் பலாத்காரம் செய்தால் தற்போது அளிக்கப்பட்டு வரும் 7 வருட சிறைத்தண்டனை 10 ஆண்டுகளாக அதிகரிக்கப்படுகிறது. குற்றத்தின் தன்மையை பொறுத்து இதற்கு ஆயுள் தண்டனை விதிக்கப்படலாம்.

இந்த சட்ட மசோதாவில் சிறுமிகள் பாலியல் பலாத்காரம் தொடர்பாக வழக்குகள் அனைத்தும் 2 மாதங்களுக்குள் விசாரணையை நடத்தி முடித்து நீதிமன்றால் தண்டனை வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறது. யாராவது மேல் முறையீட்டுக்கு சென்றால் அதிகபட்சமாக 6 மாதங்களில் வழக்குகள் நடத்தி முடிக்கப்பட்டு தீர்ப்பு வழங்கப் படவேண்டும்.

• 12, 16 வயதுக்கு உட்பட்ட சிறுமிகளை பாலியல் பலாத்காரம் அல்லது கூட்டு பலாத்காரம் செய்ததாக எழுகிற குற்றச்சாட்டின் கீழ் யாருக்கும் முன்பிணை வழங்கப்படாது. இவ்வாறு அவர் கூறினார்.

இதேபோல் திவாலா சட்ட திருத்த மசோதாவை நிதி அமைச்சர் பியூஸ் கோயல் தாக்கல் செய்தார். "இந்த சட்டம் பெரும் பணக்காரர்களுக்கு ஆதரவானது. அரசு அவர்களை ஊக்குவிக்கவே இதைக் கொண்டு வருகிறது. மேலும் இது சிறு நிறுவனங்களை பாதிக்கும்" என்று பா.ஜனதா எம்.பி. பர்துஹரி மஹ்தாப் குற்றம் சாட்டினார்.

இதற்கு பதில் அளித்த பியூஸ் கோயல், "இது தொடர்பான முந்தைய சட்டங்கள் பலவீனமாக உள்ளன. இதனால் கடன் தொகையை திரும்பச்செலுத்தாமல் பெரும்பணக்காரர்கள் எளிதாக தப்பினர்.

காங்கிரஸ் காலத்தில் இதில் எச்சரிக்கையாக நடந்து கொண்டிருந்தால் இப்பிரச்சினையே எழுந்திருக்காது. இனி அப்படி நடக்காது" என்று பதில் அளித்தார்.

இதேபோல் மாநில அரசுகள் வர்த்தக நீதிமன்றங்களை அமைத்துக் கொள்ள வகை செய்யும் சட்ட திருத்த மசோதா, தேசிய பல்கலைக்கழக மசோதா, சிறு மற்றும் குறு நிறுவனங்கள் வளர்ச்சி சட்ட திருத்த மசோதா, ஓமியோபதி சபையில் சட்ட திருத்த மசோதா ஆகியவையும் மக்களவையில் நேற்று முந்தினம் தாக்கல் செய்யப்பட்டன. (7-8)

# கிறீஸில் கா...

# 25 பேர் உ...

(ஏதென்ஸ்)

கிறீஸ் நாட்டில் பற்றி எரியும் காட்டுத்தீயில் சிக்கி 25 பேர் உயிரிழந்தனர். தீயைக் கட்டுப்படுத்தும் பணி தீவிரமாக நடைபெறுகிறது.

கிறீஸ் நாட்டின் ஏதென்ஸ் நகர் அருகில் உள்ள அட்டிகா பிராந்தியத்தில் நேற்று முன்தினம் மாலை திடீரென காட்டுத்தீ ஏற்பட்டது.

கடற்கரையை ஒட்டியுள்ள வனப்பகுதியில் இரண்டு இடங்களில் பற்றிய தீ, ஏனைய பகுதிகளுக்கும் வேகமாக பரவத் தொடங்கியது. இதனால் அப்பகுதி முழுவதும் கடும் புகைமூட்டமாக காட்சியளித்தது.

தீ விபத்து ஏற்பட்டதைத் தொடர்ந்து அங்குள்ள கடற்பகுதியில் உள்ளவர்கள், ரிசார்ட்டுகளில் தங்கியிருந்தவர்களை மீட்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

பொதுமக்கள் வீடுகளை விட்டு வெளியேறி வேறு இடங்களுக்கு தப்பி ஓடினர்.



எனினும் பலர் தீயில் சிக்கிக் கொண்டனர். விபத்து நிகழ்ந்த பகுதியை ஒட்டியுள்ள சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட வீடுகள் மற்றும் 200 இற்கும் மேற்பட்ட வாகனங்கள் தீயில் கருகி சேதமடைந்துள்ளன. வனப்பகுதி வழியாக கார்களில் சென்ற பயணிகளும் தீயில் சிக்கிக்கொண்டனர்.

நேற்று அதிகாலை நிலவரப்படி 7 பேர் உயிரிழந்துள்ளதாகவும் 50 இற்கும் மேற்பட்டவர்கள் கடுமை... யான ... வும் த...

# வெடிகுண்டுத்...

# 30 இராணுவ ...

(மொகாடிசு)

சோமாலியாவின் கிஸ்மயூ துறைமுக நகருக்கு அண்மையில் இடம்பெற்ற தற்கொலை கார்க்குண்டுத் தாக்குதலில் அந்நாட்டின் 30 படை வீரர்கள் உயிரிழந்துள்ளனர்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை இந்தத் தாக்குதல் சம்பவம் இடம் பெற்றது.

வெடிகுண்டுகள் நிரப்பப்பட்ட கார் ஒன்றை அங்குள்ள இராணுவத் தளத்தின் மீது தீவிரவாதிகள் மோதி இந்தத் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.



அதனையடுத்து குறித்த இராணுவத்தளத்தினுள் நுழைந்த தீவிர... வாதி... தாக்கு...

# அமேசன் காட்டில் 22 ஆ...

# தனிமையில் வசிக்கும் க...

(பிரேசிலியா)

அமேசன் காட்டில் தனது இனத்தினர் அனைவரும் கொல்லப்பட்ட நிலையில் காட்டுவாசி ஒருவர் தன்னந்தனியாக 22 ஆண்டுகளாக வசித்து வருவது வியப்பை ஏற்படுத்தியுள்ளது.

தென் அமெரிக்க கண்டத்தில் உள்ள பிரேசில் நாட்டில் அமேசன் காடுகளில் இப்போதும் பல்லாயிரக்கணக்கான காட்டுவாசி மக்கள் வசித்து வருகிறார்கள். வெளியாட்களுடன் எந்தத் தொடர்பும் இல்லாமல் அவர்கள் அடர்ந்த காடுகளில் சுற்றி திரிகிறார்கள்.

அமேசன் காடுகளை அழித்து விவ... சாய ... தொடர்... பண்ண... அந்த ... வாசிக... இ... னியா ... விவசா...

# ஒரிசாவில் கனமழை 12 பேர் உயிரிழப்பு!

(புவனேஸ்வர்)

ஒரிசாவில் பெய்துவரும் கனமழைக்கு இதுவரை 12 பேர் உயிரிழந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஒரிசா மாநிலத்தில் கடந்த சில தினங்களாக கனமழை பெய்து வருவதால் தாழ்வான பகுதிகளில் தண்ணீர் சூழ்ந்துள்ளது. ஏராளமான வீடுகளுக்குள் தண்ணீர் புகுந்துள்ளது.

இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை கடுமையாக



பாதிக்கப்பட்டுள்ளது. மேலும், மழை பாதிப்பு பகுதிகளில், பேரிடர் மீட்புக்குழுவினர் மற்றும் தீயணைப்பு வீரர்கள் மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

கனமழைக்கு இதுவரை 12 பேர் உயிரிழந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

தொடர்ந்து பெய்து வரும் கனமழையால் அம்மாநிலத்தின் மகாநதி மற்றும் பைடாராணி ஆறுகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. எந்த ஒரு அவசரநிலைமையையும் சமாளிக்கவும், கனமழையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான உதவிகளைச் செய்யவும் தயார் நிலையில் இருக்குமாறு அதிகாரிகளுக்கு அம்மாநில முதலமைச்சர் நவின் பட்நாயக் அறிவுறுத்தியுள்ளார். (7-8)

# வெளிநாடு

# காட்டுத்தீ!

# உயிரிழப்பு



தொடர்ந்து மீட்புப் பணிகள் நடைபெற்று வரும் நிலையில், தீயில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 20 ஐ தாண்டியதாக அரசு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இன்னும் சில பகுதிகளை நெருங்க முடியாத நிலை இருப்பதால், உயிரிழப்பு அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது.

தீயைக் கட்டுக்குள் கொண்டு வரும் பணியில் நூற்றுக்கணக்கான தீயணைப்பு வீரர்கள் ஈடுபட்டுள்ளனர். (7-8)

கிக்
பகு
கும்
இற்
யில்
ப்ப
ன்ற
ண்
டி 7
50 யான தீக்காயம் அடைந்திருப்பதாக
மை வும் தகவல் தெரிவிக்கப்பட்டது.



# ...த் தாக்குதல்!

# ...வ வீரர்கள் பலி




ணு வாதிகள் தளத்தைக் கைப்பற்றி
விர தாக்குதல் நடத்தியுள்ளனர். இதன்

போது 27 படைவீரர்கள் கொல்லப்பட்டனர்.

எனினும் மேலதிக படையினர் வரவழைக்கப்பட்டு நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதாக அந்நாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன.

இத்தாக்குதலை அல் ஷபாப் என்ற தீவிரவாத அமைப்பினர் நடத்தியுள்ளனர்.

கடந்த ஜூன் மாதமும் இராணுவத் தளம் ஒன்றின் மீது குறித்த அமைப்பு நடத்திய தாக்குதலில் 7 படை வீரர்கள் காயமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (7-8)

# ...ஆண்டுகளாக

# ...ம் காட்டுவாசி

ள்ள சாய பண்ணைகளாக மாற்றுவது
ளில் தொடர்ந்து நடந்து வருகிறது. அவ்வாறு
காட் பண்ணைகளை உருவாக்குபவர்கள்
கள். அந்த காடுகளில் வசிக்கும் காட்டு
யும் வாசிகளை கொன்று விடுகிறார்கள்.
டுக இவ்வாறு அங்குள்ள ரொண்டோனியா பகுதியில் 1996ஆம் ஆண்டு
விவ விவசாய பண்ணை உருவாக்கப்பட்ட

போது அந்த இடத்தில் 7 பேர் கொண்ட காட்டுவாசிகள் வசித்து வந்தனர்.


அவர்களில் 6 பேரை விவசாய பண்ணை அமைத்தவர்கள் கொன்று விட்டனர். அதில் ஒருவர் மட்டும் தப்பினார். அங்கு சுமார் 10 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் அடர்ந்த காடுகள் உள்ளன. அந்தக் காட்டுக்குள் அவர் 22 ஆண்டுகளாக தனியாக வசித்து வருகிறார். (7-8)

# வடகொரியாவில் ஏவுகணை சோதனை மையம் அழிப்பு

## செய்மதி புகைப்படம் வெளியீடு

(பியாங்யாங்)

வடகொரியா நாடு, தங்களது ஏவுகணைச்சோதனை மையத்தை அழிக்கும் செய்மதி புகைப்படத்தை வெளியிட்டுள்ளது.



வடகொரியா தொடர்ந்து அணு ஆயுத சோதனை மற்றும் ஏவுகணைச் சோதனைகள் நடத்தியதால் கொரிய தீபகற்பத்தில் போர்ப்பதற்றம் நிலவியது.

எனவே அதை முடிவுக்கு கொண்டுவர தீவிர ஏற்பாடுகள் நடைபெற்றன.

வடகொரியா-தென் கொரியா இடையே அமைதி பேச்சுவார்த்தை நடந்தது. வடகொரியா ஜனாதிபதி கிம் ஜாங் உன்னும், தென்கொரிய ஜனாதிபதி மூன் ஜே இன்னும் பேச்சுவார்த்தை நடத்தினார்கள்.

இந்தப் பேச்சுவார்த்தையின் விளைவாக வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் தனது மிரட்டல்போக்கை கைவிட்டு அமெரிக்காவுடன் சமரசமாக செல்ல முன்வந்தார்.

அதன்பின்னர் பேச்சுவார்த்தைக்கான கதவுகள் திறந்தன. இதற்காக சிங்கப்பூரில் கடந்த ஜூன் 12ஆம் திகதி டொனால்ட் ட்ரம்ப் மற்றும் கிம் ஜாங் உன் ஆகியோருக்கு இடையே வரலாற்றுச் சிறப்பு மிக்க சந்திப்பு நடைபெற்றது.

அப்போது இருநாடுகளுக்கும் இடையே முக்கிய ஒப்பந்தம் கையெழுத்தானது. அதில், வடகொரியாவில் உள்ள அணு ஆயுதங்கள் அனைத்தையும் அழித்து விடுவதாக கிம் ஜாங் உன் ஒப்புதல் தெரிவித்திருந்தார்.

ஆனால், அதன்பிறகு அணு ஆயுதங்களை அழிக்கும் நடவடிக்கையில் வடகொரியா ஆர்வம் காட்டாததால் அந்நாட்டின் மீது விதிக்கப்பட்டிருந்த பொருளாதாரத் தடைகளை நீக்க முடியாது என அமெரிக்கா அண்மையில் அறிவித்தது. இதனால் இருநாடுகளுக்கும் இடையே மீண்டும் பாரிய மோதல் போக்கு உருவாகும் நிலை ஏற்பட்டது.

இந்நிலையில், சிங்கப்பூர் ஒப்பந்தத்தின் போது கிம் அளித்த ஒப்புதலை நிறைவேற்றும் விதமாக அந்நாட்டில் சோகே எனும் இடத்தில் உள்ள ஏவுகணை ஏவுதளத்தை அழிக்கும் நடவடிக்கையை வடகொரியா ஆரம்பித்து விட்டது. இதற்கான செய்மதிப் புகைப்படத்தை அந்நாட்டு ஊடகம் வெளியிட்டுள்ளது.

வடகொரியா, கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளை தயாரிக்கவும், அணு ஆயுத சோதனைகளை மேற்கொள்ளவும் இந்த சோகே ஏவுகணை ஏவுதளம் முக்கிய பங்காற்றியது என்பது குறிப்பிடத்தக்கது. (7-8)

## வரி விதிப்புக் கொள்கை

# ட்ரம்பைக் கோழிக்குஞ்சாக சித்திரித்த எதிர்ப்பாளர்கள்

(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் வரிக் கொள்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து, அவரது உருவத்தையொத்த பிரமாண்டமான கோழிக்குஞ்சு பலூனொன்றை படகில் கட்டிக் கொண்டு சென்றுள்ளனர்.



கலிபோர்னியாவின் சான் பிரான்ஸிஸ்கோவிலுள்ள அல்காட்ராஸ் தீவில் காணப்படும் சிறைச்சாலைக்கு அருகில், படகொன்றின் மேல் ஏற்றி குறித்த ட்ரம்ப் கோழிக்குஞ்சு பலூன் கொண்டு செல்லப்பட்டது.

தங்க நிறத்தில், 33 அடி உயரத்தில், சிறைச்சாலை சீருடையை போன்ற உடை அணிவிக்கப்பட்டு, குறித்த ட்ரம்ப் கோழிக்குஞ்சு பலூன் ஊர்வலமாக கொண்டு செல்லப்பட்டது.

சீனா, ஐரோப்பா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுக்கு எதிராக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் வரி விதித்து வருகின்ற நிலையில், அதற்கு எதிராகவே இந்த வித்தியாசமான எதிர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

'உங்களது வரிக்கொள்கையை மீளப் பெற்றுக் கொள்ளுங்கள். இது மக்களின் கோரிக்கை' என்ற வாசகம் அடங்கிய பதாகையும் குறித்த படகில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது.

ட்ரம்ப் எதிர்ப்பாளர்களால் கடந்த வருடம் ஏப்ரல் மாதத்திலும் இவ்வாறான உருவப் பலூனொன்று கொண்டு செல்லப்பட்டது.

இதேவேளை, ட்ரம்பின் குடியேற்றக்கொள்கை மற்றும் மதக்கொள்கை என்பவற்றிற்கு எதிர்ப்புத் தெரிவித்து, லண்டன் நாடாளுமன்ற வளாகத்தில் இம்மாத ஆரம்பத்தில் பாரிய குழந்தை பொம்மை பலூனொன்று பறக்கவிடப்பட்டிருந்தது. பிரித்தானியாவிற்கு ட்ரம்ப் விஜயம் செய்திருந்த சந்தர்ப்பத்தில், இந்த எதிர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (7-8)




# மூன்று வயது சிறுவன் மீது அசிட் வீச்சு; மூவர் கைது

(லண்டன்)

ம்த்திய இங்கிலாந்தில் உள்ள பிரபல ஷொப்பிங் மாலில் 3 வயது சிறுவன் மீது அசிட் வீசிய மூன்று பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மத்திய இங்கிலாந்துக்கு உட்பட்ட வார்செஸ்ட்டர் நகரில் உள்ள ஹோம் பார்கெய்ன்ஸ் ஷொப்பிங் மாலுக்குள் கடந்த 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நுழைந்த சிலர் அங்கிருந்த மூன்று வயது சிறுவன் மீது அசிட் வீசினர். இதில் படுகாயமடைந்த சிறுவன் சிகிச்சைக்கு பின்னர் வீடு திரும்பினான்.

இந்தச் சம்பவம் தொடர்பாக 22, 25 மற்றும் 26 வயதுடைய மூன்று பேரை பொலிஸார் கைது செய்து விசாரித்து வருகின்றனர். (7-8)

# ராஜபக்ஷர்கள் காலத்தில் 55 ஆயிரம் குற்றங்கள் பதிவாகியுள்ளன-சம்பிக்க



(கொழும்பு)
ராஜபக்ஷர்கள் ஆட்சிக் காலத்தில் சுமார் 55 ஆயிரம் குற்றங்கள் பதிவாகியுள்ளதாக மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

நல்லாட்சியின் அமைச்சர்கள் எவராவது. போதைப் பொருள் கடத்தலில் ஈடுபடும் பாதாள உலக கோஷ்டியினரோடு தொடர்பு வைத்திருந்தால் அதுதொடர்பில் ஆதாரங்களுடன் நிரூபிக்க வேண்டுமெனவும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

மேலும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தைபோன்று, வெள்ளை வான் கலாசாரம் தற்போது இல்லை எனவும் அவ்வாறு வெள்ளை வான் கடத்தல்கள் இடம்பெறுவதாக ஆதாரங்கள் இருந்தால் அதனையும் நிரூபித்து காட்டவேண்டுமெனவும் ஒன்றிணைந்த எதிரணியினரிடம் சம்பிக்க சவால் விட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# பாதுகாப்பு அதிகாரிகளுடன் அமெரிக்க ஜெனரல் சந்திப்பு

(கொழும்பு)
அமெரிக்க இராணுவத்தின் பசுபிக் கட்டளைப் பீடத் தளபதி ஜெனரல் ரொபேர்ட் பிறவுண் தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் பாதுகாப்பு உயர் அதிகாரிகளைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தினர்.

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்ட ஜெனரல்ரொபேர்ட் பிறவுண் நேற்று முன்தினம் பாதுகாப்பு அமைச்சுக்குச் சென்று பாதுகாப்புச் செயலர் கபில வைத்தியரத்னவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து இதன் போது பேசப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சந்திப்பில் இலங்கைக்கான அமெரிக்காவின் துணைத் தூதுவர் ரொபேர்ட் ஹில்டன் மற்றும் பாதுகாப்பு அமைச்சுக்கான இராணுவ இணைப்பதிகாரி மேஜர் ஜெனரல் ரணவக்கவும் பங்கேற்றிருந்தனர்.

அதேவேளை, விமானப்



படைத் தலைமையகத்துக்கும் சென்றிருந்த ஜெனரல் ரொபேர்ட் பிறவுண், இலங்கை விமானப்படைத் தளபதி எயர் மார்ஷல் கபில ஜயம்பதியைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியுள்ளார். (இ-7)

## ஆளும் தரப்பிற்கு தோல்வி பயம்

# 2020 வரை தேர்தலை நடத்துவது சாத்தியமேயில்லை-மகிந்தானந்த

(கொழும்பு)
அரசாங்கத்துக்கு தோல்வி பயம் இருப்பதனால் மாகாண சபைத் தேர்தலை எதிர்வரும் 2020 ஆம் ஆண்டு வரை நடத்தாமல் விடக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக கூட்டு எதிரணியின் பாராளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்.

ஐக்கிய தேசியக் கட்சி மாகாணசபைத் தேர்தல்களை விகிதாசார பிரதிநிதித்துவ முறையிலேயே நடத்த வேண்டும் என்று வலியுறுத்



துகின்றது. அதேவேளை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி கலப்பு முறையில் மாகாண சபைத் தேர்தல்களை நடத்த வேண்டும் என்று விரும்புகிறது. இவ்வாறான முரண்பாடுகள் தொடர்ந்தும் நீடிக்குமாயின் மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவது சாத்தியமற்றதாகவே இருக்கும்.

மேலும் தோல்வி பயம் காரணமாகவே அரசாங்கம் மாகாணசபை தேர்தல்களை உரிய காலத்தில் நடத்தாமல் தாமதித்துக் கொண்டு வருகின்றது. அரசாங்கக் கட்சிகளுக்கு இன்னமும் தோல்வி பயம் இருப்பதால் இத் தேர்தல்களை 2020 வரை நடத்தாமல் விடக்கூடிய சாத்தியமும் காணப்படுகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பௌத்தர்களின் பிரச்சினைகளை கண்டறிய ஆணைக்குழு அமைப்பு

(கொழும்பு)
பௌத்த சாசனம், பௌத்தர்களின் கௌரவம் மற்றும் அவர்களின் உரிமைகள் என்பவற்றைப் பாதுகாப்பதனை நோக்கமாகக் கொண்டு தேவையான பரிந்துரைகளை முன்வைப்பதற்கு பௌத்த உரிமைகள் தொடர்பான விசாரணை ஆணைக்குழு ஒன்றை அமைக்க அகில இலங்கை பௌத்த மகா சம்மேளனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

பிரதான மகாநாயக்கர்களின் ஆசீர்வாதத்துடன் இந்த ஆணைக்குழு அமைக்கப்பட்டுள்ளதாக சம்மேளனத்தின் தலைவர் ஜகத் சுமதிபால தெரிவித்துள்ளார்.

இந்த ஆணைக்குழுவின் தலைவராக ஓய்வு பெற்ற ஜனாதிபதி சட்டத்தரணி பாலித பிரணாந்து நியமிக்கப்பட்டுள்ளார். இதன் செயலாளராக ஓய்வு பெற்ற பிரதிப் பொலிஸ் மா அதிபர் சந்திரா நிமல் வாகிஸ்ட நியமிக்கப்பட்டுள்ளார். இவ்வாணைக்குழுவில் 21 பேர் அங்கம் வகிக்கின்றனர்.

இந்த ஆணைக்குழுவுக்கு கருத்துக்கள், ஆலோசனைகள், தகவல்கள், முறைப்பாடுகள் என்பவற்றை சமர்ப்பிக்குமாறு அனைத்து பௌத்த மக்களிடமும் சகல இலங்கையர்களிடமும் ஜகத் சுமதிபால வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்தக் கருத்துக்களை எதிர்வரும் 2019 ஜூன் 26 ஆம் திகதி வரை சமர்ப்பிக்க முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்த நாட்டில் சிறுபான்மையினருக்கு மட்டுமல்ல பிரச்சினைகள் பௌத்தர்களுக்கும் சொல்லமுடியாத பல பிரச்சினைகள் இருப்பதாகவும் அவர்களது பிரச்சினைகளைப் பற்றி எந்தவொரு அரசியல்வாதிகளும் கவனம் செலுத்துவதில்லையெனவும் கடந்த காலங்களில் பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தொடர்ந்தும் கூறிவந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## இன்று ஒரு தகவல்

### காலம் வரும்வரை காத்திருப்போம்!

பொறுமையாகக் காத்திருங்கள் என்று எழுதவே பயமாக உள்ளது. காரணம் பாதிப்பேர் இதைத்தான் மிகப் பிரமாதமாகச் செய்து கொண்டிருக்கிறார்களே!

நம்ம லேனாவே சொல்லிவிட்டார் என்று கவிழ்ந்தடித்துப் படுத்துக்கொண்டு காலங்களை விரயமாக்கி விட்டால் என்னாவது என்கிற பயமும் கூடவே வருகிறது.

காத்திருப்பது என்றால் சோம்பிக் கிடப்பது அல்ல! கண்கொத்திப் பாம்பாய்க் காத்திருப்பது. குட்டி மீன்களைத் தவிர்த்துவிட்டுக் கொழுகொழு மீன் வரும் வரை காத்திருக்கும் கொக்கின் செயலைப் போன்றது இது.

வங்கியில் போட்ட தொகையை முதிருமுன் எடுத்தால் வட்டி நட்டம்தான். அழகான ரோஜா மலரை மொட்டிலேயே பறித்து என்ன பயன்? இனிக்கும் ஒரு பழத்தைப் பச்சைக் காயாகப் பறிப்பது எதற்காக? அடுப்பிலிருந்து வேகும் முன் மாவாக அள்ளித்தின்ன நினைக்கும் அவசரம் சரியான செயலாகுமா?

''இப்பவே எனக்கு பிஸ்கெட் வேணும்'' என்று அடம்பிடிக்கும் குழந்தைக்கும் அவசியமே இல்லாத சூழ்நிலையிலும் அவசரப்படும் மனிதர்களுக்குமிடையே என்ன வித்தியாசம் இருக்க முடியும்?

எனவே, காத்திருப்பது என்பது காலம் கனியக் காத்திருப்பது, காலத்தை விரயமாக்கிக்கொண்டு காத்திருப்பது அல்ல.

பொறுமையாய் இருப்பது என்பது அடியோடு செயற்படாமல் இருப்பதல்ல, மெதுவாகவும் உறுதியாகவும் இலக்கை நோக்கி நகர்வது. மாறாக, தள்ளிப் போடுவதோ தப்பித்தோ அல்ல!

சந்தர்ப்பங்களை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டேயிருந்து இதுதான் தருணம் எனக் கணித்து செற்படுவதுதான் புத்திசாலித்தனம்.!

எடுத்தேன் கவிழ்த்தேன் என்றவர்கள் எங்கோ காணாமற் போய்விட்டார்கள். காய்களை மெல்ல நகர்த்தி சாதகமான சூழ்நிலைகளை வலிய உருவாக்கி எதிரிகளை ஒரு தட்டுத் தட்டியவர்கள் அழகாய் வென்றார்கள்.

வாழ்க்கையில் முக்கியமான முடிவுகளை எடுக்கும் போதெல்லாம் பொறுமையான அணுகுதல்களே உதவியிருக்கின்றன. விழுந்தடித்துக்கொண்டு போய்ச் சாதித்தவர்கள் சிலர் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆனால், இவர்களைவிட காத்திருந்து வென்றவர்களே உலகில் அதிகம்.

**லேனா தமிழ்வாணன்**

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள்

ஆசிரியர்: செல்வி தா.குணரஞ்சினி
(யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை
ஓய்வு பெற்ற ஆசிரியர்)

## வினாத்தாள் பகுதி I

தமிழ்மொழி
நேரம் : ஒரு மணித்தியாலம்

- *சரியான விடையின் கீழ்க்கோடிடுக.*

**01.** ஆறாயிரத்து அறுபத்தாறு என்பதை இலக்கத்தில் எழுதினால்?
1. 6666 2. 6006 3. 6066 4. 60066

**02.** 9099 இதனைச் சொற்களில எழுதினால்?
1. தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றொன்பது
2. ஒன்பதாயிரத்துத் தொளாயிரம்
3. ஒன்பதாயிரத்து தொண்ணூற்றொன்பது
4. தொள்ளாயிரத்துத் தொண்ணூறு

**03.** தரப்பட்ட எண்ணில் நூறாமிடத்தில் 6 ஐக் கொண்ட எண் எது?
1. 6332 2. 5632 3. 5362 4. 5326

**04.** 7548 இந்த எண்ணில் இலக்கம் 5 குறிக்கும் பெறுமானம் (பெறுமதி யாது?
1. 100 2. 500 3. 50 4. 5

**05.** 9682 இந்த எண்ணில் இலக்கம் 9 குறிக்கும் இடம் யாது?
1. 9 2. 90 3. 1000 4. 9000


**06.** தரப்பட்ட எண்களில் மிகப் பெரிய எண் எது?
1. 6969 2. 9669 3. 9966 4. 6999

**07.** தரப்பட்ட எண்களில் மிகச் சிறிய எண் யாது?
1. 2332 2. 2432 3. 2457 4. 2233

**08.** 8 6 2 3 இந்த இலக்கங்களால் ஆக்கக்கூடிய மிகப் பெரிய எண் எது?
1. 6238 2. 8632 3. 6328 4. 8326

**09. 3000 + 50 + 7 + 600**
1. 3576 2. 3675 3. 7653 4.3657


**10.** தரப்பட்ட எண் சட்டத்தால் காட்டப்படும் எண் எது?




1. 2307 2. 7032
3. 2317 4.2475

- *சரியான விடைகளைப் புள்ளிக் கோட்டில் எழுதுக?*

**11.**




புகைவண்டி பெட்டிகளில் உள்ள இலக் கங்களால் ஆக்கக் கூடிய மிகப் பெரிய எண் யாது?
..............................

**12.**




மீனா உருவாக்கக்கூடிய மிகச் சிறிய எண்ணை எழுதுக?
..............................

**13.**




சமன் உருவாக்கக் கூடிய மிகப் பெரிய எண்ணை எழுதுக?
..............................

**14.** பெட்டியினுள் தரப்பட்டுள்ள எல்லா இலக்கங்களையும் பயன்படுத்தி அமைக்கத்தக்க மிகச் சிறிய எண்ணை எழுதுக?


| | |
|---|---|
| 7 | 2 |
| 5 | 9 |

..............................

**15.** 5, 4, 8 என்னும் எண் அட்டைகளைப் பயன்படுத்தி அமைக்கத்தக்க ஆறு எண் களையும் இறங்குவரிசையில் ஒழுங்குபடுத்தி வெற்றிடங்களை நிரப்புக.

.................... 845 ...................., .................... 485 ....................

**16.** வட்டத்திலுள்ள இலக்கங்களைப் பயன்படுத்தி அமைக்கத்தக்க மிகப் பெரிய எண்ணை எழுதுக?




..............................

**17.** ஏறுவரிசைப்படுத்தி எழுதுக?
4835, 4698, 4730, 4860 ..............., ..............., ..............., ...............,

**18.** 7630 இல் இலக்கம் 6 இன் பெறுமதியாது? ..............................


**19.** 9072 என்ற எண்ணில் 0 இன் இடப் பெறுமானம் யாது? ..............................

**20.** 593, 529, 581, 536 என்னும் எண்களை ஏறுவரிசையில் எழுதும் போது கிடைக் கும் முதலாம் எண்ணினதும் நான்காம் எண்ணினதும் நடுவில் இருக்கும் இலக்கங்களை எழுதுக? ..............................

**21.** ☐ ☐ ☐ ☐

2 8 1 5 இவ்வெண் அட்டைகளைப் பயன்படுத்தி நூறாம் இடத்தில் இலக்கம் 5 வரக்கூடியதாக இரு எண்கள் எழுதுக? ..............................


**22.**




இந்த எண் சட்டத்தில் வகை குறிக்கப்படும் எண்ணை இலக்கத்தில் எழுதுக?
..............................

**23.** பின்வரும் எண்ணை எண் சட்டத்தில் வரைந்து காட்டுக.

**4305**




- **எழுத்தில் எழுதப்பட்டவற்றை இலக்கங்களில் எழுதுக.**

**24.** ஐயாயிரத்துப் பதினைந்து ..............................

**25.** ஒன்பதாயிரத்து இருபத்தைந்து ..............................

**26.** எண்ணாயிரத்துத் தொண்ணூற்று மூன்று ..............................


- **இலக்கங்களில் எழுதப்பட்ட எண்களை சொற்களில் எழுதுக.**

**27.** 5345 ..............................

**28.** 8470 ..............................

**29.** 2636 ..............................

**30.** A,B,C,D என்னும் ஒவ்வொரு முக்கோணியிலும் உள்ள மிகப்பெரிய இலக்கத் தைப் பயன்படுத்தி ஆக்கத்தக்க மிகச் சிறிய எண்ணை எழுதுக.




..............................

**31.** கட்டத்தில் உள்ள எண்களை இறங்குவரிசையில் எழுதுக.

| | |
|---|---|
| 5378 | .............................. |
| 4269 | .............................. |
| 8400 | .............................. |
| 3294 | .............................. |

# தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் கறுப்பு ஜூலை 35ஆவது ஆண்டு நினைவேந்தல்







(யாழ்ப்பாணம்)

இலங்கையில் கடந்த 1983 ஆம் ஆண்டு திட்ட மிட்ட வகையில் இடம்பெற்ற இனக்கலவரத்தின் போது படுகொலை செய்யப்பட்ட மக்களின் நினைவு நாளான கறுப்பு ஜூலையின் 35 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிக ழ்வு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் யாழ். கொக்குவில் சபாபதிப்பிள்ளை வீதியிலுள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் திருமதி வாசுகி சிவகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வு அகவணக்கத்துடன் ஆரம் பமாகியது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலை வர் கஜேந்திரகுமார் பொன் னம்பலம் ஈகச் சுடரேற்றி னார். அதனைத் தொடர்ந்து கட்சி உறுப்பினர்கள் சுட ரேற்றி உணர்வுபூர்வ அஞ்சலி செலுத்தினர். அத னைத் தொடர்ந்து மலரஞ் சலி செலுத்தப்பட்டதுடன் கறுப்பு ஜூலையை நினைவு கூரும் வகையிலான நினைவுரை களும் இடம்பெற்றன. (இ-9)

## துப்பாக்கிதாரிகள் தப்பியோட்டம்

மாத்தறை கம்புறுபி ட்டிய ஹொரபாவிட்ட பிரதே சத்தில் நேற்று முன்தினம் இரவு வர்த்தகர் ஒருவர் மீது மேற்கொள்ள திட்டமிட்ட துப்பாக்கிப் பிரயோக முயற்சி தோல்வியடைந் துள்ளது. மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு நபர்களால் இந்த துப்பாக்கிப்பிரயோக முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்போது அவர்க ளின் துப்பாக்கி இயங்காததா லேயே மேற்படி இருவரும் தப்பிச் சென்றுள்ளதாக பொலி ஸார் தெரிவித்துள்ள னர். (இ-7)

## விடுமுறையின் பின்னர் சீருடை வவுச்சர்

(கொழும்பு)

பாடசாலை மாணவர் களுக்கு, அடுத்த வருடத் திற்கான சீருடை வவுச்சர் இரண்டாம் தவணை விடு முறைக்குப் பின்னர் வழங் கப்படுமென, கல்வி அமை ச்சு அறிவித்துள்ளது.

இதற்குத் தேவையான ஆரம்பகட்ட நடவடிக்கை கள் பூர்த்தி செய்யப்பட்டி ருப்பதாகவும் அந்த அமை ச்சு தெரிவித்துள்ளது.

43 இலட்சம் பாடசாலை மாணவர்களும், பிரிவெ னாக்களில் கல்வி பயில் வோரும் தேவையான சீரு டைத்துணியை வவுச்சர் மூலம் பெற்றுக்கொள்ள முடி யுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்தமுறையைப்போன்று இம்முறையும் இந்த வவுச் சர் நடைமுறை முன்னெடுக் கப்பட்டிருப்பதாகவும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

தேவையான நிதி அர சாங்கத்தினால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும், மாணவர் ஒருவருக்கு ஒதுக் கப்படும் நிதி சுயாதீனக் குழு மூலம் தீர்மானிக்கப்படு வதாகவும் அமைச்சு தெரி வித்துள்ளது. (இ-7)


## கடலில் தத்தளித்த ரஷ்ய பிரஜை மீட்பு

(கொழும்பு)

காலியிலிருந்து 146 கடல்மைல் தூரத்தில், தத்தளித் துக்கொண்டிருந்த ரஷ்ய பிரஜையொருவர், கடற்படையினரால் மீட்கப் பட்டு, கராப்பிட்டிய வைத் தியசாலையில் அனும திக்கப்பட்டுள்ளார்.

வர்த்தக கப்பலொன்று விபத்துக்குள்ளானதிலேயே, ரஷ்ய பிரஜை கடலில் விழு ந்து தத்தளித்து கொண்டி ருந்ததாக இலங்கை கடற் படையினர் தெரிவித்துள் ளனர். (இ-7)

**32. A,B,C,D என்னும் ஒவ்வொரு முக்கோணியிலும் உள்ள மிகச்சிறிய இலக்கத் தைப் பயன்படுத்தி ஆக்கத்தக்க மிகப் பெரிய எண்ணை எழுதுக.**




_______________

**33. 35824 என்னும் எண்ணை பின்வரும் எண்சட்ட அட்டையில் எண்களைக் காட்டுக.**

| பத்தாயிரம் | ஆயிரம் | நூறு | பத்து | ஒன்று |
|---|---|---|---|---|
| | | | | |

**34. பின்வரும் எண் சட்ட அட்டையினால் காட்டப்படும் எண்ணை எழுதுக.**

| பத்தாயிரம் | ஆயிரம் | நூறு | பத்து | ஒன்று |
|---|---|---|---|---|
| ●●● | ●● | ●●●● ●●● | ●● ●● | ●●●● ●●●● |

**35. வெற்றிடத்தை நிரப்புங்கள்.**

| ஆயிரம் | நூறு | பத்து | ஒன்று | எண் |
|---|---|---|---|---|
| மூன்று | இரண்டு | ஆறு | இல்லை | |

**36. நாற்பத்து ஐயாயிரத்து அறுநூற்று எழுபத்தைந்து என்பதை இலக்கத்தில் எழுதுக.**

..............................................

**37. 20000 இதனைச் சொற்களில் எழுதுக.**

..............................................

**38. முப்பத்தொன்பதாயிரத்து அறுபத்து எட்டு என்பதை இலக்கத்தில் எழுதுக.**

..............................................

**39.**



பூச்சாடியில் உள்ள பூக்களின் எண்ணிக்கையை உரோமன் எண்களில் எழுதுக?

..............................................

**40.**




இந்த எண்ணைச் சொற்களில் எழுதுக.

..............................................

**41.**




இந்தக்காரின் இலக்கத்தைச் சொற்களில் எழுதுக.

- இடப் பெறுமானத்தைப் பார்த்து இவ்வெண்கள் ஒவ்வொன்றிலும் சதுரக் கட்டத்தினுள் உள்ள இலக்கத்தின் பெறுமானத்தை எதிரே உள்ள வெற்றிடத்தில் எழுதுக.

**42.** 5 [5] 5 5 ..............................................

**43.** [8] 8 8 8 ..............................................

**44. சிறிய எண்ணைச் சுற்றி வட்டமிடுக.**

5634 5346 3456 4536

**45. விரித்து வைக்கப்பட்ட ஓர் அகராதியின் வலப்பக்க எண் 1199 ஆகும். அடுத்த தாக விரிக்கும் போது வரும் பக்கங்கள் இரண்டினதும் எண்கள் முறையே எழுதுக?**

..............................................

**46. பயணத்தை ஆரம்பிக்கும் போது ஒரு வாகனத்தின் மானியின் இலக்கங்கள் பின் வருமாறு பதியப்பட்டிருந்தன.**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 0 | 1 | 3 | 9 | 9 | 0 | km |

வாகனம் மேலும் 10 km சென்றபின் மானியில் பதிவாகும் இலக்கங்கள் வெற்றுக் கூட்டினுள்ளே எழுதுக.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | km |

- [54827] இந்த அட்டையில் உள்ள எண்ணில்.

**47. ஆயிரத்தினிடத்திலுள்ள இலக்கத்தையும் பத்தினிடத்திலுள்ள இலக்கத்தையும் இடம் மாற்றினால் கிடைக்கும் எண் யாது?**

**48. நூறினிடத்தில் இருக்கும் இலக்கம் காட்டும் பெறுமானம் யாது?** ..............

**49. முந்திய பிந்திய எண்ணை எழுதுக.**

.................... 49 999 ....................

# வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரியில் தொடரும் அதிகார துஷ்பிரயோகத்தை எதிர்த்து போராட்டம்






(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் இடம்பெறும் அதிகார துஷ்பிரயோகங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து கல்லூரியின் பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகளால் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று நேற்றுக் கல்லூரி முன்றலில் இடம்பெற்றது.

இப்போராட்டத்தை முன்னெடுத்தவர்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி இலங்கை அரசியலமைப்புக்கு அமைய நாடாளுமன்றால் ஒப்புதல் வழங்கப்பட்ட தென்னிந்திய திருச்சபையால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. கல்லூரியின் ஆளுநர் சபைக்கு தென்னிந்திய திருச்சபையின் பேராயர் பதவி வழியாகத் தலைவராக உள்ளார். அத்துடன், பாடசாலை அதிபர், பழைய மாணவர்களின் பிரதிநிதி, கல்வியியலாளர்கள் உள்ளிட்டோர் ஆளுநர் சபையின் உறுப்பினர்களாக உள்ள னர்.

ஆளுநர் சபையில் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு அமைய யாழ்ப்பாணக் கல்லூரியின் நிர்வாக ரீதியான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இந்த நிலையில் தற்போது தென்னிந்திய திருச்சபையின் பேராயர் டானியல் தியாகராஜா, ஆளுநர் சபையில் ஜனநாயகத்தை பேணாமல் செயற்படுகிறார் என கல்லூரியின் பழைய மாணவர்களாலும் நலன்விரும்பிகளாலும் குற்றஞ்சாட்டப்பட்டதுடன், அமெரிக்காவிலுள்ள தர்மகர்த்தா சபைக்கு பல மனுக்கள் அனுப்பி வைக்கபட்டன.

அவற்றை ஆராய்ந்த தர்மகர்த்தா சபை, யாழ்ப்பாணக் கல்லூரியின் ஆளுநர் சபையிலும் கல்லூரியின் நிர்வாகத்திலும் மாற்றங்கள் ஏற்படுத்தப்படும் நோக்கில் ஆளுநர் சபையின் தலைவர் பேராயர் டானியல் தியாகராஜாவும், சபையின் உப தலைவரான சட்டத்தரணி செல்வி விஜ°லா அருளானந்தமும் பதவி விலகவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது.

இது இவ்வாறிருக்க யாழ்ப்பாண கல்லூரியின் அதிபரின் சுயாதீனத்துக்கும் பதவி நிலைக்கும் அச்சுறுத்தல் விடுக்கும் வகையிலும் கீழ் நிலை பதவிகளில் உள்ள சிலர் அண்மைக்காலமாக செயற்படுகின்றனர் என்றும் தென்னிந்திய திருச்சபைக்கும் அதில் உள்ளவர்களின் தேவைகளுக்கும் அமைய, கல்லூரி அதிபரின் ஒப்புதலின்றி ஆசிரியர்கள் நியமிக்கப்படுவதுடன், அவர்களுக்கு பொருத்தமற்ற பாடநெறிகளும் ஆளுநர் சபையின் தலைவரால் வழங்கப்படுகிறது.

சிலர் பொறுப்புமிக்க பதவி நிலைகளில் உள்ளபோதும் தமது வியாபாரத்தையும் கல்லூரிக்குள் முன்னெடுக்கின்றனர். ஆசிரியர்கள் சிலர் படப்பிடிப்பாளராகவும் கல்லூரி மாணவர்களை அழைத்து தனியார் கல்வி நிலையத்தையும் நடத்துகின்றனர்.

இந்தச் செயற்பாடுகளை முற்றிலுமாக நிராகரிக்கும் பாடசாலையின் மீது அக்கறை கொண்ட சமூகத்தினர் கல்வி, விளையாட்டு, இணைப் பாடவிதானச் செயற்பாடுகளில் மாணவர்களின் வளர்ச்சியை மையமாகக்கொண்டு பல்வேறு அழுத்தங்களை வழங்கி வந்தனர். எனினும் கல்லூரிச் சமூகத்தின் ஆலோசனைகள் -பரிந்துரைகள் ஆளுநர் சபையாலோ நிர்வாகத்தாலோ ஏற்றுக்கொள்ளப்படவில்லை. மாறாக அதிகார துஷ்பிரயோகங்களே முன்னெடுக்கப்படுகின்றன. இந்த நிலையிலேயே யாழ்ப்பாணக் கல்லூரியின் 150 ஆண்டுகால பாரம்பரியத்தையும் விழுமியங்களையும் பாதுகாப்போம் என பழைய மாணவர்களும் பெற்றோர்களும் நலன் விரும்பிகளும் இணைந்து கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுப்பதாக தெரிவித்தனர்.

கோசங்கள் எழுப்பாமல் அமைதிவழியில் முன்னெடுக்கப்பட்ட இந்தப் போராட்டத்தின் நோக்கம் தொடர்பில் பழைய மாணவர்கள் சார்பில் சட்டத்தரணி கனகரட்ணம் சுகாஷ், யாழ்ப்பாண பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதி பிறின்ஸ் ஜெயதேவன், பெற்றோர் சார்பில் யாழ்ப்பாண பல்கலைக்கழக சமூகவியல் துறைத் தலைவர் திருமதி. பகீரதி இரசனன் உள்ளிட்டோர் கருத்துக்களைத் தெரிவித்தனர். போராட்டத்தின் நிறைவில் யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் டேவிட் சதானந்தன் சொலமனிடம் மனு ஒன்றும் கையளிக்கப்பட்டது. (இ-9)

# மத்திய அரசின் திட்டங்கள் மாகாண சபை ஊடாகவே நடைமுறைப்படுத்தப்படவேண்டும்

## யாழ்.ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தில் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

மத்திய அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற திட்டங்கள் மாகாண சபை ஊடாகவே நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் நேற்று முன்தினம் யாழ்.மாவட்ட செயலக கேட்போர்கூடத்தில் இடம்பெற்றது. இதன்போது மத்திய அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் விடயங்களை மாகாண சபைக்கு தெரியப்படுத்தாது மேற்கொள்வதால் பல சிரமங்களை எதிர்கொள்வதாக வடக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா தெரிவித்தார்.

அதாவது பிரதமர் அலுவலகத்தால் ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவுகளுக்கும் 200 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதற்குரிய வேலைத்திட்டங்கள் இங்கு வந்துள்ளதாகத் தெரியவில்லை. இந்த வேலைத் திட்டங்களை யார் செய்வது? என்பது தெளிவுபடுத்தப்படவில்லை. இதேபோல் நிதியமைச்சினால் கூட்டுறவு திணைக்களத்திற்கு 2000 மில்லியன் ரூபா கடன் அடிப்படையில் வழங்குவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதை யார் நடைமுறைப்படுத்துவது என்பது தொடர்பில் தெளிவுகள் இன்றிக் காணப்படுகின்றன. ஆகவே திட்டங்கள் வரலாம். எவ்வாறு அதை நடைமுறைப்படுத்துவது என்பது தொடர்பில் ஒரு தெளிவு இல்லை. மத்திய அரசாங்கத்தின் ஒதுக்கீடாக இருந்தாலும் அதனை யார் நடைமுறைப்படுத்துவது என்பதை தெளிவுபடுத்த வேண்டும் எனத் தெரிவித்தார்.

இதற்கு பதிலளித்த அரச அதிபர் நா.வேதநாயகன், கடந்த 13 ஆம் திகதி இவ்விடயம் தொடர்பான சுற்றுநிருபம் கிடைக்கப்பெற்றது. ஒவ்வொரு பிரதேச செயலகத்திற்கும் 200 மில்லியன் ஒதுக்கப்படுவதாக நிதியமைச்சினால் தெரிவிக்கப்பட்டது. சுற்றுநிருபத்தில் எந்தெந்தத் துறைகளின் ஊடாக செய்வது என்பது தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. பிரதேச செயலகங்கள் தயாரித்து அரசியல் தலைமைகள் ஊடாக கலந்தாலோசித்து நடைமுறைப்படுத்துவது எனவும் கூறப்பட்டுள்ளது. இதேபோல் கூட்டுறவுத் துறைக்கு கடந்த வரவு-செலவுத் திட்டத்தில் வடக்கு, கிழக்கில் பாதிக்கப்பட்டுள்ள கூட்டுறவுச் சங்கத்திற்கு வழங்கி கூட்டுறவு ஆணையாளர் ஊடாக நடைமுறைப்படுத்துவது என தெளிவுபடுத்தப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

அக்கருத்தை மறுத்த வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம், குறித்த விடயத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. மாகாணத்திற்கென இருக்கின்ற கூட்டுறவு ஆணையாளர், மாகாண அமைச்சருக்கு தெரியாது, சபைக்கு தெரியாது. மத்திய அரசாங்கத்தின் 'நேரடி கண்காணிப்பில் செயற்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. திட்டங்களை நாங்கள் எதிர்க்கவில்லை. ஆனால் மாகாண சபை ஊடாகவே இதனை செயற்படுத்த வேண்டும் என தெரிவித்தார்.

இது தொடர்பில் வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சர் திருமதி.அனந்தி சசிதரன் கருத்துத் தெரிவிக்கையில்,

மத்திய அரசாங்கத்தினது கலந்துரையாடல் நடைபெறுகின்றபோது எமது திணைக்களத் தலைவர்கள் அதில் கலந்துகொள்கிறார்கள். ஆனால் நிதி ஒதுக்கீடுகள், திட்டங்கள் தொடர்பாக மத்திய அரசாங்கத்தினால் தெளிவுபடுத்திய பின்னரே எமக்கு தெரிவிக்கப்படுகிறது. ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட பின்னர் தான் எமக்கு தெரியவருகின்றது. வடக்கு மாகாண சபையின் நேரடிக் கட்டுப்பாட்டுக்குள்ளே கூட்டுறவுத்துறை வருகின்ற போதும் மீள்குடியேற்றம், புனர்வாழ்வு அமைச்சினால் செய்யப்படுகின்ற திட்டங்கள் கூட எங்களுடைய அமைச்சிற்கு வரவில்லை. நாங்கள் அடிக்கடி கூறுவது கூட்டுறவுத் துறை தொடர்பில் வேலைத்திட்டங்கள் செய்வதாயின் மாகாண திறைசேரி ஊடாக செய்யப்பட வேண்டும். ஆனால் நிதியமைச்சு, மீள்குடியேற்ற அமைச்சு நேரடியாகவே பங்குகொள்கிறது.

ஆனால் எமது அதிகாரிகளினாலே தான் இது செயற்பட்டு வருகின்றது. இவ்வாறு செய்வதானது வடக்கு மாகாணத்தை புறந்தள்ளி மத்திய அரசாங்கம் தன்னுடைய அரசியல் சார்ந்த நன்மைகளை செய்வதற்காக இதனை செய்து வருகின்றது என தெரிவித்தார்.

இறுதியாக கருத்துத் தெரிவித்த முதலமைச்சர், குறித்த விடயம் பரவலான பிரச்சினையாகக் காணப்படுகின்றது. குறிப்பாக தீர்மானங்களை எடுப்பது மத்திய அரசாங்கமாகவே உள்ளது. ஆனால் மக்கள் பிரதிநிதிகளிடம் இது தொடர்பில் எதனையும் அறிந்து கொள்வதில்லை. இது பெரும் பிரச்சினையாகவே தொடர்ந்தும் காணப்படுகின்றது. நான் பல தடவை இதனை வெளிப்படுத்தி வருகின்றேன்.

இதற்கென ஒரு திட்டத்தை வகுத்து இவ்வாறான திட்டங்கள் முன்வைக்கப்படுவது என்பது தொடர்பில் மாகாண அமைச்சர்களுக்கோ, மாகாண சபைக்கோ தெரியப்படுத்தி அதை கண்காணிக்கின்றதாக இருத்தல் வேண்டும்.

இதேவேளை மாகாண பிரதம செயலாளர் இவ்வாறான கூட்டங்கள் நடைபெறுவது தொடர்பில் மாகாண அமைச்சருக்கோ மாகாண சபைக்கோ தெரியப்படுத்துவது சிறப்பாக இருக்கும் என தெரிவித்தார்.

ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்ட குறித்த விடயமானது நிதியமைச்சு மற்றும் மீள்குடியேற்ற அமைச்சுக்கு தீர்மானமாக அனுப்பிவைப்பதென முடிவெடுக்கப்பட்டது. (இ-9)


### ஏல விற்பனை "திகதி மாற்றம்"

யா/யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலையின் ஏலவிற்பனைக்குரிய திகதி 02.08. 2018 இலிருந்து 30.07.2018 (திங்கட் கிழமை) மு.ப. 11.00 மணி என மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

அதிபர் (5050)

### தவறி விட்டது

23/07/2018 திங்கட்கிழமை இரவு ஆவணங்கள் அடங்கிய நீல நிறப்பை ஒன்று கம்பர்மலை-வல்லை-நெல்லியடிக்கிடைப்பட்ட பகுதியில் தவறிவிட்டது. இதனை கண்டெடுத்தவர்கள் பெருமனதோடு ஒப்படைத்து உதவுமாறு வேண்டுகின்றேன்.

தொடர்பு- 077 453 0788

### நம்பிக்கை இழக்க வேண்டாம்.

உங்களுக்காக நாங்கள் இருக்கிறோம்.

எந்தத் துயரமாயினும், அழையுங்கள். அல்லது நேரில் வாருங்கள்.

மதசார்பற்ற, இலவச சேவை. ரகசியமானது.

கை கொடுக்கும் நண்பர்கள்

யாழ்ப்பாணம்: 077 900 8776
(தினமும் மு.ப. 9.00 - பி.ப. 1.00)

வவுனியா: 024 324 4444
(சனி, ஞாயிறு மு.ப. 9.00 - பி.ப. 1.00)

# ஜனநாயகத்திற்கு எதிரான ஆட்சிக்கவிழ்ப்பே தேவை

# 20 ஆவது அரசியலமைப்பு தேவையில்லை - நாமல்


(கொழும்பு)

ஜனநாயகத்திற்கு எதிரான ஆட்சியை கவிழ்க்க வேண்டிய தேவை தற்போது ஏற்பட்டுள்ளது. எனவே நாட்டிலுள்ள சகல தரப்பினரதும் பங்களிப்புடன் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் ஐந்தாம் திகதி கொழும்பில் பாரிய பேரணியொன்றை நடத்தவுள்ளதாக கூட்டு எதிர்க் கட்சியில் அங்கம் வகிக்கும் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

அரசாங்கத்திற்கு எதிராக எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 17 ஆம் திகதி கொழும்பில் பாரிய பேரணி ஒன்றை நடத்துவதற்கு கூட்டு எதிர்க்கட்சியின் இளைஞர் அணி ஏற்கனவே தீர்மானித்திருந்தது. எனினும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலைமையில் இடம் பெற்ற கலந்துரையாடலின் பின்னர் குறித்த பேரணியை செப்டெம்பர் மாதம் ஐந்தாம் திகதி நடத்தத் தீர்மானம் எட்டப்பட்டது.

ஏனெனில் எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 17 ஆம் திகதியும் க.பொ.த. உயர்தரப் பரீட்சை நடைபெறும் தினமாகவுள்ளது. செப்டெம்பர் மாதம் முதலாம் திகதி வரை பரீட்சை தொடரவுள்ளது. அதனாலேயே அரசாங்கத்திற்கு எதிரான பேரணியை செப்டெம்பர் மாதம் ஐந்தாம் திகதி நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

ஆகவே செப்டெம்பர் மாதம் ஐந்தாம் திகதி நடைபெறவுள்ள குறித்த பேரணியில் நாடு தழுவிய ரீதியிலுள்ள தொழிற்சங்கங்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகள் என ஏராளமானோர் கலந்துகொள்ளவுள்ளனர்.



மேலும் நல்லாட்சி அரசாங்கம் புதிய அரசியலமைப்பை கொண்டு வரப் போவதில்லை. மாறாக வடக்கிலுள்ள மக்களின் வாக்குகளை பெறுவதற்காகவே இவ்வாறான கதைகளை கட்டவிழ்த்து விடுகின்றது எனவும் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார். பத்தரமுல்லையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஊடக வியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தச்சட்டம் கொண்டுவர வேண்டிய அவசியம் இல்லை. ஏனெனில் அரசியலமைப்பை மாற்றுவதற்காகவே அரசியலமைப்பு சபை உருவாக்கப்பட்டுள்ளது. அத்துடன் புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்காக பாராளுமன்றத்தை அரசியலமைப்பு சபையாக மாற்றியுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சர்வதேச சத்திடம் தெரிவித்துள்ளார்.

அவ்வாறெனின் ஏன் அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்டத்தை கொண்டுவர முனைய வேண்டும். அரசியலமைப்பு வழிநடத்தல் குழுவில் மக்கள் விடுதலை முன்னணியும் அங்கம் வகிக்கிறது. ஆகவே வழிநடத்தல் குழுவிலேயே அது குறித்து பேசித் தீர்மானித்திருக்கலாம். அதனை விடுத்து 20 ஆவது திருத்தம் கொண்டுவர வேண்டிய அவசியம் இல்லை.

ஆகவே நல்லாட்சி அரசாங்கம் அரசியலமைப்பை மாற்றப் போவதில்லை. வடக்கிலுள்ள மக்களின் வாக்குகளை பெற்றுக் கொள்வதற்கே புதிய அரசியலமைப்பு கொண்டுவரவுள்ளதாக கதைகளை கட்டவிழ்த்து விட்டுள்ளது. மேலும் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களை ஏமாற்றிக்கொண்டே நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. தற்போதும் அவ்வாறான செயற்பாடுகளையே மேற்கொண்டு வருகின்றது என நாமல் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பிறந்த எண்களின் அதிர்ஷ்ட இரகசியம்

பெரிய மனிதர்கள் தங்களுடைய காரியங்களுக்கு இவர்களைப் பயன்படுத்திக்கொண்டு பிறரிடம் இவர்களைப் பற்றி அறிவாளிகள் போல அடையாளம் காட்டிக் கொண்டு சாதாரண நிலையைவிட்டு உயர்ந்து விடாமல் சாமர்த்தியமாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். சாதுக்கள் என்றால் இவர்கள்தான். பிறருக்கு உதவுவதில் ஆர்வம் அதிகமிருக்கும். குடும்ப உறுப்பினர்களுக்காக எப்பேர்ப்பட்ட தியாகத்தையும் செய்வார்கள். இவர்கள் கூர்மையான அறிவும் உழைப்பும் இயற்கையாகவே உடையவர்கள். இளமையிலேயே சான்றோன் என்று பெயரெடுப்பார்கள். கல்வியில் இவர்களே முதலிடம் வகிப்பார்கள். தன்னுடைய பொறுப்பினை உணர்ந்து கடமையை மட்டுமே கண்ணாக மதித்து பிறர் மெச்சும் அளவுக்கு நடந்து கொள்வார்கள். இளமை முதலே குடும்பப் பொறுப்புகள் முழுவதையும் சுமக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது. தானே முன்னின்று தான் காரியங்களைச் செய்து முடிப்பார்கள். ஆனால் நிறுவனத்திற்குத் தலைவனாக விருப்பமிருக்காது.

தான தர்மங்கள் செய்பவருக்கு உதவுவார்கள். அவர்களை ஊக்கப்படுத்தித் தன்னையும் அக்காரியங்களில் ஈடுபடுத்தி முழு ஈடுபாட்டுடன் செயற்படுவார்கள். தனது மரியாதைக்கு, புகழுக்கு இழுக்கு தரக்கூடிய காரியங்களில் ஒருபோதும் ஈடுபடமாட்டார்கள். குரு ஆதிக்கம் குறைந்த சிலபேர் சோம்பேறி போலவும், சூதாட்டக்காரர்களாகவும் இருக்கின்றனர். குதர்க்க எண்ணத்துடன் மிதமிஞ்சின செலவு செய்பவர்களாகவும் இருக்கின்றனர். கடனாளியாக மாறுகின்றனர். தவறான செயல்களில் ஈடுபட்டுக் கெட்ட பெயரைத் தாங்கி நிற்பவராகவும் இருக்கின்றனர். இரக்க சிந்தனை அறவே இல்லாத மனிதராகவும் இருக்கின்றனர். மனம் அலைபாயும். மேலான மற்றவரை வசியப்படுத்தும் இரகசியமாகும். அன்பிற்கு மட்டுமே அடிமையாகி விடுவார்கள்.

மற்றவர்கள் துயர் தீர்க்கத் தன்னையே தியாகம் செய்து விடுவார்கள். பெரியவர்கள் சொல்லுக்குக் கீழ்ப்படியும் இவர்கள் தன்னைவிட சிறியவர்கள் தனக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டுமென்று கட்டளையிடுவார் தோல் சம்பந்தமான நோய்களால் அவதிப்படுவார்கள். படை, சொறி, சிரங்கு சுலபமாக இவர்களை விடுவதில்லை. கீழோரையும் மனிதாபிமானத்தோடு மதிப்பார்கள். தனித்து உண்ணாமல் பிறருக்குக் கொடுக்கும் தன்மையும், ஊருக்கு உபகாரியாகவும் திகழ்கின்றார்கள். தராசுத் தட்டுப் போல எதையும் சீர்தூக்கிப் பார்ப்

## எண் 3 (குரு) போதனைப்பேரொளி

நிலைக்கு ஒருபோதும் வரவிடாது.

விபரீதமான ஆசை, பதவி வெறி, அறிவு மிகுந்து காணப்படும். பிறர்மீது உள்ள கருணை, இரக்கம் குறைந்து சுயநலவாதிகளாக மாறிவிடவும் நேரும். இவர்களுக்கு இயற்கையிலேயே நடை, உடை, பாவனைகளில் கம்பீரம், அடக்கம், கௌரவத் தோற்றம், சாந்தம், அமைதி, உறுதித்தன்மை அதிகமாகக் காணப்படும். இவர்களின் உடம்பில் சக்தி ஓட்டம் அதிகமாக இருக்கும். ஒளி வீசும் கண்கள் பார்ப்பவர்களைக் கவரும். பேச்சு கம்பீரமான தொனியிலும் கேட்பவரைக் கவர்ந்திழுக்கும் காந்தமாகவும் இருக்கும். தெளிவான உச்சரிப்பு இருக்கும். கம்பீரமான வசனமும், காந்தப் பார்வையும், பிரசங்கம் செய்யும் ஆற்றலும் இவர்கள் கள். தன் கையை நம்பியே வாழ்வார்கள். தன் நிலையை எவரிடத்திலும் தாழ்ந்ததென ஒப்புக்கொள்ள மாட்டார்கள். தன்னம்பிக்கையுடைய இவர்களை யாரும் குழப்




பிவிட முடியாது. நெஞ்சழுத்தம் மிக்கவர்கள். விரோதிகளை நேருக்கு நேர் போருக்குத் தயார் என்று உணர்ச்சி பொங்கப் பேசுவார்கள். தங்கள் பெயருக்கு எந்தக் களங்கமும் வராமல் பார்த்துக் கொள்வார்கள். பதில் வல்லவர்கள்.

நேரான பாதையிலிருந்து சற்று விலகிச் செல்ல மாட்டார்கள். நேர்மைக்கு இலக்கணமாகத் திகழ்வார்கள். நெறி தவறாத உத்தம சீலர்கள். இவர்கள் கனவிலும் பிறருக்கு தீங்கு செய்யாத இதயமுள்ளவர்கள். பிறரிடம் உதவி கேட்டுப் பெறுவதற்குக் கூச்சப்படுவார்கள். இவர்கள் சொந்த முயற்சியாலேயே எதையும் முடித்துக் காட்டும் வலிமை பெற்றவர்கள். அடுத்தவர்கள் பாணியைப் பின்பற்றாதவர்கள். தனக்கென்று தனிப் பாதையை வகுத்துக் கொண்டு அதன் வழி நடப்பார்கள். வருமானத்தையோ இலாபத்தையோ கருதி எதையும் செய்யமாட்டார்கள். புகழை விரும்பி நல்லதைச் செய்து முடிப்பதில் சாமர்த்தியசாலிகள். தங்களது திறமைக்கு அப்பாற்பட்டதை ஏற்க விரும்ப மாட்டார்கள். உண்மைக்கு எடுத்துக்காட்டாக விளங்குவார்கள். போலிகளை போலிகளே என்று தைரியமாகக் கூறி விடுவார்கள். மற்றவர்களின் யோசனைகளை கேளாதவர்கள். இலட்சிய வாதிகள். தனக்குச் சரியென்று பட்டதைச் செய்யத் தயங்க மாட்டார்கள். எதையும் தாங்கும் இதயம் படைத்தவர்கள். எந்தச் சூழ்நிலையைக் கண்டும் கலங்காதவர்கள். இவர்களின் தோற்றமே மற்றவர்களை வசீகரம் செய்து விடும். அகன்ற நெற்றியும், அழகான நாசியும் கொண்டவர்கள். கூர்மையான புத்தியும், கவிதை எழுதும் திறனும் அதிகமிருக்கும். சமுதாயத்தில் எல்லோரிடத்திலும் செல்வாக்குப் பெற்றவர்கள். இவர்கள் சொல்லுக்கு மதிப்பும், மரியாதையும் எவ்விடத்திலும் கிடைக்கும். குருவின் பூரண அருள் கிடைத்தால் இவர்கள் சொல்வதெல்லாம் பலிதமாகும். ஆன்மீக அறப்பணிகளில் அதிகமான ஈடுபாடுகாட்டுவார்கள். குடும்பம், தேசம் இரண்டையும் ஒன்றாகப் பாவிக்கும் இவர்கள் ஒருபோதும் துரோகிகளாக மாட்டார்கள்.

(தொடரும்....)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## காட்டு மல்லிகை or அனங்கம்

Botanical name:- Jasminum angustifolium


Family name:- oleaceae

English name:- wild jasmine

Sinhala name:- wal pichcha

ஏறுகொடி வகையைச் சார்ந்தது. மென்மையான உரோம அமைப்பை தண்டுகளில் கொண்டிருக்கும். தனி இலை, எதிரிலை அடுக்கம் கொண்டவை. கோள வடிவத்திலிருந்து வேலுருவான அமைப்பைக் கொண்ட இலைவடிவம் காணப்படுகிறது. ஒழுங்கான பூக்கள் இருபாலானவை. வெள்ளை நிறம் கொண்டவை. வருடத்தில் இருமுறை பூக்கள் அதிகமாகவும் சித்திரை மாதம் மற்றும் ஆடி முதல் புரட்டாதி வரை பூக்கும். யாழ்ப்பாண மாவட்டத்தில் இதன் பரம்பல் அதிகமாகக் காணப்படும். தண்டுகள், வேர்க்கன்றுகள் மூலம் இனவிருத்தி செய்யலாம்.

இது அழகுச் செடியாக இருப்பதுடன் மட்டுமன்றி மருத்துவப் பயன்மிக்க தாவரமாகவும் வீட்டுத் தோட்டங்களில் பயிரிடப்படுகிறது. இதனுடைய வேரை பட்டுப்போல



அரைத்து வசம்பின் பட்ட நிலத்தண்டுடன் சேர்த்தரைத்து எலுமிச்சம் புளி சேர்த்தரைத்து வட்டக்கடி உள்ள இடங்களுக்கு பூசிவர வட்டக்கடி மாறும்.

வாய்ப்புண், பல் கொதிக்கு இதன் இலைகளை குடிநீராக காய்ச்சி வாய் கொப்பளிக்க வாய்ப்புண், பல்கொதி என்பன குறைவடையும்.

● பாதங்களின் உட்பகுதிகளில் ஏற்படும் ஆணிக் கூட்டிற்கு இதன் பசுமையான இலைகளை அரைத்து பற்றிட ஆணிக்கூடு இளகி கழறும் நிலைமை அடையும்.

● இதன் பூக்களை முதல் நாள் இரவு ஒருகைப்பிடி அளவு எடுத்து 200 மில்லிலீற்றர் நீரில் ஊற வைத்து மறுநாள் காலை குளிர்ந்த நீர் ஊறல் குடிநீரால் முகம் கழுவிவர சருமத் திற்குபளபளப்பு பொலிவு, முகப் பரு வருவதையும் தடுக்கும்.

● இதன் பூக்களின் குளிர்ந்த நீர் ஊறல் குடிநீரால் இரத்தமூலம் குறைவடையும்.

● இதன் இலைச்சாறினை தேங்காய் எண்ணெயுடன் சேர்த்துக் காய்ச்சி நீர்த்தன்மை வற்றும் பதத்தில் (மெழுகுப்பதத்தில்) எடுத்து தலையின் உச்சிப்பகுதியில் வைக்க காதால் சீழ் வடிதல், லசுண தாபிதம் (Tonsilites) போன்றவை குறைவடையும்.

### இலையின் குணம்

● இதனால் முக்குற்றம், தலைநோய், உடல்வெப்பம், கண்படலம் இவை நீங்கும். மிஞ்சிய ஐயத்தையும் மனக் கலக்கத்தையும் போக்கும்

● அன்றியும் இதனின் நன்மணம் கலவி இன்பத்தைப் பெருக்கும், மனதைக் கவரச் செய்யும்.

### மல்லிகையின் பூவின் குணம்

"போகமிக உண்டாகும்
பொங்குகபங் கட்பிரமை
ஆகவனல் சூனியமும்
அண்டுமோ பாகனையாய்!
மன்னு திருவசியம்
வாய்க்குஞ்சு டென் றெவரும்
பன்னு மல்லிகைப்பூ
வாற் பார்"

இலையை வாயிலிட்டுமெல்ல வாய்ப்புண் முதலியன மாறும்.

இலைச்சாறு அல்லது இலையிலிருந்து எடுக்கும் எண்ணெய், காதுநோயை மாற்றும். சீழ் நிறுத்தும். இலைச்சாறு காலாணியைப் போக்கும்.

● இலையை நெய்யில் வறுத்து ஒற்றமிட தொண்டை நோய் முதலியன நீங்கும்.

● இதன் பூக்களில் இருந்து அத்தர் செய்யலாம். இதிலிருந்து மிகவும் மணமுள்ள எண்ணெய் செய்து தலையில் தேய்த்து முழுகி வர உடலுக்கு குளிர்ச்சியைத் தரும். தலைவலி, தோலைப் பற்றிய நோய்கள், கண்ணெரிச்சல் முதலியன தீரும்.

● பூனாளி வைத்தியர்கள், இப்பூவை அல்லது இலையை அரைத்து தொடையிடுக்கு, குறி முதலிய இடங்களில் பற்றிடுவதால் கலவி இன்பம் பெருகும்.

● பூவை அரைத்து பூச வீக்கம் குறையும்

● பூவை வைத்து மார்பில் கட்ட பால்சுரப்பு நிற்கும்

● காட்டு மல்லி இலையால் வெண்குட்டந் தீரும்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ். பல்கலைக்கழகம்

## விபத்தில் ஒருவர் உயிரிழப்பு மூவர் வைத்தியசாலையில்





(கொழும்பு)

சிலாபம் - புத்தளம் பிரதான வீதியின் கீரியங்கள்ளி பகுதியில் ஏற்பட்ட விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் மூவர் காயமடைந்துள்ளதாக முந்தலம் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று அதிகாலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மஸ்கெலிய பகுதியைப் சேர்ந்த ஆறுமுகம் (வயது-48) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பொருட்களை ஏற்றி வந்த லொறி ஒன்று இயந்திரக் கோளாறு காரணமாக பாதை ஓரத்தில் நிறுத்தப்பட்டிருந்த போது பின்னால் வந்த சிறிய ரக லொறி ஒன்று மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சிறிய ரக லொறியின் முன்னால் இருந்து சென்ற ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதுடன் அதே லொறியில் பயணித்த ஏனைய மூவரும் முந்தலம் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

லொறி சாரதியின் நிலை கவலைக்கிடமாக இருப்பதால் அவர் சிலாபம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

விபத்து தொடர்பில் முந்தலம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(இ-7)


## காலம் தாழ்த்தாது பழைய முறைப்படி மாகாணத் தேர்தலை நடத்த வேண்டும்

### சிறுபான்மைக் கட்சிகள் கூட்டாக கோரிக்கை!

(கொழும்பு)

காலம் தாழ்த்தாது பழைய முறைப்படி மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படவேண்டும் என சிறுபான்மைக் கட்சிகளின் விசேட கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் அமைந்துள்ள அமைச்சர் மனோ கணேசனின் அமைச்சு அலுவலகத்தில் நேற்று முன்தினம் சிறுபான்மைக் கட்சிகளான ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி, தமிழ் முற்போக்கு கூட்டணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகியவற்றின் தலைவர்கள் உள்ளிட்ட முக்கிய பிரதிநிதிகள் சந்தித்து மாகாண சபைத் தேர்தல் காலம் தாழ்த்தப்படுவது தொடர்பில் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டனர்.



மாகாண சபைத் தேர்தலை புதிய முறைமையில் நடத்துவதா? அல்லது பழைய முறைமையில் நடத்துவதா? என்பது குறித்த சர்ச்சையால் மாகாண சபைத் தேர்தல் நடத்துவது காலந்தாழ்த்தப்படுவதாக பேசப்பட்டுவரும் நிலையிலேயே குறித்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இதன்போது ஜனநாயகம் பாதிக்கப்படாதவகையில் அதற்கு மதிப்பளித்து மாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடத்தப்பட வேண்டும் எனவும் மாகாணசபை தேர்தலை புதிய முறைப்படி நடத்துவதில் சிக்கல் இருக்கின்றமையால் அது தொடர்பான திருத்தங்களை கொண்டு வருவதற்கு காலதாமதம் ஏற்படுகின்றது. இந்நிலையில் பழைய முறைப்படி தேர்தலை நடத்துவதனூடாகவே ஜனநாயகத்தை உறுதிப்படுத்த முடியும் என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் நாளை 26 ஆம் திகதி பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெறவுள்ள கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் குறித்த நிலைப்பாட்டை தாம் வலியுறுத்தவுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். (இ-7)

## பொலிஸாரின் அபராதப் புத்தகத்தை கிழித்தெறிந்த இராணுவ அதிகாரி

### தெற்கு அதிவேக சாலையில் கைது

(கொழும்பு)

போக்குவரத்துக் கடமையிலிருந்த பொலிஸாரின் போக்குவரத்து விதி மீறல் அபராதப் புத்தகத்தை பறித்து கிழித்தெறிந்து விட்டு தப்பிச் சென்ற ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரியொருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது.

குறித்த ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி தனது குடும்பத்தாருடன் காரில் தெற்கு அதிவேக வீதியின் வெலிபன்ன நுழைவாயில் வழியாக நுழைய முற்படுகையில் போக்குவரத்து பொலிஸார் குறித்த காரை நிறுத்தி பரிசோதனை மேற்கொண்டதுடன் சாரதியான ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரியின் சாரதி அனுமதிப்பத்திரத்தையும் பொலிஸார் கேட்ட போது, அவர் திடீரென கடமையிலிருந்த பொலிஸாரின் கையிலிருந்த அபராதம் விதிக்கும் புத்தகத்தை பறித்து கிழித்தெறிந்து விட்டு காரில் வேகமாக தப்பிச் சென்றுள்ளார்.

இதனையடுத்து தெற்கு அதிவேக வீதியின் பின்னதுவ பகுதியில் வைத்து காரை மடக்கிப் பிடித்த வெலிபன்ன பொலிஸார் குற்றத்துடன் தொடர்புடைய சந்தேக நபரை கைதுசெய்ததுடன் அவரை மதுகம நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கையும் மேற்கொண்டனர். (இ-7)

# 'சமஷ்டிப்பேயை கருவிலேயே கலைக்க வேண்டும்!'-கம்மன்பில

(கொழும்பு)
சமஷ்டிப் பேய் பிறக்கும் முன் அதனைக் கருவிலேயே கலைக்க வேண்டுமென, பிவித்துரு ஹெல உறுமய வின் தலைவர் நாடாளும ன்ற உறுப்பினர் உதய கம் மன்பில தெரிவித்தார்.

இந்த அரசாங்கம் நிறை வேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை நீக்கி விட்டு, சமஷ்டியை கொண்டு வர முயற்சிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன் தினம் திங்கட்கிழமை இடம் பெற்ற செய்தியாளர் சந்திப் பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை எமக்கும் பிரச்சினைதான். ஆனாலும் நாட்டை ஒன்பது துண்டுகளாக்கும் சமஷ்டி முறை அதனையும் விட ஆபத்தானது.

ஒற்றையாட்சி என்ற பத த்தை கைவிட்டுள்ள மக்கள் விடுதலை முன்னணியினர் 20 ஆம் திருத்தச்சட்டத்தின் ஊடாக சமஷ்டியை அடைவ தற்கான திருட்டுப் பாதையை அரசாங்கத்திற்கு ஏற்படுத்திக் கொடுக்கின்றார்களா? என்ற சந்தேகம் எமக்கு எழுகின் றது.

எதிர்வரும் 7ஆம் திக தியோ அதற்கு முன்னரோ, நாடாளுமன்றில் சமர்ப்பிக் கவுள்ள யோசனை, நிறை வேற்று அதிகாரத்தை நீக் கும் யோசனை அல்ல.

சமஷ்டியை ஏற்படுத்துவ தற்கான ஆரம்பமே அது. எனவே இந்த நாட்டை ஒன்பது துண்டுகளாக பிரிக்கும் குட் டிப்பிசாசு பிறக்கும் முன்பு, கரு விலேயே கலைக்க வேண்டி யது நாட்டை நேசிக்கும் சகலர தும் பொறுப்பு" என கம்மன்பில மேலும் தெரிவித்தார். (இ-7)



கேலிச்சித்திரம்

# இளம் தலைமுறையை போதைப்பொருளிலிருந்து பாதுகாக்க விரைவான வேலைத்திட்டம் வேண்டும்

## மகிந்த ராஜபக்ஷ வலியுறுத்து



(கொழும்பு)
போதைப் பொருள் பாவ னையிலிருந்து இந்த நாட்டு அடுத்த தலைமுறையினரை பாதுகாத்துக் கொள்வதற்காக விரைவான நடவடிக்கை எடு க்க வேண்டும் என்று முன் னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வலியுறுத்தியுள் ளார்.

தற்போது நாட்டிற்குள் மிக வேகமாக போதைப் பொருள் பயன்பாடு அதிகரித்துள்ள தாக அவர் சுட்டிக்காட்டியுள் ளார்.

அதேநேரம் நாட்டின் பொரு ளாதாரம் தொடர்பில் தவ றான உருவத்தை மக்க ளுக்கு காண்பிக்க அரசா ங்கம் முயற்சித்துக் கொண் டிருப்பதாக அவர் தெரிவித் தார்.

சீன மக்கள் விடுதலை முன்னணி படையின் 91 ஆவது ஆண்டுநிறைவைமுன் னிட்டு இலங்கையிலுள்ள சீன தூதுவராலயம் ஏற்பாடு செய்திருந்த நிகழ்வில் நேற்று முன்தினம் முன்னாள் ஜனா திபதி மகிந்த ராஜபக்ஷ பங் கேற்றிருந்தார்.

இந்த நிகழ்வின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளி யிடும் போதே அவர் இத னைத் தெரிவித்தார். (இ-7)

# படைத்தளபதிகள் சந்திப்பு



(கொழும்பு)
அமெரிக்க இராணுவ பசுபிக் கட்டளைத்தளபதி ஜெனரல் றொபேட் பிறவுண் தலைமையிலான குழுவி னர் கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் சிறிமேவன் ரண சிங்கவை சந்தித்தனர்.

கடற்படைத்தலைமை யகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த சந்திப்பின் போது கடல்சார் பாதுகாப்பு தொடர்பான விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

இந்த சந்திப்பினை நினைவு கூரும் வகையில் இருவரும் நினைவுச்சின்னங்களைப் பரிமாறிக்கொண்டனர். (இ-7)

# ஜனாதிபதியையும் பிரதமரையும் நீதிமன்றத்தில் ஆஜராக நோட்டீஸ்

(கொழும்பு)
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகி யோரை நீதிமன்றில் ஆஜ ராகுமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள் ளது.


அவர்கள் இருவரையும் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 9 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு மீண்டும் மற் றுமொரு நோட்டீஸ் அனுப் பப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசிய கட்சியின் முன்னாள் பொதுச் செயலா ளர் திஸ்ஸ அத்தநாயக்க வுக்கு எதிராக தாக்கல் செய் யப்பட்டுள்ள வழக்கு தொடர் பாகவே இந்த நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர் தல் காலத்தில் பொது வேட் பாளராக களமிறங்கிய மைத்திரிபால சிறிசேன, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிர மசிங்க மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இடையில் இரகசிய ஒப்பந் தம் போடப்பட்டுள்ளதாக போலி ஆவணங்களை வெளியிட்டமையால் இன ங்களுக்கு இடையிலான நல்லுறவைப் பாதிக்கும் வகையில் செயற்பட்டதாக திஸ்ஸ அத்தநாயக்கவுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதில், மைத்திரிபால சிறிசேன மற்றும் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் சாட்சியாளர்களாக பெயரிடப் பட்டுள்ளனர் என்பது குறிப் பிடத்தக்கது. (இ-7)

# 15 மில்லியன் ரூபாய் பெறுமதியான வெளிநாட்டு நாணயத் தாள்களுடன் சிங்கப்பூர் பொறியியலாளர் கைது



(கொழும்பு)
வெளிநாட்டு நாணயத் தாள்கள் ஒரு தொகையை சட்டவிரோத மான முறையில் எடுத்துச் செல்ல முற்பட்ட சிங்கப்பூர் நாட்டு பொறி யியலாளர் ஒருவரை கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து சுங்க அதிகாரிகள் கைது செய் துள்ளனர்.

43 வயதுடைய சிங்கப்பூர் பிரஜை ஒருவரே நேற்று அதி காலை இவ்வாறு கைது செய்யப் பட்டுள்ளார்.

1,53,04,085 ரூபா பெறுமதி யான வெளிநாட்டு நாணயத்தாள் களே குறித்த நபரிடமிருந்து கைப் பற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படு கின்றது.

குறித்த நபர் நேற்று அதிகாலை 1.55 மணியளவில் ஸ்ரீலங்கன் விமான சேவைக்கு சொந்தமான UL 306 என்ற விமானத்தில் சிங் கப்பூர் நோக்கிப் பயணிக்க கட்டு நாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது.

குறித்த நபர் எடுத்து வந்த பயணப்பையில் இருந்து 50,000 யூரோக்கள் மற்றும் 50,000 புருனாய் டொலர்கள் கண்டுபிடிக் கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படு கின்றது.

குறித்த பொறியியலாளர் கடந்த 20 ஆம் திகதி இலங்கைக்கு வந்துள்ளதாக சுங்க அதிகாரிக ளின் ஆரம்பகட்ட விசாரணைக ளில் இருந்து தெரியவந்துள்ளது.

கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகள் மேலதிக விசா ரணைகளை மேற்கொண்டு வரு கின்றனர். (இ-7)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 100 | 80 | 70 | 100 | 80 |
| உருளைக்கிழங்கு | 120 | 100 | 85 | 100 | 100 | 105 |
| பச்சைமிளகாய் | 500 | 500 | 450 | 450 | 600 | 450 |
| தக்காளி | 160 | 180 | 160 | 160 | 160 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 40 | 50 | 40 | 40 |
| கோவா | 150 | 160 | 150 | 180 | 160 | 160 |
| கரட் | 180 | 280 | 150 | 250 | 300 | 240 |
| பூசணி | 60 | 80 | 40 | 50 | 80 | 50 |
| புடோல் | 80 | 100 | 80 | 80 | 120 | 70 |
| வாழைக்காய் | 80 | 100 | 75 | 100 | 100 | 90 |
| சின்ன வெங்காயம் | 120 | 180 | 100 | 120-150 | 120 | 120 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 90 | 110 | 120 | 105 |
| பாகற்காய் | 200 | 300 | 250 | 200 | 250 | 260 |
| வெண்டிக்காய் | 100 | 50 | 80 | 60 | 120 | 90 |
| கருணைக் கிழங்கு | 80 | 150 | 250 | 120 | 150 | 100 |
| பயற்றங்காய் | 100 | 120 | 75 | 80 | 80 | 140 |
| லீக்ஸ் | 200 | 200 | 120 | 160 | 160 | 160 |
| பீற்றூட் | 160 | 160 | 150 | 140 | 200 | 200 |
| கறிமிளகாய் | 400 | 450 | 180 | — | 240 | 350 |
| முருங்கைக்காய் | 200 | 200 | 150 | 150 | 200 | 380 |
| போஞ்சி | 300 | 300 | 200 | 300 | 300 | 270 |
| கத்தரிதம்புள்ள | 80 | 20 | 50 | — | 80 | 70 |
| கீரை-1பிடி | 20 | 10 | 20 | 40 | 30 | 20 |
| தேசிக்காய் | 40 | 20 | 40 | 50 | 80 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 30-60 | 50 | 40 | 40-60 | 55 |
| இராசவள்ளி | 150 | 200 | 120 | 200 | 200 | 140 |
| வெங்காயப்பூ | 200 | 200 | 100 | 200 | 200 | 160 |
| முள்ளங்கி | 80 | 120 | 40 | 100 | 100 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 10 | 50 | 40 | 35 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 20 | 20 | 50 |
| ஈரப்பலா | 60 | 50 | 110 | 50 | 50 | 60 |

நல்லவராய் இருப்பது நல்லதுதான்! ஆனால் நல்லது கெட்டது தெரியாத நல்லவராய் இருப்பது ஆபத்தானது. ~ *பெர்னாட்ஷா*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தேவலோகத்துத் தூதுக்குழு வட பகுதிக்கு விஜயம்

வடக்கில் இடம்பெறும் வாள்வெட்டுச் சம்பவங்கள் மற்றும் கொலை, கொள்ளை உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் நிலைமைகளை நேரில் அவதானிப்பதற்காக தேவலோகத்துக் குழுவொன்று முதலில் யாழ்ப்பாணத்துக்கு வருகை தருகிறது.

இந்திரன் தலைமையில் வருகின்ற இக்குழுவில் பிரம்மா, நாரதர், நந்திதேவர், யமன், சித்திரகுப்தன் ஆகியோர் உள்ளடங்கியிருந்தனர்.

புஷ்பக விமானத்தில் தேவர் குழு யாழ்ப்பாணத்துக்கு வரும்போது, செம்மணிப் பக்கமாக பெருந்திரளான மக்கள் குழுமி நின்றனர்.

என்ன சங்கதி என்பதை அறிவதற்காக மாறுவேடத்தில் தேவர் குழு அங்கு வந்து சேர்கிறது.

அங்கு நின்றவர்களை அவர்கள் விசாரிக்க, கடல்நீரை குடிநீராக்கவென சுத்திகரிப்பு நிலையமொன்று இங்கு அமைக்கப்படுகிறது.

இதற்காக கிடங்கு வெட்டும்போது எலும்புக்கூடு வந்துள்ளதாகவும் அதனைப் பார்க்கவே இவ்வளவு மக்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் இந்திரன் யமனைப் பார்க்க; சுவாமி, இது அப்ப... செம்மணியில்...

ஓஹோ நீயும் மறைக்கத்தான் செய்கிறாய் போல,

இந்திரனின் குத்துக்கதை யமனை யோசனைக்கு ஆளாக்கியது.

அது சரி இந்த எலும்புக்கூடுகள் தொடர்பில் கூட்டமைப்பு என்ன சொல்கிறது. இவ்வாறு பிரம்மா கேட்க,

இந்த எலும்புக்கூடுகள் இராணுவத்தின் போர்க்குற்றங்கள் என்று மாவை சேனாதிராசா அவர்கள் கூறியிருக்கிறார் என்று சித்திரகுப்தன் பதிலளித்தார்.

என்ன? சர்வதேச போர்க்குற்ற விசாரணை முடிந்து விட்டது என்று வவுனியாவில் வைத்துக் கூறியவர் மாவை சேனாதிராசா.

அப்படியென்றால் இந்த எலும்புக்கூடுகள் பற்றியெல்லாம் சர்வதேச விசாரணையில் சொல்லப்பட்டதா பிரம்மா கேள்வி எழுப்பினார்.

சுவாமி அங்கு சொல்லாவிட்டாலும் இங்கு சொன்னால்தான் அரசியலில் நின்று பிடிக்கலாம் என நாரதரின் பதில் இருந்தது.

சரி மற்றைய இடங்களைச் சுற்றிப் பார்ப்போம் என்று நந்திதேவர் கூற தேவர் குழு புஷ்பக விமானத்தில் ஏறிப் புறப்பட்டது.

சற்றுத்தூரம் சென்றதும் பொறுங்கள் பொறுங்கள், அங்கே இளைஞர்கள் சிலர் வாள்களுடன் நிற்கிறார்கள். என்ன நடக்கிறது என்று பார்ப்போம். இவ்வாறு நந்திதேவர் கூற,

தேவர் குழு சூக்கும வடிவத்தில் நின்று அங்கு என்ன நடக்கிறது என்பதைப் பார்த்தனர்.

அந்நேரம் வாள்களுடன் நின்ற இளைஞர்கள் அங்கு பெரும் அட்டகாசம் செய்கின்றனர். போவோர் வருவோர் மீது வாளால் வெட்டுகின்றனர். இதனைப் பார்த்த யமன் துடித்தபடி நின்றார்.

சித்திரகுப்தா! இங்கு பொலிஸ் சேவை இல்லையா? இந்திரன் கோபத்துடன் கேட்டார். சுவாமி! பொலிஸ் சேவை தாராளமாக இருக்கிறது. ஆனால் வாள்வெட்டுக் குழுக்கள் நிற்கின்ற இடத்தில் பொலிஸார் நிற்க மாட்டார்கள் என்றார் சித்திரகுப்தன்.

நந்திதேவரே இதென்ன நாசம், வாள்வெட்டு நடக்கின்ற இடத்தில் பொலிஸார் இல்லையென்றால்... பிரம்மதேவர் கடுப்போடு கேட்டார்.

சுவாமி முன்பு பொலிஸ் – கள்ளன் விளையாட்டு. இப்ப பொலிஸ் – வாள்வெட்டுக்குழு நாடகம் என்றார் நந்திதேவர்.

என்ன பொலிஸ் வாள்வெட்டுக்குழு நாடகமா அதென்ன? இந்திரன் கொதித்தார். சுவாமி நாங்கள் இல்லாதபோது நீங்கள் வாருங்கள். நாங்கள் இருக்கின்றபோது நீங்கள் உறங்குங்கள். இதுதான் பொலிஸ் – வாள்வெட்டுக் குழு நாடகம் என்றார் நந்திதேவர்.

அவர் கூறியதைப் புரிந்து கொண்ட தேவர் குழு எங்களுக்கும் ஆபத்தெனக்கூறியபடி அவசர அவசரமாக இந்திரலோகம் திரும்பியது.

# ஜப்பானில் வெப்பம்! 65 பேர் உயிரிழப்பு

ஜப்பானில் ஏற்பட்டுள்ள கடும் வெப்பம் காரணமாக கடந்த வாரத்தில் மாத்திரம் 65 பேர் உயிரிழநதுள்ளதாக ஜப்பான் வானிலை மையம் தெரிவித்துள்ளது.

டோக்கியோ நகருக்கு அருகில் உள்ள குமகாயா நகரில் நேற்று முன்தினம் வெப்பநிலை மிக அதிகமாக காணப்பட்டதாகவும் அது 41.1 செல்சியஸாக பதிவாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

2013ஆம் ஆண்டு பதிவான 41 செல்சியஸ் வெப்பநிலையே ஜப்பானில் பதிவான அதிக கூடிய வெப்பநிலையாக காணப்பட்டது.

பல நகரங்களிலும் வெப்பநிலை சுமார் 40 செல்சியஸாக காணப்படுவதுடன் வெப்பத்தால் பாதிக்கப்படும் சூழ்நிலையை தவிர்த்து குளிரூட்டப்பட்ட இடங்களில் இருக்கும்படியும் அதிகம் தண்ணீர் அருந்தும் படியும் ஜப்பான் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் மக்களை அறிவுறுத்தியுள்ளது.

10 ஆயிரத்திற்கும் அதிக மானவர்கள் அதிக வெப்பநிலை காரணமாக வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (7-8)

# குடிநீர் விநியோகத்தை மேற்கொள்ள இதுவரை சீரான நடவடிக்கை எடுக்கவில்லை

## கிளிநொச்சி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் சிறீதரன் எம்.பி. சுட்டிக்காட்டு

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வாழும் மக்களுக்கான குடிநீர் விநியோகத்தை மேற்கொள்ள இதுவரை சீரான நடவடிக்கை எடுக்கப்படவிலலை என இணைத் தலைவரான யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் சுட்டிக் காட்டியுள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நேற்றுக்காலை 9.30 மணியளவில் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது. இதன் போது வறட்சி நிலைமை தொடர்பில் கலந்துரையாடப்பட்டபோது, கிளிநொச்சி மாவட்டத்தில் நான்கு பிரதேச செயலர் பிரிவுகளிலும் 90 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 21 ஆயிரத்து 959 குடும்பங்களைச் சேர்ந்த 74 ஆயிரத்து 566 பேர் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் 48 கிராம அலுவலர் பிரிவுகளில் 5 ஆயிரத்து 346 குடும்பங்களைச் சேர்ந்த 18 ஆயிரத்து 953 பேருக்கான குடிநீர் விநியோகம் தற்போது மேறகொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேசத்தின் பொன்னகர் கோணாவில் ஆகிய பிரதேசங்கள் வறட்சியால் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் இந்தப் பிரதேசத்திற்கு குடிநீர் விநியோகம் இன்றுவரை மேற்கொள்ளப்படவில்லை. இதனால் தொடர்ந்தும் மக்கள் பாதிக்கப்படுவதாக பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளால் சுட்டிக் காட்டப்பட்டது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த ஒருங்கிணைப்புக்குழுவின் இணைத் தலைவரான சிவஞானம் சிறீதரன், கிளிநொச்சி மாவட்டத்தின் வறட்சிப் பாதிப்புகள் தொடர்பில் பல்வேறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருக்கின்றன.

கடந்த நான்கு மாதங்களுக்கு முன்னர் பரந்தன் காஞ்சிபுரம் ஆகிய பகுதியில் சேதமடைந்த குழாய்க் கிணற்றை திருத்தி வழங்குமாறும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சுக்கு அறிவித்து சம்பவ இடத்திற்குச் சென்ற அதிகாரிகள் இதில் எந்தவிதமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை வறட்சியினால் குடிநர் தேவையுள்ள பிரதேசங்களுக்கு இதுவரை குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்படவில்லை.

இவ்வாறு பல்வேறு குறைபாடுகள் காணப்படுகின்றன எனச்சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதனையடுத்து இன்று மாவட்டச் செயலகத்தில் விசேட கலந்துரையாடல் ஒன்றை ஏற்பாடு செய்து அவற்றை ஒழுங்குபடுத்துவதாக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார். (2-315)

# அணைக்கட்டு உடைப்பெடுத்ததில் நூற்றுக்கணக்கானோரை காணவில்லை

(வியஞ்சான்)

தென் கிழக்கு லாஓஸில் நீர்ததேக்கம் ஒன்றின் அணைக்கட்டு உடைப்பெடுத்ததில் நூற்றுக்கணக்கான மக்கள் காணாமல் போயுள்ளதுடன், பல எண்ணிக்கையானவர்கள் உயிரிழந்துள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

அணைக்கட்டு உடைப்பெடுத்த காரணத்தால் நீர் மிக வேகமாக பெருக்கெடுத்து ஓடிக் கொண்டிருப்பதாகவும் நாட்டின் தென்கிழக்குப் பகுதியின் சன்சாய் மாவட்டத்தில் நீரின் மட்டம் அதிகரித்துக் கொண்டிருப்பதாகவும அந்த நாட்டு ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

நாட்டின் தென்கிழக்குப் பகுதியின் சன்சாய் மாவட்டத்தில் 6 கிராமங்கள் நீரில் மூழ்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

6600 இற்கும் மேற்பட்ட மக்கள் தற்போது வீடுகளை இழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தற்போது விரைவாக மீட்புப் பணிகள் இடம்பெற்றுக் கொண்டிருப்பதாகவும், மக்களுக்கான நிவாரண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன. (7-8)

## நான்கு சேவைகளாக அதிகரிப்பு

பருத்தித்துறை- பலாலி, மயிலிட்டி, காங்கேசன்துறை கடற்றொழிலாளர் சங்கம் மற்றும் பொது அமைப்புக்களுக்கு இணங்க பருத்தித்துறையிலிருந்து கீரிமலை பேருந்து சேவை இதுவரை 3 சேவைகள் நடைபெற்றன. இந்நிலையில் 27ஆம் திகதி தொடக்கம் 4 சேவைகளாக அதிகரிக்கப்பட்டுள்ளன. இதன் பிரகாரம் புதிய நேர அட்டவணை பின்வருமாறு மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறையிலிருந்து புறப்படும் நேரம் காலை 6.45, முற்பகல் 9.30, பிற்பகல் ஒரு மணி, மாலை 4 மணி, கீரிமலையிலிருந்து புறப்படும் நேரம் காலை 8 மணி, முற்பகல் 11 மணி, பிற்பகல் 2.30 மணி, மாலை 5.30 மணி என இ.போ.ச. பருத்தித்துறை சாலை முகாமையாளர் க.கந்தசாமி அறிவித்துள்ளார். (இ)

## யாழ். பல்கலையில் ஆய்வரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக இந்து நாகரிகத்துறை - சுவாமி முருகேசன் அறக் கட்டளையுடன் இணைந்து நடத்தும் ஆய்வரங்கு - 2018 எதிர்வரும் 27, 28ஆம் திகதிகளில் கைலாசபதி கலையரங்கத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் ஆரம்பநாள் நிகழ்வு காலை 8.30 மணியளவில் சுவாமி முருகேசரின் "சைவ சித்தாந்த சிந்தனைகளும் மேருபுத்திரியின் நூல்களும்" எனும் கருப்பொருளில் யாழ்.பல்கலைக்கழக இநது நாகரிகத்துறைப் பேராசிரியர் மா.வேதநாதன் தலைமையில் இடம்பெறும்.

இரண்டாம் நாள் நிகழ்வு யாழ்.பல்கலைக்கழக மேனாள் கலைப்பீடாதிபதி தகைசார் பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர் தலைமையில் இடம்பெறும்.

இதில் பிரதம விருந்தினராக தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக துணைவேந்தர் சிரேஷ்ட பேராசிரியர் க. பாஸ்கரனும் சிறப்பு விருந்தினராக தமிழ்நாடு முனைவர் அருட்திரு ஊரன அடிகளாரும் கௌரவ விருந்தினர்களாக தஞ்சாவூர் ஆலய வழிபடுநர் சங்கத் தலைவர் ரி.ஆர்.ரமேஸூம், தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக முன்னாள் மூத்த துணைப்பதிவாளர் ஆர். சுப்புராயலுவும் கலந்து கொள்வர். (இ)

## 20 மில்லியன் ரூபாய் இலஞ்சம் மஹாநாம, திஸாநாயக்கவின் விளக்கமறியல் மேலும் நீடிப்பு

இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட ஜனாதிபதி செயலணியின் முன்னாள் பிரதானி, மஹாநாம மற்றும் அரச மரக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் பீ. திஸாநாயக்க ஆகியோரின் விளக்கமறியல், ஓகஸ்ட் மாதம் 7ஆம் திகதி வரைக்கும் நீடிக்கப்பட்டுள்ளது. இவ்விருவருக்கு எதிரான வழக்கு, கொழும்பு பிரதான நீதவான் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே, நீதவான் மேற்கண்டவாறு உத்தரவிட்டுள்ளார்.

கந்தளாய் சீனித் தொழிற்சாலையில், இந்திய வர்த்தகரொருவர் வாங்கிய பங்குகளை அதிகரிப்பதாக வாக்குறுதியளித்து, அவரிடமிருந்து இலஞ்சமாக 20 மில்லியன் ரூபாயை பெறும்போதே, இவர்கள் இருவரும், மே மாதம் 3ஆம் திகதியன்று கைது செய்யப்பட்டனர். (இ-7)

## நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)


யாழ். மாநகரசபையின் வரியிறுப்பாளர்களின்நன்மை கருதி ஆதனவரி நிலுவை அறவீடுகளை மேற்கொள்ளும் பொருட்டு நாளை வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை வட்டாரம் 5 இற்கான நடமாடும் சேவை தொடர்மாடி சனசமூக நிலையத்தில் இடம்பெறும் என ஆணையாளர் அறிவித்துள்ளார். (இ)

# பாரம்பரிய விளையாட்டுக்களுக்கு கால மாற்றத்திற்கு ஏற்ற ஒழுக்கக்கோவை தேவை

## தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழர் பாரம்பரிய விளையாட்டுக்கள் காலத்திற்கு உரிய மாற்றங்களுடன் நடைபெறவேண்டும் என வலிகாமம் கிழக்கு (கோப்பாய்) பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா- நிரோஷ் தெரிவித்தார்.



நீர்வேலியில் இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தினரின் ஏற்பாட்டில் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. இப் போட்டிகளுக்கு பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு போட்டிகளை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், தமிழ் மக்களின் பாரம்பரிய விளையாட்டுக்கள் வழக்கொழிந்து போகின்றன. இது வேதனை தருகின்ற விடயம். நீர்வேலியில் வண்டில் சவாரியினை சிறந்த முறையில் நடத்தக்கூடிய திடல் உள்ளது. எனினும் கடந்த சில ஆண்டுகளாக இப் போட்டிகள் நடைபெறுவதில் பல்வேறு இடையூறுகள் நிலவின. இதனால் போட்டிகள் தடைப்பட்டும் இருந்தன. இதன் பின்னர் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டிகளை நடத்த வேண்டும் என்ற ஆர்வத்தில் வண்டில் சவாரிச் சங்கத்தினர் என்னுடன் பேசினர். எமது பக்க நடவடிக்கையாக ஆராய்ந்து பார்த்த போது சவாரியின் போது. காளைகளுக்கு துன்புறுத்தல்கள் பிரயோகிக்கப்படும் குற்றச்சாட்டுக்களை அடிப்படையாகக் கொண்டு பொலிஸ் நிலையத்திற்கு விலங்குகள் ஆர்வலர்களால் முன் வைக்கப்படும் முறைப்பாடுகளே தொடர்ந்து சவாரிப்போட்டிகளை நடத்துவதற்குத் தடையாக அமைந்தன என்பதை புரிந்துகொண்டேன்.

இந் நிலையில் நாம் சகலருடனும் பேச்சுக்களை நடத்தி எதிர்காலத்தில் விலங்குகள் சித்திரவதை செய்யப்படாது நல்ல பல மாற்றங்களுடன் எமது பாரம்பரிய விளையாட்டினை மேற்கொள்ள ஆமோதிப்பினைப் பெற்றுக்கொண்டோம். நான் கூட ஓர் மனித உரிமை செயற்பாட்டாளனாக இருந்தே தவிசாளராகப் பொறுப்பேற்றிருக்கின்றேன். ஆகவே நாங்கள் உயிர்களின் உரிமைகளில் வலுவான ஆர்வத்தில் இருக்கின்றோம்.

எமது சமயங்களிலும் கூட விலங்குகளைக் கடவுளாக மதிக்கின்றார்கள். வணங்குகின்றார்கள். இவ்வாறிருக்க நாம் எந்த உயிரினத்தினையும் வதைக்கவேண்டியவர்கள் இல்லை. எனவே நல்ல மாற்றங்களை உள்வாங்கிக்கொண்டு நாங்கள் இந்தத் திடலில் வெற்றிகரமாக இரண்டாவது தடவையாக தடைகள் இன்றி சவாரிப் போட்டிகளை நடத்துகின்றோம் என்பதை எண்ணி நாம் பெருமையடையவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (க-9)

# முல்லை பீனிக்ஸ், ரிங்கோ ரைரன் அணிகள் வெற்றி



வடக்கு-கிழக்கு மாகாண வீரர்களை ஒன்றிணைத்து நடத்தப்படும் வடக்கு, கிழக்கு பிறிமியர் லீக்கின், இரண்டாவது லீக் சுற்று ஆட்டங்கள் தற்போது யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்று வருகின்றது.

கடந்த 21 ஆம் திகதி நடைபெற்ற ஆட்டங்களில், முதல் ஆட்டத்தில் முல்லை பீனிக்ஸ் அணியை எதிர்த்து அம்பாறை அவஞ்சேர்ஸ் அணி மோதியது. முதற்பாதியாட்டத்தில் இரண்டு அணிகளும் எவ்வித கோல்களையும் பதிவு செய்யவில்லை.

இரண்டாம் பாதியாட்டத்தில் முல்லைத்தீவு பீனிக்ஸ் அணியின் ஆட்டம் கைஓங்கியது. 50 ஆவது நிமிடத்தில் பீனிக்ஸ் அணியின், சாந்தன் முதலாவது கோலைப் பதிவு செய்தார். தொடர்ந்து 70 ஆவது நிமிடத்தில் பீனிக்ஸ் அணியின் மயூரன் கோல் ஒன்றை அடித்தார். தொடர்ந்து பீனிக்ஸ் அணியின், ஜீவரட்ணம் 79 ஆவது நிமிடத்தில் கோல் ஒன்றை அடித்தார். முடிவில், முல்லைத்தீவு பீனிக்ஸ் அணி, 03:00 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்றது.

அன்றைய தினம் நடைபெற்ற இரண்டாவது போட்டியில் மட்டுநகர் சுப்பர் கிங்ஸ் அணியை எதிர்த்து ரிங்கோ ரைரன்ஸ் அணி மோதியது. போட்டியின் 21 ஆவது நிமிடத்தில் ரிங்கோ ரைரன்ஸ் அணியின், ஏ.எம்.வரிது முதலாவது கோலைப் பெற்றார். 37 ஆவது நிமிடத்தில் மட்டுநகர் அணியின் சஞ்சய் பதில் கோல் அடித்தார். முதற்பாதியாட்டம் முடிவில், போட்டி 1:1 என சமநிலையில் இருந்தது.

இரண்டாவது பாதியாட்டம் தொடர்கையில், 59 ஆவது நிமிடத்தில் ரிங்கோ அணியின் எஸ்.எம்.றுசான் கோல் ஒன்றைப் பதிவு செய்தார். தொடர்ந்து, 68 ஆவது நிமிடத்தில் ரிங்கோ அணியின் றுசான் கோல் ஒன்றை அடித்தார். இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் 83 ஆவது நிமிடத்தில் அபிநாஸ் கோல் ஒன்றைப் பதிவு செய்தார். முடிவில், ரிங்கோ ரைரன்ஸ் அணி, 03:02 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்றது. (க-26)



அரியாலை கலைமகள் அணி



அரியாலை ச.சமூக அணி



அரியாலை திருமகள் அணி

அரியாலை திருமகள் சனசமூக நிலைய 66 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு அமரர் திருமதி லலிதா சண்முகலிங்கம் ஞாபகார்த்தமாக நடத்தப்பட்ட உள்ளூர் ரீதியிலான வலைப்பந்து போட்டியில் அரியாலை கலைமகள் அணி முதலாவது இடத்தையும் அரியாலை. சனசமூக நிலைய அணி இரண்டாவது இடத்தையும் அரியாலை திருமகள் அணி மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன.

**அன்பு வாசகர்களே!**

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

**உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்**

# திருமகள் ச.ச.நிலையத்தின் கரப்பந்தாட்ட இறுதிப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

அரியாலை திருமகள் சனசமூக நிலையத்தின் 66ஆவது ஆண்டு நிறைவு விழாவினை முன்னிட்டு மகாலிங்கம் குடும்பத்தின் ஆதரவில் நடத்தப்பட்ட கரப்பந்தாட்டப் போட்டியின் (ஓவர்கேம்) இறுதிப் போட்டி இன்று அரியாலை திருமகள் சனசமூக நிலைய மைதானத்தில் இரவு 7 மணிக்கு நடைபெறும்.

இறுதிப் போட்டியில் சரஸ்வதி விளையாட்டுக் கழக அணியினை எதிர்த்து அம்பாள் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

● ● ● ● ● ● ● ● ● ●

(யாழ்ப்பாணம்)

அரியாலை திருமகள் சனசமூக நிலைய 66ஆவது ஆண்டு நிறைவு விழாவினை முன்னிட்டு அமரர் நல்லையா சதீஸ்குமார் ஞாபகார்த்தக் கரப்பந்தாட்ட இறுதிப் போட்டி (செட்டப்) இன்று அரியாலை திருமகள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இரவு 7 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டியில் பாரதி விளையாட்டுக் கழகத்தினை எதிர்த்து ஆவரங்கால் மத்தி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (க)

## ஜொலிஸ்ரார் வெற்றிக் கிண்ணம்-2018

# றெயின்போவை வீழ்த்தி அடுத்த சுற்றில் ஏபி அணி



(யாழ்ப்பாணம்)

ஜொலிஸ்ரார் வெற்றிக்கிண்ணத்திற்காக ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் வருடாந்தம் நடத்தும் 30 பந்துப் பரிமாற்றங்களை கொண்ட துடுப்பாட்டச் சுற்றுப் போட்டியின் முதலாவது சுற்றில் 9 ஆவது போட்டி கடந்த 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. நாணய சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய றெயின்போ அணி 28.5 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 167 ஓட்டங்களைப் பெற்றது.

சௌமிதரன்-46, யதுாஸன்-58, நிரோயன்-11, சூட்டி ஆட்டமிழக்காது-10 ஓட்டங்களைப் பெற்றுள்ளனர். பந்து வீச்சில் சிலோஜன்-02, விஷ்ணு-02, ராகுலன்-02, லிங்கநாதன்-03 இலக்குகளையும் கைப்பற்றினர்.

168 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய AB அணி 20.2 ஓவர்களில் 5 இலக்குகளை இழந்து 173 ஓட்டங்களை பெற்று றெயின்போ அணியை 5 இலக்குகளால் வெற்றி பெற்று 2ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றது. AB சார்பாக லிங்கநாதன்-31, சர்மா-51, ராகுலன்-21, உத்தமன்-23, ஆதித்தன் ஆட்டமிழக்காது 27 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் நிரோயன்-01, யதுாஸன்-03, சௌமிதரன்-01 இலக்கினையும் கைப்பற்றினர்.

இப் போட்டியின் மூலம் யாழ். சென்றல் விளையாட்டுக் கழகம் 9ஆவது ஆண்டாக நடத்தி வரும் யாழ். நகரில் சிறந்த கழக அணித் தெரிவு நிகழ்விற்கு (Rating) AB அணி 6.23 புள்ளிகளையும் றெயின்போ அணி 2.17 புள்ளிகளையும் பெற்றுள்ளனர். (க)

## செம்மணியில்...

யிட்டனர்.

அதனடிப்படையில் கடந்த சனிக்கிழமை சம்பவ இடத்திற்கு சென்ற யாழ்.நீதவான் நீதிமன்ற நீதவான் எஸ்.சதிஸ்தரன் விசாரணைகளை மேற்கொண்டதுடன் அகழ்வினை மேற்கொண்டு ஆய்வுகளை முன்னெடுக்க உத்தரவிட்டார்.

அதன்படி கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்.போதனா வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி யு.மயூரதன் தலைமையிலான குழுவினர் சம்பவ இடத்திற்கு சென்ற போது, யாழ்.பொலிஸ்நிலைய பெருங்குற்ற தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி சம்பவ இடத்திற்கு சமூகம் அளிக்காததால், அன்றைய தினம் அகழ்வு பணிகளை முன்னெடுக்காது அங்கிருந்து திரும்பியிருந்தனர்.

இந்நிலையில் நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமை காலை எலும்புக்கூட்டு எச்சங்கள் காணப்பட்ட பகுதிகளில் சட்டவைத்திய அதிகாரி உள்ளிட்ட குழுவினர்கள், தடயவியல் பொலிஸாா ஆகியோர் இணைந்து காலை 9 மணி முதல் மதியம் 12 மணி வரையில் அகழ்வு பணிகளில் ஈடுபட்டனர்.

எலும்புக்கூட்டு எச்சங்கள் இருந்ததாக அடையாளப்படுத்தப்பட்ட பகுதியின் மேற்பரப்பை இயந்திரத்தின் (பெக்கோ) உதவியுடன் அகழ்ந்து எலும்புக்கூட்டு எச்சங்கள் காணப்பட்ட பகுதிகளை சுற்றி மண்வெட்டி மற்றும் சிறு உபகரணங்களால் மண் அகழப்பட்டது.

அதன் போது நில மட்டத்தில் இருந்து 75 சென்ரி மீற்றர் (இரண்டரை அடி ) ஆழத்தில் எலும்புக்கூட்டு எச்சங்கள் மீட்கப்பட்டன. மண்டையோட்டின் பின் பகுதி, கால் மூட்டின் சில பகுதிகள் என சொற்ப அளவிலான எலும்புக்கூட்டு எச்சங்களே மீட்கப்பட்டன. இடுப்பு பகுதி, தாடை பகுதி, முள்ளந்தண்டு பகுதிகள் உள்ளிட்ட பெருமளவான பகுதிகள் மீட்கப்படவில்லை.

இதனால் மீட்கப்பட்ட எலும்பு கூட்டு எச்சங்கள் ஆணினதா? பெண்ணினதா ? என்பதனை கூட உடனடியாக அறிய முடியாத நிலை காணப்படுகின்றது. ஏனைய எலும்பு கூட்டு எச்சங்கள் முன்னதாக அகழ்ந்து செல்லப்பட்ட மண்ணுடன் சென்று இருக்கலாம். அல்லது உக்கி இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

இதேவேளை எலும்புக்கூட்டு எச்சங்கள் மீட்கப்பட்ட பகுதியில் மேலும் அகழ்வுகள் நடத்தப்பட்டன. 150 சென்ரி மீற்றர் (ஐந்தடி) வரையில் மண் அகழ்ந்து பரிசோதிக்கப்பட்டது. அதன்போது வேறு எச்சங்கள் மீட்கப்படவில்லை.மீட்கப்பட்ட எலும்பு கூட்டு எச்சங்கள் பாதுகாக்கப்பட்ட நிலையில் அங்கிருந்து எடுத்து செல்லப்பட்டன. அவை மருத்துவ ஆய்வுகளுக்கு உட்படுத்திய பின்னரே மேலதிக தகவல்களை தெரிவிக்க முடியும் என தெரிவிக்கப்பட்டது.

எலும்புக்கூட்டு எச்சங்கள் மீட்கப்பட்ட குறித்த பகுதி 1987, 1989ஆம் ஆண்டு காலப்பகுதியில் இந்திய இராணுவத்தின் பிரசன்னம் உள்ள இடமாக இருந்ததாகவும், அதன் பின்னரான கால பகுதிகளில் விடுதலைப்புலிகளின் கட்டுபாட்டில் இருந்து பின்னர் 1995 ஆம் ஆண்டு யாழ்.குடா நாட்டை இராணுவத்தினர் கைப்பற்றிய பின்னர் இராணுவ கட்டுப்பாட்டு பகுதியாக காணப்பட்டதாகவும், இராணுவ கட்டுபாட்டில் இருந்த கால பகுதியில எச்சங்கள் மீட்கப்பட்ட குறித்த பகுதி ஊடாக இராணுவத்தினரின் முன்னரங்க பாரிய மண் அரண் காணப்பட்டதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்திருந்தனர். (ம-9)

## குழு மோதலுக்கு...

ஒன்றுக்கு தயாராக வாள்கள், இரும்பு கம்பிகள் . பொல்லுகளுடன் "வடி" ரக வாகனத்தில் சென்றுள்ளனர்.

இளைஞர்கள் குழு மோதலுக்கு தயாராக எழுதுமட்டுவாழ் பகுதிக்கு வருகின்றனர் எனும் இரகசிய தகவல் கொடிகாமம் பொலிஸாருக்கு கிடைக்க பெற்றதை அடுத்து இளைஞர்களை மடக்கி பிடிக்க கொடிகாமம் பொலிஸார எழுதுமட்டுவாழ் பகுதியில் தயார் நிலையில் இருந்த போது, பொலிஸாரை கண்ட இளைஞர் குழு வாகனத்தில் மருதங்கேணி பகுதியூடாக தப்பி சென்றுள்ளனர்.

அவர்கள் தப்பிச் செல்லும் பாதையை பளை பொலிஸாருக்கு, கொடிகாமம் பொலிஸார் அறிவித்ததை அடுத்து, பளை பொலிஸார் மருதங்கேணியில் உள்ள பொலிஸ் காவலரணுக்கு அறிவித்துள்ளனர்.

அதனை அடுத்து மருதங்கேணி காவலரணில் தயார் நிலையில் இருந்த பளை பொலிஸார் இளைஞர்களின் வாகனத்தை மடக்கி பிடித்தனர்.

வாகனத்தில் இருந்த 13 இளைஞர்களையும் கைது செய்தனர். வாகனத்தில் இருந்து வாள்கள், இரும்பு கம்பிகள், பொல்லுகள் என்பவற்றையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட 13 இளைஞர்களையும் பளை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக பொலிஸார் கூறினர்.(ம-9)

## சிறுபான்மை இன...

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

தேசிய சமாதான சபையின் மாநாடு நேற்று முற்பகல் முன்னாள் ஜனாதிபதியின் தலைமையில் கொழும்பு பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இங்கு உரையாற்றிய முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா, நாட்டின் ஒரு இனத்திற்கு தமது உரிமைகள் கிடைக்காத காரணத்தினால், பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டன. 1983 ஆம் ஆண்டு கறுப்பு ஜூலை கலவரத்தில் தமிழர்கள் எரிக்கப்பட்டதை நேரில் பார்த்தேன்.

நாட்டில் வாழும் அனைத்து இனங்களின் உரிமைகளும் சட்டரீதியாக அரசியலமைப்பிற்கு வழங்கும் இயலுமை இருக்க வேண்டும் எனவும் முன்னாள் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். (ம)

## விஜயகலாவிடம்...

இந்த விசாரணைகள்ள மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் விடுதலைப் புலிகளின் மீள் உருவாக்கம் குறித்து விஜயகலா மகேஸ்வரன் கருத்து வெளியிட்டிருந்தமை தொடர்பிலேயே இந்த விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதேவேளை, குறித்த விடயம் தொடர்பில் வடமாகாண முதலமைச்சர் உள்ளிட்ட 25க்கும் மேற்பட்டவர்களிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ம)

## வானூர்தி திணைக்கள...

விமானத்தளத்திற்கான காணி முதலில் 1950-ம் ஆண்டு வானூர்தி இயக்கியல் திணைக்களத்தினால் கையேற்கப்பட்டது. மொத்தமாக 456 காணித் துண்டுகள் கையேற்கப்பட்டன.

அவற்றின் மொத்த விஸ்தீரணம் 349 ஏக்கர் 3 ரூட்ஸ் 35.9 பேர்சர்ஸ் (141.62ஹெக்டயர்கள்). அதனுடைய பூர்வாங்க வரைபட இலக்கம் 1579.

அதன் பின் 1986-ம் ஆண்டில் காணிகையேற்புச் சட்டத்தின் பிரிவு 2 இன் கீழ் ஏற்கெனவே கையகப்படுத்தப்பட்ட காணிகளையும் சேர்த்து மேலதிக காணிகளை பலாலி விமானத்தள விஸ்தரிப்புக்காக அவசரகாலச் சட்டத்தின் கீழ் பாதுகாப்பு அமைச்சு கையேற்பதாக அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டது.

குறித்த கையேற்பின் கீழ் அடையாளப் படுத்தப்பட்ட காணி 426 ஏக்கர் 00 ரூட் 32.3 பேர்ச்சர்ஸ் (172.4778 ஹெக்டயர்கள்) விஸ்தீரணம் கொண்டது. இந்தக் காணி முன்னர் குறிப்பிடப்பட்ட 349 ஏக்கர் 3 ரூட் 35.90 பேர்ச்சர்ஸ் காணியையும் அதனுள் அடக்கியிருந்தது.

1987-ம் ஆண்டில் மேலும் 646 ஏக்கர் 3 ரூட் 24.04 பேர்ச்சர்ஸ் காணி இராணுவத்தால் கையகப்படுத்துவதாக பிரிவு 38 (a) இன் கீழ் அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டது. பிரிவு 5 இன் கீழான அறிவித்தல் 1999ம் ஆண்டு பிரசுரிக்கப்பட்டது.

ஆகவே கையகப்படுத்த கோரப்பட்ட காணிகளின் மொத்த விஸ்தீரணம் 349 ஏக்கர் 3 ரூட்ஸ் 35.90 பேர்ச்சர்ஸ் + 646 ஏக்கர் 3 ரூட்ஸ் 24 பேர்ச்சர்ஸ் 996 ஏக்கர் 3 ரூட் 19.90 பேர்ச்சர்ஸ். இவற்றை விட மேலும் 6500 ஏக்கர் காணி மேலதிகமாக படையினரால் கையேற்கப்பட்டுள்ளன.

அவசரகாலச் சட்டத்தின் கீழ் கூட பாதுகாப்பு அமைச்சின் செயலாளரால் பலாலி விமானத்தள விஸ்தரிப்புக்காக மேலதிகக் காணி கையகப்படுத்த முடியாது.

ஏனென்றால் அதில் ஒருபகுதி வானூர்தி இயக்கியல் திணைக்களத்தினால் ஏற்கெனவே 1950-ல் கையேற்கப்பட்டு விட்டது. விமானத்தள விஸ்தரிப்புக்கான காணி வானூர்தி இயக்கியல் திணைக்களத்தினால் தான் கையகப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

இந்தப் பிரச்சினையை தீர்ப்பதற்காக மேற்படி பணிப்பாளருக்கு வடமாகாண முதலமைச்சர் அவர்கள் பின்வரும் நடவடிக்கைகளை எடுக்கலாம் என்று அறிவுரை வழங்கியுள்ளார்,

1.மேற்குறிப்பிட்ட 349 ஏக்கர் 3 ரூட் 35.9 பேர்ச்சர்ஸ் காணியை படையினர் உடனேயே வானூர்திகள் இயக்கியல் திணைக்களத்திற்குக் கையளிக்க வேண்டும்.

2.மேலதிகமாக அவசரகாலச் சட்டத்தின் கீழ் விமானத்தளம் அமைப்பதற்காகக் கையேற்கப்பட்ட காணிகளை உடனேயே பணிப்பாளரிடம் கையளிக்குமாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடம் கோர வேண்டியது அவசியம்.

3.குறித்த காணிகள் பணிப்பாளரிடம் கையளித்த பின் இந்திய அரசிடம் இருந்து பலாலி விமானத்தளத்தை அமைப்பதற்குத் தேவையான காணி எவ்வளவு என்று அறிந்து அதனைக் கைவசம் வைத்துக் கொண்டு மிகுதிக் காணிகளை காணிச் சொந்தக்காரரிடம் கையளிக்க வேண்டும்.

குறித்த 349 ஏக்கர் 3 ரூட் 35.9 பேர்ச்சர்ஸ் காணிக்கு மேலதிகமாக காணி ஏதும் தேவையாக இருப்பின் அதற்கான கையேற்பு நடவடிக்கைகளைப் புதிதாகத் தொடங்க வேண்டும்.

எனவே மூலக் காணி வானூர்தி இயக்கியல் திணைக்களத்திற்கு உரித்தாகி இருந்தபடியால் மேலதிகக் காணிகள் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கும் சட்ட உரித்து அந்தத் திணைக்களத்தையே சாரும் என்று பணிப்பாளருக்கு எடுத்துக் காட்டியுள்ளார்.

படையினர் தற்போது கையகப்படுத்தி வைத்திருக்கும் காணி சட்டத்திற்குப் புறம்பாக கையேற்கப்பட்டவையே என்று பணிப்பாளருக்குத் தெரியப்படுத்தியுள்ளார்.

அண்மையில் பிரதம மந்திரியின் செயலாளர் ச்மன் ஏக்கநாயக்க முதலமைச்சரை யாழ்ப்பாணத்தில் சந்தித்த போது குறித்த கடிதத்தில் குறிப்பிடப்பட்ட அநேக விடயங்கள் தமக்கு இதுவரை காலமும் தெரியாது இருந்தது என்பதையும்இப்பொழுது அதற்குரிய நடவடிக்கைகளை எடுப்பதாகவும் தெரிவித்துள்ளதாக அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

## 1990 இலக்க அவசர...

இலக்க அவசர நோயாளர் காவு வண்டிச் சேவைக்கு அழைப்பு விடுத்திருந்தனர்.

சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் தரித்து நிற்கும் தென்மராட்சி பிரதேசத்திற்கான நோயாளர் காவு வண்டி, நோயாளியை ஏற்றி வந்து சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்ப்பித்தது. (ம-9)

## எனது ஆட்சியில்...

கொழும்பில் நேற்று நடைபெற்ற வைபவம் ஒன்றின் பின்னர், ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

எனது ஆட்சிக்காலத்தில் ஊடக சுதந்திரம் இருக்கவில்லை என்றால், அது தற்போதைய ஜனாதிபதியும் அறிந்திருக்க வேண்டும். எனது ஆட்சிக்காலத்தில் வடக்கிற்கும் ஊடக சுதந்திரம் கிடைத்தது.

தற்போதைய அரசாங்கம் செய்யும் பணிகள் பற்றி மக்கள் நன்றாக உணர்ந்துள்ளனர். இதனை விட ஊடகங்கள் அவற்றை நன்கு அறிந்துள்ளன எனவும் மகிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார். (ம)

## இராணுவ முகாம்களை...

அண்மையில் பொலநறுவையில் இடம் பெற்ற தேசிய சிறுநீரக வைத்தியசாலையின் நிர்மாணப் பணிகளை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

வட மாகாணத்தில் உள்ள இராணுவ முகாம்களை அகற்றப்போவதாக பத்திரிகைகள் பிரசுரித்தாலும் அவ்வகையான எந்த தீர்மானமும் அரசு வெளியிடவில்லை என்பதை தெரிவிக்க விரும்புகிறேன். யுத்தம் நிறைவடைந்து 10 வருடங்கள் கடந்து விட்டது. தற்போது இலங்கையில் எந்தவித தீவிரவாத செயற்பாடுகளும் இடம்பெறுவதில்லை. நாம் தேசிய பாதுகாப்பை வலுப்படுத்தும் வகையில் முப்படைகளையும் வலுவூட்டி உள்ளோம். நவீன கருவிகள், தொழிநுட்ப அறிவு, பயிற்சி ஆகியவற்றை வழங்கியுள்ளோம்.

சிலர் இலங்கையின் பாதுகாப்பு தொடர்பில் கேள்வி எழுப்புகின்றனர். அவர்களை தேசிய பாதுகாப்பு தொடர்பிலும் முப்படைகளின் தற்போதைய நிலை தொடர்பாகவும் முப்படைத் தளபதிகளுடன் கலந்துரையாடுவதற்கு அழைப்பு விடுக்கிறேன். பொலநறுவை பிரதேச மக்களுக்கான அபிவிருத்தி பணிகளை மேற்கொள்ளக் கிடைத்தமையினையிட்டு பெரும் மகிழ்ச்சியடைகிறேன் என்றார். (ம)

சனி, ஞாயிறு
விடுமுறை நாள் வகுப்புக்கள்
Bridal Make-up,
Facial
ஒப்பனைக்கு உறுதுணையான சகல வகையான ஃபேஷியல்களுடன் ஐபுறோ திரெட்டிங் தனி அலகாக பயிற்றுவிக்கப்படும்
தலை,முக அலங்காரம் சாறி அணிதல் மருதாணி அலங்காரம் நக அலங்காரம் மலர்ச் செண்டுகள் வடிவமைத்தல் என ஒப்பனையின் சகல படிமுறைகளையும் முறையாகக் கற்றுக் கொள்ளலாம்
28.07.2018 சனி காலை 9.30
தூரிகை
யாழ் வீதி, நாவலர்மடம் நெல்லியடி
மத்திய கல்லூரி வீதி, நெல்லியடி
(ச-3340)

செவன
திகதி 2018/07/24
சீட்டிழுப்பு இலக்கம் 103
ஆங்கில எழுத்து A
வெல்லப்பட்ட இலக்கங்கள் 06 19 50 62
தேசிய லொத்தர் சபை

கொவிசெத
திகதி 2018.07.24
சீட்டிழுப்பு இலக்கம் 1830
ஆங்கில எழுத்து X
வெல்லப்பட்ட இலக்கங்கள் 24 47 53 61
தேசிய லொத்தர் சபை

நீரோகா
திகதி 2018/07/24
சீட்டிழுப்பு இலக்கம் 424
லக்கினம் கடகம்
வெற்றி இலக்கங்கள் 06 21 25 67 13
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2018/07/24
சீட்டிழுப்பு இலக்கம் 3709
ஆங்கில எழுத்து X
வெல்லப்பட்ட இலக்கங்கள் 6 9 6 9 9 1
தேசிய லொத்தர் சபை

**ஜனா டிஜிற்றல் பிறிண்டிங்**

## வேலையாட்கள் தேவை

**கிளிநொச்சி, யாழ்ப்பாணம்**

- வரவேற்பாளர்
- வெல்டிங் வேலை
- வடிவமைப்பாளர் (Photoshop, CorelDRAW)

(C-3350)

தொடர்புகளுக்கு:- 071 112 2004

கஸ்தூரியார் வீதி, கன்னாதிட்டி சந்தி, யாழ்ப்பாணம்.



# ICT

மாபெரும்

**இறுதிக் கருத்தரங்கு**

A/L 2018 அனைத்து பிரிவு மாணவர்களுக்குமானது

உமாகாந்தன் (BIT)

லவன்

(உதவி விரிவுரையாளர் யாழ்.பல்கலைக்கழகம்)

27 28 29 .07.2018

முக்கிய வினாத்தாள் வழங்கப்படும் (பரீட்சைக்குரிய)

077 017 5346

இடம் → யாழ் பெருமாள் கோவில் வீதி

(C-3348)



**கணினி திருத்தம்**

உங்கள் வீடுகளுக்கே வந்து கணினி லப்டொப்கள் திருத்தி தருகிறோம்

அழையுங்கள் 0779086737

GUNA BEST PC COMPUTER REPAIR

திருத்தம் விற்றல் வாங்குதல்

522 மானிப்பாய் வீதி ஓட்டுமடம் சந்தி யாழ்ப்பாணம்


## பெண்கள் பெற்று...

புத்தளம், அநுராதபுரம் மற்றும் பொலநறுவை ஆகிய மாவட்டங்களில் வரட்சியால் பாதிக்கப்பட்ட பெண்கள் பெற்றுக்கொண்ட கடன்களே இவ்வாறு இரத்து செய்யப்படவுள்ளன.

ஒரு இலட்சம் அல்லது அதற்கு குறைவான நுண்கடன்களைப் பெற்றுக்கொண்ட பெண்கள் இந்த திட்டத்திற்கு விண்ணப்பிக்க முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இரத்து செய்யப்படும் கடனின் மூலத் தொகையை அரசாங்கத்தின் திறைசேரி செலுத்துவதுடன், அதன் வட்டித்தொகையை நுண்கடன் நிதி நிறுவனங்கள் ஏற்றுக்கொள்ளும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ம)

## 20 மி...

பட்டுள்ளனர்.

குறித்த சந்தேக நபர்களின் படகும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த சந்தேக நபர்களிடம் இருந்து 5.7 கிலோ கிராம் நிறையுடைய தங்கம் கைப்பற்றப்பட்டுள்ளதாக கடற்படை ஊடக பேச்சாளர் தெரிவித்துள்ளார். (ம)

## காங்...

செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட மீனவர்கள் யாழ்ப்பாண மீன்பிடி ஆய்வாளர் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டு பின்னர் மல்லாகம் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ம-9)

# மரண அறிவித்தல்

## திருமதி சிவக்கொழுந்து அன்னலிங்கம்



மண்டைதீவு முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் சுவிஸை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவக்கொழுந்து அன்னலிங்கம் அவர்கள் நேற்று முன்தினம் (23.07.2018) திங்கட்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தரடியார் - மாணிக்கம் தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான மாரிமுத்தர் - மாரிமுத்து தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற மாரிமுத்தர் அன்னலிங்கம் அவர்களின் பாசமிகு துணைவியாரும், தெய்வீகலிங்கம், விஜயகுமாரி (சுவிஸ்), சற்குணலிங்கம் (டென்மார்க்), அற்புதலிங்கம் (சுவிஸ்), விக்னேஸ்வரன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், யோகராணி (சுவிஸ்), தவராசா (சுவிஸ்), யாழினி (டென்மார்க்), லதா (சுவிஸ்), யாழினி (சுவிஸ்), நிறைமதி (ஆசிரியை- யா/இணுவில் இந்துக்கல்லூரி) ஆகியோரது பாசமிகு மாமியாரும், காலஞ்சென்றவர்களான தருமரெத்தினம், அருமைநாயகம், கணேசமூர்த்தி, பாக்கியலட்சுமி, அன்னலட்சுமி, இராசலட்சுமி, மருக்கொழுந்து ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற நாகராணி அவர்களின் பாசமிகு பெரிய தாயாரும், தீபா -ஜனகன் (சுவிஸ்), சர்மிலன் (சுவிஸ்), சுபோதன்-அபிராமி (சுவிஸ்), றஜிந்தன் (சுவிஸ்), விஸ்ணுமாயா, காலஞ்சென்ற திவாகர் மற்றும் திவியா (சுவிஸ்), சஞ்சி (டென்மார்க்), சாருஜன் (டென்மார்க்), நிவேத (டென்மார்க்), மானஜா (சுவிஸ்), யதுர்ஷன் (சுவிஸ்), சானுஜா (சுவிஸ்), அக்ஷயா (சுவிஸ்), அபினா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், அகிரா (சுவிஸ்), அக்ஷாரா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அன்னலிங்கம் விக்னேஸ்வரன்
kirchlindach,
Strasse 9c, 3052
zollikofen, Schweiz.
+41763884944

தகவல் : அன்னலிங்கம் தெய்வீகலிங்கம்
இல.12, குளக்கரை லேன்,
பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.
0772117073

(சி-3347)


**A/L -2018 மாணவர்களுக்கான இறுதிக் கருத்தரங்கு (இலவசம்)**

இடம் : சதா பொன்ஸ் - அல்வாய்

அரசியல் : திரு.ம.புவனதாஸ் (27.07.2018) வெள்ளி காலை 9 மணிமுதல்

தமிழ் : திரு.இரா.இன்பதாஸ் M.A

1-ம் பகுதி : 28.07.2018 சனி காலை 9 - 12 வரை

2-ம் பகுதி : 29.07.2018 ஞாயிறு காலை 9 - 12 வரை

(C-3345)



**துரித தபால்கள் பொதிகள் சேவை**

எங்கும் இல்லாத மிகக் குறைந்த கட்டணத்தில் 11Kg க்கு மேற்பட்ட பொதிகளுக்கு

3-5 வேலை நாட்களில்

| | |
|---|---|
| UK | -550/= |
| Germany | -650/= |
| France | -700/= |
| Australia | -800/= |

திருமுருகன் கொம் நெற்

321, K.K.S வீதி, யாழ்ப்பாணம். (முட்டாஸ் கடை சந்திக்கு அருகாமையில்)

Hotline -0777554528

(4931)



**இறைச்சிக் கோழி விற்பனை**

புறொய்லர் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். சுத்தம் செய்யப்பட்டது 500/= மட்டும். கூடுதல் கொள்வனவுகளுக்கு விசேட விலைக்கழிவுகள் உண்டு.

U.S.A பாம்

குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.

தொ.பே: 077 868 9500

(5039)



**புதியதோர் தொழில் வாய்ப்பு**

எமது EDM.lk நிறுவனமானது வட மாகாணத்தில் புதிய கிளைகளை விஸ்தரிக்கவுள்ளது. அந்நிறுவனத்தினூடாக யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டத்தில் வசிக்கும் இளைஞர், யுவதிகளுக்கு முன்னுரிமையுடன் அலுவலக மற்றும் வெளிக்கள பதவிகள் பூர்த்தி செய்யப்படவுள்ளது.

தகைமை: 10, O/L, A/L, மேற்தகைமையுடைவர் நேர்முகத் தேர்வினூடாக தகுந்த பதவியினை பெற்றுக்கொள்ள முடியும்.

குறிப்பு: வட மாகாணத்தில் 36 புதிய கிளைகளுக்கு 136 பதவியாட்கள் மட்டும் தேவைப்படுகின்றனர்.

தொடர்புகளுக்கு: 0771263805, 0762121409



**வலம்புரி**

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603

021 567 1532



**எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது**

**வெளிநாடுகளுக்கான துரித கடிதங்கள் பொதிகள் சேவை**

20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை

- அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
- அருள்ஸ் பிறைவேற் லிமிட்டற் நிறுவனங்களின் இணை நிறுவனம்.

**அருள்**

சாவகச்சேரி: இல. 01 NDB வங்கிக் கட்டடம், தபாற் கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576

நெல்லியடி: இல. 01 பெற்றோல் செற் லேன் ,நெல்லியடி. 076 443 1576

கிளிநொச்சி: இல. 10, கரடிப்போக்கு, கிளிநொச்சி. (வாகன புகைப்பரிசோதனை நிலையம் அருகில்) 076 443 1576

(C-3333)



**CNR உள்நாடு, வெளிநாடுகளுக்கான தபால், பொதிகள் விநியோக சேவை**

- அதிவேக மற்றும் சிக்கன பொதிகள் சேவை
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- வீடு, அலுவலகங்களில் இருந்தவாறு அனுப்பும் வசதி
- அனுப்பும் பொதிகளுக்கான காப்புறுதி உத்தரவாதம்
- கடல் ஆகாய மார்க்க பெரிய சரக்குப் பரிமாற்ற சேவை

CNR World Wide Express
இல.401, மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு: 021 5674145, 077 2931062, 077 6655413

(C-3332)



**மாபெரும் விலைக்கழிவு!!!**

லங்கா வோல் ரைல்ஸ், லங்கா புளோரைல்ஸ்க்கு 32.5% வரை கழிவு வழங்கப்படும். லங்கா (Delux), றொசல் கொமொட், றோயல் செரமிக்ஸ் ரைல்ஸ் வகைகளுக்கும் விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.

(நிபந்தனைக்குட்பட்டது)

**நியூ கமல் செரமிக்ஸ்**

37, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே: 021 222 2085

(5062)



**விரைவு பொதிகள் சேவை**

**விசேட விலை குறைப்பு**

UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து-700 /=Kg

DELIVERY IN 3-5 DAYS

0768226240

- மானிப்பாய்
- யாழ்ப்பாணம்
- கிளிநொச்சி
- சாவகச்சேரி
- நெல்லியடி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை

V2 TRAVELs

(C-3389)



**வெளிநாடு-உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை**

WESTERN UNION 070 330 5500 WESTERN UNION

அண்ணா பொதிகள் சேவை

976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி

021 221 5656 யாழ்ப்பாணம் 077 888 9388

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.

3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்

வேலணை – அரியாலை – சங்கானை – சுன்னாகம்

கரணவாய் –மீசாலை–கிளிநொச்சி–கனகராயன்குளம்

முல்லைத்தீவு–மன்னார்–வவுனியா–திருகோணமலை

(C-3330)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.07.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.